151

கொங்குநாடும் சமணமு

கோவைகி

93
N53
112046

கொங்குநாடும் சமணமும்

கோவைகிழார்

Q3
N53

கோவை நிலையப் பதிப்பகம் லிமிட்.
கோயம்புத்தூர்
1953

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை, சென்னை—14

பொருளடக்கம்

	முன்னுரை	...	1
1.	கொங்கு நாடு	...	5
2.	சமண சமயம்	...	15
3.	வடநாட்டில் ஜைனம்	...	29
4.	தமிழ் நாட்டில் ஜைனம்	...	44
5.	கொங்கு நாட்டில் ஜைனம்	...	55
6.	கொங்குநாட்டில் சமணசமய நிலையங்கள்	...	71
7.	சமணசமயச் சுற்று ஆலயங்கள்	...	87
8.	தென்மேற்கு கொங்கில் சமணம்	...	98
9.	பின்னுரை	...	111

நூலின் அர்ப்பணப் பெரியார்

திரு. அபயச்சந்து விந்துராவன் தாஸ், கோவை

அர்ப்பணம்

கொங்குநாடும் சமணமும்

என்ற இந்த ஆராய்ச்சி நூல்

கோவை ஜைன சமயப் பெருமகனார்

அபயச்சந்து விந்துராவன் தாஸ்

அவர்களுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது.

அப்பெருமகனாரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

1. பண்டைய நாடு :—பரதகண்டத்தின் மேற்குக் கரையோரமாக சௌராஷ்டிரம் என்ற தேசத்தில் கத்தியவாடு என்ற ஒரு தீபகற்பம் இருக்கின்றது. அது மூன்றுபுறமும் கடல்நீரால் சூழப்பட்ட ஒரு புண்ணிய தேசம். அதில் கடல்கரையோரமாக துவாரகை, சோமநாதம் என்ற புனித ஸ்தலங்களும் இடையிலே கிர்நார், பாலிதானா என்ற ஜைனப் புனித மலைகளும் இருக்கின்றன. இந்தப் பிரதேசத்து ஜைனக் குடும்பங்கள் வாணிபத்தில் பேர்போனவர்கள். மிகத் தொலைவான இடங்களுக்கும் சென்று வாணிபம் செய்து திரவியம் சம்பாதிப்பவர்கள்.

2. குடும்பம் :—அப்படிப்பட்ட வியாபாரக் குடும்பங்களில் துறைமுகமாகிய போர்பந்தரில் ஒரு சிறந்த ஜைனக் குடும்பம் இருந்தது. இந்தப் போர்பந்தரில்தான் மகாத்மா

காந்தி அடிகளின் குடும்பமும் புகழ்பெற்று விளங்கியது. அந்த ஜைனக் குடும்பத்தில் ஸ்ரீ லக்ஷிமீசந்து ஹன்ஸ்ராஜ் என்ற ஒருவர் நூறு ஆண்டுகளுக்கு முந்தி இருந்தார். திரை கடல் ஓடியும் திரவியம்தேடு என்ற ஔவையார் வாக்கைக் கைப்பிடித்துக்கொண்டு வியாபாரத்தில் ஊக்கம் படைத்தவராய் லக்ஷிமீசந்து 1840-ல் கப்பல் ஏறி மேற்குக்கரை வழியாக ஆயிரக்கணக்கான மைல்கள் தெற்கே வந்து மேற்குத் துறைமுகம் ஒன்றில் இறங்கி நிலமார்க்கமாகக் கோயமுத்தூர் வந்து குடியேறினர். தன் சொந்த ஊக்கத்தினால் சிறிது காலத்திற்குள்ளாக ஒரு ஜவுளி வியாபாரத்தைத் தொடங்கிவைத்துக்கொண்டார். நாளுக்குநாள் வியாபாரம் பெருகிற்று. அவருக்குப்பின் அவருடைய குமாரர் விந்துராவன்தாஸ் அதனைத் தொடர்ந்து நடத்தினர். அவருக்கு ஐந்து குமாரர்கள் தோன்றினர்கள். அவர்கள் பெயர்கள் திரிபுவனதாஸ், கபூர்சந்து, கீம்சந்து, உத்தமசந்து, அபய்சந்து என்பன. அவர்களில் இளையவர்தான் இந்நூலுக்குப் புரவலராய் இருக்கும் அபய்சந்து விந்துராவன்தாஸ் என்பவர்.

3. வாணிபம்:—இந்த ஐந்து சகோதரர்களும் திரிபுவனதாஸ் விந்துராவன் சகோதரர்கள் என்ற விலாசத்தில் ஜவுளி வியாபாரமும் மற்றத் தொழில்களும் தொடர்ந்து நடத்திவருகிறார்கள். வியாபாரம் நாளுக்கு நாள் பெருகிக் கோவை ஜில்லாவில் பல இடங்களில் பரவியிருக்கின்றது. கோவையில் தலைமைக் காரியாலயமும், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாராபுரம், திருப்பூர், காங்கயம் முதலிய பல இடங்களில் உபகாரியாலயங்களும் ஏற்படுத்தப்பட்டு வியாபாரம் பல விதங்களிலும் பெருகி யிருக்கின்றது.

4. பொதுஜன சேவை:—செல்வம் படைத்ததின் பயன் பொதுஜன சேவை என்பதை அறிந்து அந்த சேவையில் இந்தக் குடும்பம் மிகுதியாக ஈடுபட்டிருக்கின்றது. அவற்றில் சிலவற்றைக் கூறுவோம்.

(i) ஜைனசமய கோட்பாடுகளில் சிறந்தது கொல்லாமையும், புலால் மறுத்தலுமாம். இதனைத் திருவள்ளுவர் வெகு அருமையாக,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்"

என்று கூறியுள்ளதை முன்னிட்டு கோவையில் அநேக ஆண்டுகளாகக் கோனியம்மன் கோயிலில் நடந்துவந்த முப்பலியிடும் வழக்கத்தை இவர்களது தீவிர முயற்சியால் பத்து ஆண்டுகளுக்கு முன் அறவே நிறுத்தப்பட்டது.

(ii) மேலும் நமது நாட்டிலே சிறந்த அறங்களுள் பசுக்காத்தல் என்றது ஒன்று. அந்த அறத்தை முன்னிட்டுக் கோசாலை ஒன்று ஏற்படுத்துவதற்காக 10,000 ரூபாய் (பத்தாயிரம்) நன்கொடை அளித்திருக்கிறார்கள். அதன் பலனாகத் தற்போது கோவைக்கருகாமையில் கோசாலை ஒன்று கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது.

(iii) மேலும் ஜைன சமய ஆராதனைக்காக ஒரு சமய நிலையம் ஏற்படுத்த வேண்டி கோயமுத்தூர் வைசியத் தெருவில் ஒரு லட்ச ரூபாய் செலவில் ஸ்ரீஸ்வேதாம்பர விமலநாத ஜைன ஆலயம் ஒன்றை நிறுவியிருக்கிறார்கள்.

(iv) மேலும் கோவையில் மேற்கே செட்டி வீதியில் சுமார் 40,000 ரூபாய் (நாற்பதினாயிரம்) செலவில் ஒரு பிரசவ ஆஸ்பத்திரி ஒன்று கட்டத் தீர்மானித்துச் சென்னை கனம் கவர்னர் அவர்களால் அஸ்திவாரக்கல்லும் நாட்டப்பட்டிருக்கிறது.

5. சமய சேவை :—பாலிதானா என்பது கத்தியவாரில் திவ்விய ஜைன ஸ்தலம். அங்கே யாத்திரை செய்து வழிபடுவது ஒரு சிறந்த புண்ணியச் செயல். அதனை அறிந்து சாதுக்களையும் தமது சமூகத்தினரில் சிறுவர் முதல் பெரியோர் வரை எல்லோரையும் அழைத்துச் சென்று வழிபாடு செய்வித்துக் கும்பாபிஷேகம், பிரதிஷ்டை முதலியவை

களைப் பெரும் செலவில் செய்து முடித்துப் புண்ணியம் பெற்று இருக்கிறார்கள்.

6. சமர்ப்பணம் :—இக்குடும்பத்தில் ஐந்து சகோதரர்களில் கடைசிச் சகோதரராகிய அபய்சந்து விந்துராவன் தாஸ் என்பவர் வியாபாரத்தில் அனுபவம், நேர்மை, விடா முயற்சி, நன்மதிப்பு இவைகளில் சிறந்து விளங்கிப் பொது நன்மையில் நன்னோக்கமும் பேரூக்கமும் கொண்டவர்களாய் இருக்கிறார்கள். வியாபாரிகள் மட்டுமே அன்றி மற்ற எல்லா மக்களிடத்தும் அன்பு நட்பு விசுவாசம் முதலியவைகளைக் கொண்டிருக்கிறார்கள். பொது ஜன சங்கங்களாகிய ஜீவஹிம்சை நிவாரண சங்கம், சிசு சம்ரட்சணைச் சங்கம், ரோட்டரி கழகம் முதலிய பல சங்கங்களிலும் அங்கம் வகித்துப் பொதுஜன ஊழியர்களோடு ஒற்றுமையாகப் பணி யாற்றி வருகிறார்கள். அப்படிப் பட்ட ஸ்ரீமான் பெயரில் இந்நூல் அர்ப்பணம் செய்யப் பட்டிருக்கின்றது.

முன்னுரை

கொங்கு நாட்டிலும் சமணர்கள் இருக்கிறார்களா என்று படித்தவர்களும் இக்காலத்தில் கேட்கக்கூடும். சமணர்கள் என்ற சொல்லைக் கேட்டவுடனே அப்பர் காலத்துப் பல்லவ அரசனைப் பற்றியும், சம்பந்தர் காலத்துப் பாண்டியனைப் பற்றியும் நினைவு வரும். அந்தச் சைவ சமயாசிரியர்கள் ஏற்றுக்கொண்ட பிரசாரங்களுக்குப் பிறகு தமிழ் நாட்டில் சமணம் இருந்திருக்க முடியாதென்று சாதாரண மக்கள் எண்ணுவார்கள். ஆனால் அவர்கள் காலத்திற்குப் பின்னர் நான்கு, ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பின் பவணந்தி முனிவர் என்ற சமண முனிவர் 'நன்னூல்' என்ற சிறந்த இலக்கணத்தை இயற்றினார் என்றால், சமண சமயம் அப்போதும் நிலைத்திருந்தது என்று அறியவேண்டாமா? மேலும், இன்றைக்கு இரண்டு நூற்றாண்டுகள் அளவில்கூட கொங்கு நாட்டைப்பற்றிச் சிறந்த வரலாற்றுக் குறிப்புக்களைக் கூறிக் கார்மேகக் கவிஞர் என்ற சமணப் புலவர் கொங்கு மண்டல சதகம் என்ற நூலை இயற்றினார் என்றால், கொங்கு மண்டலத்திலும்கூட சமண சமயம் அழியாமல் இருக்கின்றது என்று உறுதியாகக் கூறலாம் அல்லவா? சமணப் புலவர்கள் மட்டுமேயன்றி, சமண நிலையங்களும் கூட கொங்குநாட்டில் இருக்கின்றன. அவைகளைப் பாதுகாத்துக்கொண்டு சில சமணக் குடும்பங்களும் வாழ்ந்துவருகின்றன. இதனைப் பொதுமக்கள் அறிய மாட்டார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன் விஜய மங்கலத்திலிருந்து ஒரு சமண அர்ச்சகர் என்னிடம் வந்தார். அவர் தன்

னைப்பற்றி அறிவித்த பிறகுதான், அவர் சமணர் என்ற செய்தியை அறிந்தேன். அவர் விஜய மங்கலத்து நெட்டைக் கோபுரத்துக்கோயில் அர்ச்சகரென்றும், அக் கோயிலினுடைய மானியச்சொத்துக்களை ஜில்லா அதிகாரிகள் ஏலம் போடுவதற்குத் தகவல் அனுப்பியிருக்கிறார்களென்றும், அதற்காக என்ன செய்யவேண்டும் என்றும் என்னைக் கேட்டார். அதிகாரிகள் ஏலம் போடுவதற்குக் காரணம் இந்து அறநிலையப் பாதுகாப்புச் சங்கத்தார் அக் கோயிலுக்கு வரிவிதித்ததும், அவ்வரியைக் கேட்ட பிறகும் கட்டாததுமே காரணம் எனத் தெரிவித்தார். சமணக் கோயில்கள் இந்துமதச் சட்டத்தின் வரம்புக்குள் வருவதில்லை என்ற செய்தி ஜில்லா அதிகாரிகளுக்கும் தெரியவில்லை. வரிவிதித்த சங்கத்தார்களுக்கும் தெரியவில்லை. அர்ச்சகரும் அறியாமலிருந்தார். அவ்விலக்குச்செய்தியைக் கண்டு சமணக்கோயில் சொத்துக்களை இந்துமதச் சட்டப்படி வரிவிதிக்கவோ, ஜப்தி செய்யவோ, ஏலம்போடவோ எவருக்கும் அதிகாரமில்லையென்று ஒரு மனு எழுதிக் கொடுத்தேன். அப்பொழுதுதான் அதிகாரிகள் கண் திறந்து பார்த்தார்கள். வரியைத் தள்ளிவிட்டார்கள். கோயில் சொத்துக்களும் பிழைத்தன.

இந்த செய்கை நடந்ததற்குக் காரணம் என்ன? பொது மக்களுக்கு நெட்டைக் கோபுரக் கோயிலுக்கும், மற்ற இந்து மதக் கோயிலுக்கும் உள்ள வேறுபாடு தெரியாது. சமணத்திற்கும், சைவத்திற்கும் ஏதாவது வேறுபாடு உண்டா என்றும் தெரியாது. பொதுமக்களைப் போலவே கீழ்த்தர அதிகாரிகளும் இவ்வேறுபாட்டை அறியமாட்டார்கள். ஆகவேதான் பிசகும் ஏற்பட்டது. இன்றைக்கும் நாட்டுப்புறத்து மக்கள் எல்லாக் கோயில்களையும் ஒன்றாகவே பாவிக்கிறார்கள். ஒருவிதத்தில் நாட்

டின் ஒற்றுமைக்கு அக்கருத்து நன்மைதான். சரித்திரம் வாசித்த அறிஞர்களும்கூட கொங்கு நாட்டில் சமணம் உண்டா என்று கேட்பார்கள். அறிவுப் பெருக்கத்திற்கு நாட்டுச் சரித்திர வரலாறு இன்றி அமையாதது. ஆகவே கொங்கு நாட்டில் சமணம் இருந்த நிலையைக் கூறுவதற்காகவே இச்சிறு நூல் எழுதப்படுகின்றது.

பல ஆண்டுகளின் முன் பெங்களூரில் வெளிவரும் ஓர் ஆங்கில ஆராய்ச்சிச் சஞ்சிகையில் (Mythic Society Journal) "கொங்கு நாட்டில் சமணம்" என்ற ஒரு கட்டுரை எழுதினேன். அண்மையிலே விருதுநகர்த் 'தமிழ்த் தென்றல்'லுக்குக் "கல்லும் பேசுகின்றது" என்ற தலைப்பில், "எங்கள் நாட்டில் சமணர்கள் இருந்தார்களா?" என்ற ஒரு கேள்வி எழுப்பி ஒரு கட்டுரை எழுதியிருக்கின்றேன். இவைகளே அன்றிச் சமணத்தைப் பற்றிப் பல சிறுசிறு கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. அவைகளில் ஒன்று "திருமூர்த்தி" என்ற தலைப்புக் கொண்ட ஒரு கட்டுரை. அக்கட்டுரையை வாசித்த உயர்திரு. பேராசிரியர் அ. சக்கரவர்த்தி நயினாரும், சென்னை ஜீவஹிம்ஸ நிவாரண சங்கத்துச் செயலாளர் - திரு. ஸ்ரீபால் அவர்களும் மிகவும் மகிழ்ந்து சமணத்தைப்பற்றி ஆராய்ச்சிகள் முழுவதும் தொகுத்து ஒரு தனி நூல் எழுதும்படி ஏவினார்கள். அந்த ஏவலை முன்னிட்டுக் கொங்கு நாட்டிலுள்ள சில சமண சின்னங்களைப் புகைப்படமும் பிடித்தேன். நாளதுவரை தெரிந்தவற்றை ஒன்றுசேர்த்து ஒரு நூலாகத் தொகுத்துள்ளேன். இந்நூல் பொதுமக்களுக்குப் பல செய்திகளையும் அறிவுறுத்தும் என்று எண்ணி இதனை வெளியிடுகின்றேன்.

கொங்குநாடும் சமணமும்

அதிகாரம்—1

கொங்கு நாடு

தமிழ்மொழி வழங்கும் நாடுகள் தென் இந்தியாவும் ஈழநாடும் ஆகும். தென் இந்தியாவிலே வடவேங்கடம் முதல் தென்குமரி மட்டும் தமிழ் வழங்கும் நிலப்பரப்பாக முன்னையோர் எழுதியுள்ளார்கள். இப்பரப்பிற்கு மேலண்டையும், கீழண்டையும் கடலே எல்லையாகக் கொள்ளப்பட்டது. சங்கநூல்கள் எழுதப்பட்ட காலத்தில் இந்த நான்கு எல்லைகளுக்கு உட்பட்ட நிலப்பரப்பு தமிழகமாகக் கருதப்பட்டபோதிலும் பின்னாளிலே இவைகளிலும் சில பகுதிகள் தமிழ்மொழியை விட்டு நீங்கின. வடக்கே திருவேங்கடத்தைச் சுற்றி உள்ள ஒரு பெரும் பகுதி வடுகுமொழியை ஏற்றுக்கொண்டது. மலைநாட்டின் பெரும் பகுதி மலையாள மொழியை ஏற்றுக்கொண்டது. ஆகவே எஞ்சியுள்ள நிலப்பரப்பானது தற்போது தமிழ் (ஜில்லா) வட்டங்கள் பதினொன்றும், தென் திருவிதாங்கூரில் நாஞ்சில் நாடும், செங்கோட்டை ஆரிய நாடும், மூவாற்றுத் தேவிக்குளமும், கொச்சிச் சித்தூர்ப் பகுதியும் சேர்ந்த பகுதிகளே ஆகும். சைவ வைணவ மறுமலர்ச்சி ஏற்பட்ட காலத்தில், அதாவது பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ்ப் பேசும் நிலப்பரப்பைப் பல நாடுகளாகப் பிரித்து அவைகளுக்கு

வெவ்வேறு பெயர்களைக் கொடுத்து வழங்கி வந்தார்கள். சங்கத்தார் நாள்களில் மூவேந்தர்கள் ஆண்டு வந்த எல்லைப் பரப்புக்களைக் கொண்டு, சேர, சோழ, பாண்டிய நாடுகள் என்று வழங்கினார்கள். பிறகு பல்லவர்கள் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு சில நூற்றாண்டுகள்வரை ஆண்டகாலத்தில் அவர்கள் ஆண்ட பகுதி தொண்டை நாடு என்று வழங்கப்பெற்றது. மேற்கே மலைநாட்டில், மலைகளுக்கு அப்பாற்பட்ட நீளி யான கடற்கரைப் பகுதியில் மலையாள மொழி வழங்கத் தொடங்கவே எஞ்சியிருந்த தமிழ்ப்பகுதி மலைத் தொடர் களுக்குக் கிழண்டை தனித்து நின்று தமிழ் நாட்டோடு இணைந்தவகையில் அது கொங்குநாடு என்ற சிறப்புப் பெயரால் வழங்கத் தொடங்கியது. இனித் தொண்டை நாட்டிற்கும், சோழ நாட்டிற்கும் இடையில் இருந்த பகுதி நடுநாடு என்ற பெயரில் வழங்கிவந்தது. இவ்வா ருகத் தமிழ்ப்பேசும் நாடுகள் பாண்டிநாடு, சோழநாடு, நடுநாடு, தொண்டைநாடு, கொங்குநாடு என்ற ஐந்து நாடு களோடு மலைநாட்டு நாஞ்சில் நாடும் சேர்ந்து ஆறு நாடு கள் ஆயின. கடற்கு அப்பால் உள்ள ஈழ நாட்டையும் சேர்த்தினல் தமிழ்நாடுகள் ஏழு ஆகின்றன. இந்தப் பாகு பாடு திருமுறைகளிலும், வைணவப் பிரபந்தங்களிலும் கூறப்பட்டுள்ளன. ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தியே இவ் விதப் பிரிவினை ஏற்பட்டிருப்பதை நாம் அறிகின்றோம்.

தமிழ்நாடு, இவ்வாருக ஏழு பிரிவுகளைக் கொண் டிருக்கையில், பின்னர் ஆண்டுவந்த சோழ, பாண்டி யர்கள் இப்பிரிவுகளை மாற்றியும், புதுப் பெயர்களைக் கொடுத்தும் வந்திருக்கிறார்கள். அதுபோலவே, விஜய நகரத்துக் கருநாடக மன்னர்களும் வெவ்வேறு பெயர் களைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பின்னல்

வந்த முசுலிம் தலைவர்களாகிய கருநாடக நவாப்புகள் தங்கள் விருப்பத்தின்படி பிரிவினைகளைச் செய்து வெவ் வேறு பெயர்களையும் வைத்து வழங்கினார்கள்.

பிறகு வந்த ஆங்கிலர்களோ தங்கள் அரசியல் சௌகரியங்களுக்கேற்றப்படி ஜில்லாக்கள் என்ற பெயர் களில் பிரிவினை செய்து அவைகளுக்கேற்ற பெயர்களும் தந்தார்கள். அந்த முறைதான் இன்றைக்கும் வழங்கி வருகிறது. ஆனால், சைவ வைணவ மறுமலர்ச்சிக் காலத் தில் ஏற்பட்ட பிரிவினைகளே பொருத்தமான பிரிவினை கள் என்று அறியவேண்டும். அவைகள் இப்பொழுதும் மறைந்து போகவில்லை.

அக்காலத்தில் மண்டலம், கோட்டம், கூற்றம், நாடு, பற்று, ஊர் என்ற பிரிவினைப் பெயர்கள் வழங்கி வந்தன. உட்பிரிவுகளான கோட்டம், நாடு என்பவை கள் இன்னும் வழக்கத்திலிருக்கின்றன. அவைகளின் பெயர்களும் மறையவில்லை. தொண்டை மண்டலம் இரு பத்து நான்கு கோட்டங்களாகவும், கொங்கு மண்டலம் 24 உள்நாடுகளாகவும் பிரிவினை செய்யப்பட்டிருந்தது. தற்போதும் அவைகள் வழங்கிவருகின்றன.

இக்கொங்கு மண்டலத்தின் பரப்பை அறிந்து கொள்வதற்குப் பலவித சான்றுகள் நமக்குக் கிடைத்திருக் கின்றன. பண்டைய புலவர்கள் பாடியிருக்கும்படி யான தனிப்பாடல்கள் மண்டலங்களின் எல்லைகளைக் குறிக்கின்றன. நாட்டுப் பெரிய மக்களான பட்டக்காரர் களிடமிருக்கும் கையேடுகள் நாட்டின் எல்லையைப் பற்றியும், உட் பிரிவுகளைப் பற்றியும், அவற்றில் உள்ள ஊர்களைப் பற்றியும் குறிக்கின்றன. நாட்டுச் சரித நூலாகிய கொங்கு மண்டல சதகம் நாட்டுப் பரப்பைக் குறிக்கும் பல செய்திகளைக் கூறுகின்றது. குன்றுடை

யாக் கவுண்டன் கதை கூறும் அண்ணன்மார் அம்மானை என்ற நாட்டுப் பாடல் நாட்டின் பரவலைக் கூறுகின்றது. கோயில்களில் உள்ள கல்வெட்டுக்கள் பரப்பைப்பற்றியும், உள்நாட்டுப் பேர்களைப் பற்றியும், அவைகளில் உள்ள ஊர்களைப்பற்றியும் விவரமாகக் கூறுகின்றன. திருமுறைகளிலே சிறப்பாகத் தேவாரங்களில் கொங்கு நாட்டுப் பாடல்பெற்ற தலங்களும், வைப்புத் தலங்களும் குறிக்கப்பட்டுள்ளன. அவைகளிலே திருச்செங்கோடு, பவானி, கொடுமுடி, கருவூர், வெஞ்சமாக்கூடலூர், திருமுருகன்பூண்டி, அவிநாசி என்ற ஏழு பாடல்பெற்ற தலங்களும், பேரூர், பெரியபாளையம் (குரக்குத்தளி), சேவூர், ஏமூர், தோமூர் முதலிய வைப்புத்தலங்களும், மொக்கணி, கஞ்சப்பள்ளி முதலிய திருவாசகத் தலங்களும், களந்தை என்ற திருவிசைப்பாத் தலமும் இருக்கக் காண்கிறோம். மேலும் திருத்தொண்டர் புராணத்தில், மூவர் பெருமக்கள், கொங்குநாடு புகுந்த வரலாற்றைக் கூறும்போதெல்லாம், 'அணைந்தார் கொங்கு', 'புகுந்தார் கொங்கு', 'கடந்தார் கொங்கு' என்று கூறுகிற இடங்கள் எல்லாம் நாட்டுப்பரப்புக் கூறும் சான்றுகளாகக் கொள்ளலாம். மற்றும், ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய அருணகிரிநாதர் திருப்புகழ்களை அருளிச்செய்தகாலத்தில், கொங்குநாட்டுத் திருப்பதிகளுக்குத் தனிவரிசை கொடுத்துப் பாடி அமைத்திருக்கின்றார். இவைகளை யெல்லாம் ஆராய்ந்துபார்க்கையில், கொங்குநாட்டின் நிலப்பரப்பை இன்னதுதான் என்று உறுதியுடன் கூறமுடியும்.

இனிக் கொங்கு நாட்டின் எல்லையைக் கூறும் தனிப் பாடலை இங்கே எழுதுவோம்.

வடக்குத் தலைமலையாம் வைகாவூர் தெற்கு
குடக்குவெள் ளிப்பொருப்புக் குன்று—கிழக்கு
கழித்தண் டலைசூழும் காவிரிசூழ் நாடா
குழித்தண் டலையளவும் கொங்கு.

இந்தப் பாடலோடு மற்றச் சான்றுகளையும் சேர்த்து எழுதினால் கொங்கு நாட்டின் எல்லை முழுவதும் நன்கு அறிவோம். வடக்கு எல்லையானது மைசூர் பீடபூமிக்கும், கோவை, சேலம் என்பவைகளுக்கும் இடையில் உள்ள மலைத்தொடர்களாகிய தலைமலை, பிளிகிரி ரங்கன் மலை, மாதேசுரன் மலை, தோப்பூர் மலை என்ற மலைத்தொடர் களாகும். கிழக்கெல்லை சேலத்திற்கும், ஆர்க்காட்டிற்கும் இடையில் உள்ள மலைகளாகிய சேர்வராயன் மலை, கல்ராயன்மலை, பச்சைமலை, கொல்லிமலை என்ற மலைத் தொடர்கள் ஆகும். தெற்கெல்லையோ, பழனி தாலூகா விற்கும், வைகை ஆற்றுப் பள்ளத்தாக்குக்கும் இடையில் உள்ள வராகமலை என்ற கோடைக்கானல் மலைத் தொடராகும். இனி கொங்கு நாட்டின் மேற்கெல்லையோ தமிழ்நாட்டிற்கும், மலையாளத்திற்கும் இடையில் உள்ள ஆனைமலை, வெள்ளிமலை, நீலகிரி என்ற மேற்குத் தொடர்ச்சி மலைகளாகும். இவ்வாறு நாற்புறமும் மலைகளால் சூழப்பட்ட சமநிலம்தான் கொங்கு நாடு.

மேலே கூறிய சமநிலப்பரப்பைப் படமாக வரைந்து பார்த்தால், அது ஒரு அகல் விளக்கைப் போன்ற வடிவம் கொண்டதாக விளங்கும். அகல் விளக்கு நாற்புறமும் விளிம்புகொண்டதாய், திரி எரியும் இடத்தில் பள்ளங் கொண்டதாய் இருக்கும். அதுபோலவே கொங்கு நாடும் நாற்புறங்களிலும் மலைகளால் சூழப்பட்டுத் தென் கிழக்கு மூலையில், விளக்கின் மூக்குபோலப் பள்ளமான

வெட்டவெளி கொண்டுள்ளது. இப்பள்ளத் தாக்கின் வழியாக நாட்டு மழைநீர், ஊற்றுவடி நீர் முதலியவைக ளெல்லாம் சிற்ருறுகளாக வழிந்து ஓடி இடையே சேர்ந்து காவேரி என்ற பேராருகித் தென்கிழக்காகப் பள்ள நிலத்தே ஓடி மூவேந்தர்க்கும் எல்லையாக அமைந் திருக்கும் செல்லியாண்டி அம்மன் கோயிலுக்கு அருகே வழிசெய்துகொண்டு சோழநாடு புகுகின்றது. அதனை விவரிக்கத்தான், 'குழித்தண்டலை அளவும் கொங்கு' என்று தனிப்பாடல் கூறுகின்றது. இந்தப் பரப்பைக் காட்டுவதற்கு நாட்டுப் படம் வரைந்தால் ஐந்துகோண வடிவாகக் கொங்கு நாடு தோற்றம் அளிக்கும்.

இனி, இப்பரப்புக்குள் அடங்கியிருக்கும் தற்காலப் பிரிவுப் பெயர்களைக் கூறினுல் விளக்கமாக இருக்கும். ஆதலால் அப்பெயர்களையும் இங்கே குறிப்போம். கோவை வட்டத்தில் கொள்ளேகாலம் நீங்கலாக, ஏனைய ஒன்பது தாலூக்காக்களும், சேலம் ஜில்லாவில் ஓமலூர், திருச்செங்கோடு, சேலம், இராசிபுரம், நாமக்கல் தாலுக்காக்களும், திருச்சி ஜில்லாவில் கரூர், குளித்தலை மேற்பகுதியும், மதுரை ஜில்லாவில் பழனி யும், திண்டுக்கல் வடப்பகுதியும் கொங்கு நாட்டில் அடங்கி உள்ளன. இவையேயன்றி நாற்புறங்களிலு முள்ள மலைச்சரிவுகளும் இதில் அடங்கும். நீலகிரிச் சரிவுகள், தலைமலைச் சரிவுகள், கொல்லிமலைச் சரிவுகள் கொங்கு நாட்டில் அடங்குவன என்க. உதாரணமாக, நீலகிரிச் சரிவில் உள்ள குன்னூர், கோத்தகிரி முதலிய வைகளும், கொல்லிமலைச் சரிவில் உள்ள அறப்பளீசுரர் கோயில், அதனைச்சுற்றிலும் மலைவகுப்பார் வாழும் ஊர்கள் முதலியனவெல்லாம் கொங்குநாட்டிற் சேர்ந் தவைகளே.

இனி கொங்கு நாடு என்பது ஒரு தனித்த பண்பாடு கொண்ட நாடு என்று அறியவேண்டும். பண்டைக் காலம் முதல் கொண்டே இந்நாடு ஒருதனி நாடாகவே கருதப்பெற்று வருகின்றது. ஆனால் இக்காலத்தில் சில ஆராய்ச்சியாளர்கள் அது தனி நாடாக இருக்கவில்லை யென்று கருதுகிறார்கள். அவ்வாறு கருதுவது சான்று களுக்கு மாறாகும். கடைச் சங்கத்துப் புலவர்கள் கொங்கு நாட்டைத் தனி நாடாக எடுத்து ஆண்டிருக் கின்றார்கள். புறநானூறு "கொங்கு புறம் பெற்ற கொற்ற வேந்தே" என்று நாட்டையும், "கொங்கர் குடகடல் ஓட்டிய ஞான்று" என நாட்டு மக்களையும் கூறுவதால் அந்நாடும் அந்நாட்டு மக்களும் பிற வற்றிலிருந்து பிரிக்கப்பட்டார்கள் என்று அறிய வேண்டும். மேலும் சிலப்பதிகாரக் கதை நடந்தநாளில் மும்மண்டலங்களோடு கொங்குமண்டலம் என்ற ஒரு மண்டலம் இருந்ததாகவும், அம்மண்டலத்து அரசர் பெயர் கொங்கு இளங்கோசர் என்றவராகவும் அந்நூல் கூறுகிறது. சேரன் பத்தினிக் கடவுளுக்கு ஓர் ஆலயம் அமைத்து விழா ஏற்படுத்தியதைக் கண்டு பாண்டியர், சோழர், ஈழர் முதலிய மன்னர்களும் பத்தினிக் கடவுளுக்கு விழா கொண்டாடினதுபோலக் கொங்கு இளங்கோசரும் விழாகொண்டாடினாராம். ஆகவே, அக் காலத்திலும் சேரநாட்டிலிருந்து கொங்குநாடு தனியே பிரிக்கப்பட்டு இருந்ததென்று அறியலாம். பின்னால் கங்க அரசர்கள் ஆண்ட காலத்திலும் கொங்கு நாடு தலைக் காட்டைத் தலைநகராகக் கொண்டிருந்ததாகக் 'கொங்கு தேச ராஜாக்கள்' என்ற நூல் கூறுகிறது. அதற்கும் பின் னால் கொங்கு சோழர்கள் என்ற ஒரு வம்ச பரம்பரை மூன்று நூற்றாண்டுகள்வரை தனி அரசு செய்துகொண்டு

வந்தது. இந்தச் செய்திகள் எல்லாம் நன்கு கவனித்துப் பார்க்கும் அளவில் அரசியல் துறையிலும், கொங்கு நாடு ஒரு தனி நாடாக இருந்ததென்று அறியலாம்.

மேலும் கொங்கு நாட்டு மக்களின் பழக்க வழக்கங்கள், நடை உடை பாவனைகள், மொழியின் உச்சரிப்புக்கள் முதலியவைகளைக் கூர்ந்து ஆராய்ந்து பார்க்கும் போதும் கொங்குநாட்டு மக்கள் ஒரு தனித்த நாட்டார்கள் என்று ஐயமின்றிக் கூறமுடியும். இல்லறச் சடங்குகள், திருமணச்சடங்குகள், இறுதிச்சடங்குகள் முதலியவைகளிலே, கொங்கு நாட்டுப் பழக்கங்கள் பிறநாடுகளிலிருந்தும் சிறிது வேறுபாடு கொண்டிருக்கக் காணலாம். சிறப்பாக உடை வகை, அணிவகை இவைகளில் மிக்க வேறுபாடு உண்டு. இந்த வகையிலும் கொங்கு நாடு ஒரு தனித்த பண்பாட்டை உடையது எனக் கூறலாம்.

இனிச் சமூகக் கட்டுப்பாட்டிலும் வேறுபாடு காணக்கூடும். குடும்பம், குடும்பத் தலைமை, ஊர், ஊராண்மைத்தனம், நாடு, நாட்டாண்மைத்தனம் இவைகள் ஒன்றின்மேல் ஒன்ருக உயர்ந்து செல்வதும், கீழ்இருப்பவர்கள் மேல்இருப்பவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதும், பிசகு நேரிட்டால் தண்டம் இடுவதும், இந்நாட்டுப் பெரு வழக்காக இருந்து வருகிறது. குடும்பத் தலைவன் எஜமானனென்றும், ஊராண்மைத்தனம், பெரியதனக்கார னென்றும், நாட்டு ஆண்மைத்தனம், பட்டக்கார னென்றும் வெவ்வேறு பெயர்களால் நடைபெற்று வருவதை அறியலாம். சமூக நடவடிக்கைகளில் பட்டக்காரர்களுக்கு அளவு கடந்த செல்வாக்கும், அதிகாரமும் உண்டு என்று அறியவேண்டும். சமூகத் திட்டங்கள் ஏனைய நாடுகளில் சீர்குலைந்துபோயும்

கொங்குநாட்டில் குலையாமல் இருக்கின்றன என்று அறியலாம்.

கொங்குநாடு நாற்புறமும் மலை அரண்களால் சூழப்பட்டு நடுவில் சமநிலமாக இருக்கும் அமைப்பைப் பெற்றிருக்கிறதென்று மேலே கூறப்பட்டது. இப்படிப்பட்ட நிலப்பரப்பு இயற்கையாகவே செழிப்பாக இருக்க வேண்டும். ஆனால் இங்கே பெய்யும் மழையானது 25 முதல் 30 அங்குலம் வரை குறைந்த அளவில் பெய்வதால் சேர, சோழ, நாடுகளைப்போல் நிலமோ மிகுந்த பலனைத் தருவதில்லை. ஆனாலும் மக்களின் முயற்சியினால் ஒருபடி அதிகமாகவே பலன் கிடைக்கின்றது. ஆற்றோரங்களிலும் பள்ளத்தாக்குகளிலும், ஒருவாறாக நன்செய் நிலங்கள் இருக்கின்றன. ஆனால் மிகுதியாகப் பலன் அளிப்பதோ, புன்செய் நிலத்தில் உள்ள கரிசல் மண்தான். இதில் பருத்தி விளைந்து பஞ்சாலைகளுக்கு வேண்டிய முதல் ஈடு தருகின்றது. கொங்குநாடு செழிப்புற்றுத் தற்போது செல்வாக்கு அடைந்திருக்கிறதென்றால் பருத்திப் பயிரினால்தான்.

மேலும் சமநிலமாகக் காணும் இந்த நிலப்பரப்பு பல சிற்றாறுகள் ஓடும் பள்ளத்தாக்குகளாவும் இருக்கின்றது.

இடையிடையே 500-முதல், 1500-வரை உயர்ந்துள்ள பல தனிக்குன்றுகள் இருக்கின்றன. இக் குன்றுகள் நாட்டிற்குப் பாதுகாப்பு அரண்கள் போல அங்கங்கே தலை நிமிர்ந்து நிற்கின்றன. அக்குன்றுகளின் பேரில் தவறாமல் ஒருசிறு ஆலயமாவது இருக்கும். அவ்வாலயங்களில் பெரும்பாலும் குறிஞ்சித் தெய்வமாகிய முருகக் கடவுள் எழுந்தருளி இருக்கின்றார். முருகக் கடவுள்மீது கொங்குநாட்டு மக்களுக்கு மிகுந்த அன்பு.

ஆண்டு முழுவதும் அம்மலைகளுக்கு மக்கள் சென்று வழிபாடு இயற்றுவது மிகுதி. அவ்வகையான அமைப் பைக்கொண்டது கொங்கு நாடு.

இத்தகைய நாட்டில் சமணர்களுடைய ஆதிக்கம் ஒருகாலத்தில் சிறப்பாக இருந்தது. அதன் சின்னங்கள் இக்காலத்திலும் காணலாம். நாடுகளில் பூந்துறை நாடு, குறும்புநாடு, காவடிக்கா நாடு, நல்லுறுக்கா நாடு, வையா ஊர் நாடு இவைகளில் சமணர்களுடைய ஆதிக்கம் மிகுதி யாக இருந்தது. மலைகளிலே அரசண்ணாமலை, புகழிமலை, திருமூர்த்திமலை, ஐவர்மலை முதலியவைகளில், ஜைனக் கோவில்களும், சமணக்குரவர்களின் உருவங்களும், தவஞ் செய்த இடங்களும் இருக்கின்றன. மேலும் கோயில்களை அடுத்துக் குடி இருந்துகொண்டு சில ஜைனக் குடும்பங் கள் அக்கோயில் வழிபாடுகளைச் செய்துகொண்டும் பாதுகாத்துக் கொண்டும் இருக்கின்றன. சில பெரும் புலவர்களும் அவைகளில் தோன்றி நாட்டு மொழிகளை நன்கு உணர்ந்துகொண்டு நாட்டுப் புலமையை வளர்ச்சி செய்து வந்திருக்கின்றனர்.

இவ்வகைச் சான்றுகளை அங்கங்கே காணும்போது, முன்னொரு காலத்தில் எத்தகைய சிறப்போடு, சமணம் இந்நாட்டில் இருந்ததென்று ஒருவாறு அறிந்துகொள்ள முடியும். இனிக் கொங்குநாட்டில், சமண ஆதிக்கத்தின் வரலாற்றை, விவரிப்பதற்குமுன் சமண சமயத்தைப் பற்றிப் பொதுவாக நாம் அறிந்துகொள்ளவேண்டிய சில குறிப்புக்களை எழுதுவோம்.

அதிகாரம்—2

சமண சமயம்

தமிழில் சமணம் என்றும், வடமொழியில் ஜைனம் என்றும் வழங்கும் ஆருகத சமயம் வட நாட்டில் இமயமலைக்கு அருகில் தோன்றியது. அதற்குச் சில ஆண்டுகளுக்குப்பின் பௌத்த மதமும் அதற்கு அருகிலே தோன்றிற்று. இந்த இரண்டு சமயங்களும் அக்காலத்தில் வைதீக சமயம் ஏற்படுத்தியிருந்த வேள்விச் சடங்குகளை எதிர்த்து மக்களைத் தூய்மையான வாழ்க்கையில் புகுத்தும் நோக்கத்துடன் தோன்றின. சமணர்களுக்குத் தனியாக நூல்கள் உண்டு. முதலில் இருந்தவை 14-பூர்வங்கள். அவைகள் இப்போது இல்லை. 45 ஆகமங்கள் இப்போது உள்ளன. அவைகளில் சிறப்பாக 11 அங்கங்களும் 12 உபாங்கங்களும் உண்டு. பாடலீபுத்திரத்தில் 4-வது நூற்றுண்டில் அங்கங்கள் திரட்டப்பட்டன. பிறகு 5-ம் நூற்றுண்டில் வல்லவியில் தேவாத்திஞானி என்பவரால், புனித நூல்கள் எல்லாம் திரட்டி எழுதப்பட்டன. அவைகள் அர்த்தமாகதி என்ற மொழி எழுத்தில் முதலில் எழுதப்பட்டுப் பிறகு 11-வது நூற்றுண்டில் சமஸ்கிருதத்தில் ஆக்கப்பட்டன.

சமணமதத்தின் ஆசாரியர்கள் 24 பேர். அவர்கள் தீர்த்தங்கரர் என்னப்படுவார்கள். முதல் தீர்த்தங்கரர் ரிஷபதேவர் அல்லது ஆதிநாதர் என்று பெயர் பெற்றவர். 23-வது தீர்த்தங்கரர் பார்சுவநாதர். 24-வது தீர்த்தங்கரர் வர்த்தமான மகாவீரர். இவர்களில் பார்சுவநாதரும், வர்த்தமானவரும் சரித்திர வரலாற்றில் வருகின்றவர்கள். மற்ற 22 தீர்த்தங்கரர்களும் சரித்திர

ஞானத்திற்கு முந்தியவர்கள். இவர்களில் பார்சுவநாதர், இக்ஷ்வாகு வமிசத்தில் அஸ்வசேனனுக்கும் பாமாதேவிக்கும் பிறந்தவர். காசிக்கு அருகில் பேலுபுரத்தில் தோன்றி ரஸனுஜிதன் என்ற மன்னனுடைய மகள் பிரபாவதி என்பவளை மணம்புரிந்தார். முப்பதாவது ஆண்டில் துறவு பூண்டு 80 நாள் கடுந்தவம் இயற்றிப் பூர்ண ஞானம் பெற்ருர். அவ்வாறு தவம் செய்கையில் அவருடைய பகைவனுன கமடன் அவர்மீது பெரும் மழையை ஏவினுன். ஆனுல், நாகஅரசன் தரணிதரன் தன்னுடைய படத்தைக் குடைபோல விரித்து அவர்மீது மழைவிழாமல் காத்துக்கொண்டிருந்தான். அதனுல் அவ்வாறு நடந்த இடத்திற்கு அகிச்சத்ர என்று பேர் ஏற்பட்டது. (அஹி-பாம்பு, சத்ர-குடை) துறவறம் பூண்டதும் 70 ஆண்டுகள், நிலவுலகில் வாழ்ந்து, 100-வது ஆண்டில் சமேதசிகரத்தில் உபவாசமிருந்து, உலகை நீத்தார். அவர் உயிர் துறந்த காலம் 776 கி. மு. ஆகும்.

24வது தீர்த்தங்கரராகிய வர்த்தமானர் என்கிற மகாவீரர் இக்ஷ்வாகு வம்சத்தில் ஞாத்ரி க்ஷத்திரிய குலத்தில் சித்தார்த்தனுக்கும் திரிசலாதேவிக்கும் சித்ர கோட்டை என்ற குந்தகிராமத்தில் பிறந்தார். சமரவீர மன்னனுடைய மகள் யசோதையை மணம் புரிந்தார். பிரியதரிசனை என்ற மகள் பிறந்தாள். அவள் ஜமாலி என்பவரை மணந்தாள். வர்த்தமானருக்கு 28வது ஆண்டில் பெற்ருேர்கள் இறந்தனர். அவர் 30வது ஆண்டில் துறவு பூண்டு $12\frac{1}{2}$ ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தார். அவர் திகம்பரராகி உடையும், கலயமும் கூடத் துறந்தார். இறுதியில் வினைக்கட்டுகள் விட்டுக் கேவலநிலை அடைந்தார். அப்போது அருகர் அல்லது ஜினர் ஆனுர். மகதநாட்டில் அபாபபுரி அடைந்து தன்

கொள்கைகளைப் போதிக்கத் தொடங்கினார். மகதநாட்டு அந்தணர்பலர் அவர் கொள்கைகளை ஏற்றுக்கொண்டார்கள். அவருடைய சீடர்களில் சிறந்தவர் இந்திரபூதி என்ற கௌதமர். சசானிகன் சிரேணிகன் என்ற அரசர்களின் ஆட்சியில் கௌசாம்பி, ராஜக்ரஹம் என்ற நகரங்களில் சமயப் பிரசாரம் செய்தார். 72வது ஆண்டில் அபாபபுரியில் உலகை நீத்தார். அவர் உலகை நீத்த தேதியை கி. மு. 527 என்று கூறுவர்.

தீர்த்தங்கரர்கள் புண்யவான்களாக வணங்கப்படுகிறார்கள். அவர்களுடைய திருஉருவங்கள் ஆலயங்களில் வைக்கப்பட்டுத் தொழப்படுகின்றன. சீடர்கள் அல்லது மாணுக்கர்கள் இருவகைப்படுவார்கள். திகம்பரர் என்றும், சுவேதாம்பரர் என்றும் கூறப்படுவர். திகம்பரர் ஆடையின்றி இருப்பவர்கள். சுவேதாம்பரர் வெள்ளை ஆடை உடுப்பவர்கள். அவர்கள் எல்லாருக்கும் சமயக் கோட்பாடுகளில் அளவற்ற நம்பிக்கை உண்டு. சமயக்குரவர்களை யதிகள் என்பார்கள். இல்லறத்தார்களை சிராவகர்கள் என்பார்கள். யதிகள் கடுந்தவம் புரியவேண்டும். எப்படிப்பட்ட ஆசையும் கூடாது. சிராவகர்கள் தீர்த்தங்கர வழிபாடு செய்வார்கள். ஜைனர்களுக்கு 5 மகாவிரதங்கள் உண்டு. அவைகள் : 1. துன்பம் செய்யாமை, 2. வாய்மை, 3. நேர்மை, 4. கற்பு, 5. அவாவின்மை என்பன. தருமங்கள் 4 வகைப்படும். 1. உதாரத்துவம், 2. மென்மை, 3. அன்பு, 4. தவம் என்பன. 3. கட்டுப்பாடுகள் உண்டு. 1. மனம், 2. வாக்கு, 3. காயம் இவைகளை அடக்குதல். இவைகளைத் தவிர பல சாதாரண ஒழுக்கங்களுமுண்டு. வீடுபேற்றினை நிருவாணம் என்று சொல்வர். மறுபிறப்பின்றி சாந்தநிலை அடைதலே வீடுபேருகும். சல்லேகனம் என்ற இறுதிச்

சடங்கு மிகப்புண்யமானது, சங்கத்தார் காலத்திலிருந்த "வடக்கிருத்தல்" போன்றது. பாறையின்பேரில் வெட்ட வெளியில் நின்று உணவின்றி இறுதியில் உயிர்துறப்ப தாகும். எப்படிப்பட்ட தீங்கும் இயற்றக்கூடாது. அக் கொள்கை அஹிம்சை எனப்படும்.

சமணர்களுடைய சமயச் சடங்குகள் மிக எளியவை. யதிகள் விருப்பம் இருந்தால் தொழுகையை விட்டுவிட லாம். சிராவகர்கள் தீர்த்தங்கரர்களுடைய கோயிலுக் குச் சென்று மும்முறை வலம்செய்து, மலரோ, பழமோ, வைத்துவணங்கி ஒரு மந்திரத்தைச் சொல்லுவார்கள். இத்துடன் வழிபாடு முடிவுபெறும்.

தீர்த்தங்கரர் ஒவ்வொருவரைப்பற்றியும் ஒவ்வொரு புராணம் உண்டு. அந்த 24 புராணங்களில் சக்ரவர்த்தி களினுடைய சரித்திரங்களும் அடங்கியிருக்கின்றன எல்லாவற்றையும் கூறும் புராணம் ஸ்ரீபுராணம் என்பது. அது வடமொழியிலும், தமிழ் மொழியிலும் உண்டு. வடமொழியில் மகாபுராணம் என்னப்படும். அது 63 நாயகர்களின் வரலாறுகளைக் கூறும். 63 பேர் யார் எனில், தீர்த்தங்கரர் இருபத்துநால்வர், சக்ரவர்த்திகள் பன்னிருவர், பலதேவர் ஒன்பதின்மர், வாசுதேவர் ஒன்ப தின்மர், பிரதி வாசுதேவர் ஒன்பதின்மர்; ஆக அறுபத்து மூவர்.

இனித் தீர்த்தங்கரர்களின் சரிதங்கள் பெரும்பாலும் ஒரேவிதமாக நிகழுவன. அவர்கள் முற்பிறப்பில் 16 பாவனைகளை அடைந்து, தவம்புரிந்து சர்வார்த்த சித்தி யில் அகமிந்திரன் பதவியை அடைந்து, வாழ்ந்து, அங்கு நின்று உலகில் வந்து அவதரிப்பர். அவர் அவதரிக்கு முன் அவர் அன்னையார் 16 கனவுகளைக் காண்பர். இந்திரன் ஏவலால் குபேரன் அவர் மாளிகையில் ஆறு

மாதம் பொன்மாரி பொழிவான். தீர்த்தங்கரர் பிறந்த பின், சௌதாமேந்திரன் வந்து யானையின்மீது எழுந்தருளிவித்து மந்திர மலையில் ஜன்மாபிஷேகம் பண்ணி நாமகரணம் செய்து அரண்மனையில் சேர்த்துவன். உரிய காலத்தில் தீக்ஷை நடக்கும். அதற்குச் செல்லும்போது இந்திரன் முதலியோர் சிவிகை சுமப்பர். மறுநாள், பாரணையின் பொருட்டு நகருட் செல்வர். பின்னர் தீர்த்தங்கரர் தவத்தால் கேவலஞானம் அடைவர். அப்பொழுது இந்திரன் ஏவலால் சமவ சரணமண்டலம் நிறுவிக்கப்படும். அங்கிருந்து உபதேசம் செய்வர். அவருடைய உபதேசங்கள் நான்கு பரம ஆகமங்கள். அவை கணதரருக்கு உபதேசிக்கப்படும். கேவலஞானம் அடைந்த தீர்த்தங்கரர் பல தேசங்களுக்குச் சென்று தருமோபதேசம் செய்து மீள்வர். தீர்த்தங்கரர், முப்பத்து நான்கு அதிசயங்களை உடையவர். இறுதியில், ஏதேனும் ஒரு மலைமேல் பிரதிமாயோகதாரியாகி நின்று எல்லாக்கருமங்களையும் கெடுத்து உலகங்கள் எல்லாவற்றிற்கும் மேலாகிய சித்தி க்ஷேத்திரம் அடைவர். சித்த நிலையை அடைந்தவர் திருவடி ஊன்றியிருந்த இடத்தில் திருவடிகளை அமைத்து அவற்றை வணங்குதல் மரபு.

சக்கரவர்த்திகள் சரிதங்களும் ஒரேவிதமாக இருக்கும். பூர்வபுண்ணியத்தால் இந்திரராகிப் பின் உலகில் அவதரித்து அரசாட்சி செய்வர். திக்கு விஜயம் செய்து ஆறு கண்டங்களையும் அடிப்படுத்தி அரசாளுவர். தீக்ஷையின்பின் மோட்சமடைவர். ஸ்ரீபுராணத்தில் காணும் ஜைனக் கொள்கைகளை ஒரு சிறிது கூறுவோம்.

1. உலகம் முதலும் முடிவும் இல்லாததினால் இதற்குப் படைப்புக் கருத்தா இல்லை.

2. மக்கள் தவத்தால் வினைகளைக் கெடுத்து அனந்த சதுஷ்டயங்களை அடைந்து இறைநிலை பெறலாம்.

3. மகளிருக்கு வீடுபேறு இல்லை. ஜீவர்களுள் மோட்சம் அடையும்பேறு இல்லாதவர் சிலர் உளர். அவர் வேகவைத்தும், வேகாத பயிறுபோன்றவர்.

4. அகில உயிர்களும் உபதேசம் கேட்பதனாலும், நோன்பு மேற்கொள்ளுதலாலும், துறக்கம் (சொர்க்கம்) பெறக்கூடும்.

5. நற்சாட்சி, நன்ஞானம், நல் ஒழுக்கம் என்னும் இரத்தினத் திரயத்தை அனைவரும் மேற்கொள்ளல் வேண்டும். ஐந்து பரமேஷ்டிகளை வணங்கவேண்டும்.

6. யாகம் முதலியவற்றிலும், உயிர்க்கொலையும், பாவனையும் கூடாது. சூரிய மறைவுக்குப்பின் உணவு கொள்ளுதல் கூடாது. பிறர் செய்யும் தீங்குகள் தமது வினைப்பயன் என்று எண்ணி, அவர்களுக்குத் தீங்கு செய்ய எண்ணுதலும் தீமைதரும். இல்வாழ்வோர் சாகாரர், சிராவகர் எனப்படுவர். அவர்கள் பதினொரு நிலையினர். அவர்களுக்குச் சில நோன்புகளும், அனுவிரதங்களும் உண்டு. அனுவிரதம் ஐந்து. 1. துன்புறுத்தாமை, 2. பொய் சொல்லாமை, 3. களவு செய்யாமை, 4. பிறர்மனை விழையாமை, 5. உலோபமின்மை என்பன. அனுவிரதங்களைத் துறவிகள் அனுஷ்டித்தால் அவை மகாவிரதம் எனப்படும். (திருக்குறளில், இவ்வேறுபாட்டிற்கு ஆதாரம் காணலாம்.) விரதங்களை இல்வாழ்வோர் முற்றும் மேற்கொள்ள இயலாதெனினும் துறவிகளுக்குக் கட்டாயமாக உண்டு.

இனித் தீர்த்தங்கரர்களின் பெயர்களையும், அடையாளங்களையும், சாசனதேவிகளின் பெயர்களையும் குறிப்பிடுவோம் :

தீர்த்தங்கரர்	சின்னம்	தேவி	சக்ரவர்த்தி
1 ஆதிநாதர்	எருது	சக்ரேஷ்வரி	பரதன்
2 அஜிதநாதர்	யானை	அஜிதபலா	சகரன்
3 சம்பவர்	குதிரை	துரிதாரி	
4 அபிநந்தனர்	குரங்கு	காணிகா	
5 சுமதிநாதர்	சக்ரம்	மகாகாளி	
6 பத்மப் பிரபர்	தாமரை	ஸியாம	
7 சுபார்ஸ்வ ஜினபதி	ஸ்வஸ்திக	சாந்தா	
8 சந்திரப் பரபா	பிறை	பிருகுடி	
9 புஷ்பதந்தர்	முதலை	சுதாரகா	
10 ஸீதளர்	ஸ்ரீவத்சம்	அசோகா	
11 ஸிரேயாம்சர்	காண்டா மிருகம்	மானவி	
12 வாசுபூஜ்யர்	எருமை	சந்தா	
13 விமலர்	வராகம்	விதிதா	
14 சுநந்தநாதர்	கரடி	அங்குசா	
15 தாமநாதர்	இடி	கந்தர்ப்ப	சனத்குமார
16 சாந்திநாதர்	மான்	நிர்வாணி	
17 குந்துநாதர்	ஆடு	பலா	
18 அரநாதர்	நந்தியா விட்டம்	தாரிணி	சுபௌம
19 மல்லிநாதர்	கும்பம்	தரணப்பிரியா	மகாபத்ம
20 முனிசுப்ரதர்	ஆமை	நரதத்தா	ஹரிசேன
21 நமிநாதர்	கூடை	காந்தாரி	ஜயசேன
22 நேமிநாதர்	சங்கு	அம்பிகா	பிரம்மதத்த
23 பார்சுவநாதர்	காகம்	பத்மாவதி	
24 வர்த்தமானர்	சிங்கம்	சித்தாயிகா	

தீர்த்தங்கரர்களின் உருவங்கள் கோயில்களில் தாபனம் செய்யப்பட்டு வணங்கப் பெறுவன ஆகும். அவ்வுருவங்கள் ஒரே வடிவங்களாகத் தோன்றினும் அடையாளக்குறிகளால் வேறுபடுத்த இயலும். சாசனதேவியர் யக்ஷிகள் முதலிய உருவங்களும் அமைக்கப் பெறுவன.

ஜைனநூல் கொள்கைச் சாரம்

இனி ஜைன சமயத்தின் கொள்கைகளை ஜைன நூல்களில் கண்டபடி சுருக்கமாகக் கூறுவோம். ஜினன் என்ற சொல்லுக்கு ஜயித்தவன் அல்லது வென்றவன் என்பது பொருள். ஜைன நூலாசிரியர் ஒருவர் அதனை அடியிற்கண்டபடி விவரித்திருக்கின்றார். "பல பிறப்புக்களாகிய காட்டில் உண்டாகும் கவலையை அடைவித்தற்கு ஏதுவாகிய வினைப்பகைஞரை வென்றவன் ஜினன்" என்றெழுதி யிருக்கின்றார். அப்படிப்பட்ட ஜினனுடைய உபதேசங்களை மேற்கொண்டு ஒழுகுபவர் ஜைனர் ஆவர்.

ஜைன சமயத்தில் ஜீவாத்மா அல்லது உயிர், பிரகிருதி அல்லது உலகு; இவ்விரண்டும் சிறப்பாக ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. தன் ஒளி கொண்டவனும், பேரின்பமயனும் என்றுமுள்ள தன்மையனும், ஆகிய ஜீவன் அல்லது உயிர் தொடக்கமற்ற வினைகளினால் இன்பதுன்பங்களுக்கு அடிப்படைகொண்ட உடல்களைப் பெற்றுச் சக்கர ஒழுங்கின்படி பிறப்புக்களின் தொடர்பிற்கு உட்பட்டு துன்பம் அடைகின்றான். அத்தகைய வினைத்தொடரை தபம், தியானம் முதலிய கிரியைகளால் போக்கிக்கொள்ளுதல் கூடும். அவ்வாறு போக்கிக் கொண்டவன் ஜினன் என்று கூறப்படுவான்.

ஜீவன், தொடக்கமற்ற வினைகளால் தொடரப்பட்டு, எஃகு காந்தத்தின் ஆற்றலை அடைந்து இரும்பினைத் தன்பால் இழுத்துக் கொள்ளுதல்போல், பரம அணுக்களை இழுத்துக்கொண்டு மூன்று உலகங்களிலும், நான்கு கதி உருவமான பிறப்புத் தொடர்புகளை அடைகின்றான். அவன் இந்த வினைகளை முற்றும்போக்கி 4 வித

மாகிய சுத்த ஆன்ம சொரூபத்தை அடைவதே வீடுபேறு என்னப்படும்.

ஜீவனுக்குத் தொடக்கமற்ற வினைத்தொடர்பையும், அதனால் உண்டாகும் பிறப்புப் பரம்பரைகளையும், பிறப்புக்களில் செய்யும், இருவினைகளின் பலன்களைத் துய்ப்பதற்கு இடங்களாக உள்ள துறக்கம், நரகம் என்பவைகளையும் ஜைன சமயம் ஒத்துக்கொள்ளுகின்றது.

ஜீவர்கள் அல்லது உயிர்கள் மூன்று திறத்தினர். அவர்களை வடமொழியில் பவ்வியர், ஆசன்ன பவ்வியர், அபவ்வியர் எனக் கூறுவர். அவர்களுள் பவ்வியர், ஜைனக்கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டவர்கள். ஆசன்னபவ்வியர் இப்பொழுது நம்பிக்கை இலராயினும் சிறிது காலத்திற்குப்பின் நம்பிக்கை கொள்ளுபவர். சில பிறவிகளுக்குப்பின் அவர்களுக்கு வீடுபேறு கிடைக்கக் கூடும். அபவ்வியர் எந்நாளும் ஜைனக் கொள்கைகளை மேற்கொள்ளாதவர்.

வீட்டுப்பேற்றை அடையும் ஜீவர்கள் இருதிறத்தவர் ஆவர். முதல் திறத்தவர் தீர்த்தங்கரர் என்றும் ஜினர் என்றும், அருகர் என்றும் சொல்லப்படுவர். மற்றவர் சித்தர் எனப்படுவர்.

தீர்த்தங்கரர் 16-பாவனைகளால் தீர்த்தகர புண்ணியத்தை அடைந்து மறுபிறப்பில் கேவல ஞானியாகி 34-அதிசயங்களையும், 8-மகாபராத ஹாரியம் முதலிய வைபவங்களையும் அடைந்து, சமவசரண மண்டலத்தில் எழுந்தருளித் தத்துவோபதேசம் செய்யும் நிலையை அடைவர். இவர்கள் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற முக்காலங்களுள், ஒவ்வொரு காலத்திலும் 24-எண்ணிக்கை உடையவர்களேயாவர்.

இவ்வுலகத்தின் படைப்பு, நிலை, அழிவு (ஆக்கல் அளித்தல் அழித்தல்) இவைகளுக்குக் காரணம், ஜீவாத்மாவுக்கு வேறானதாய் ஒரு பொருள் உண்டென்று ஜைனர்கள் ஒத்துக்கொள்ளுவதில்லை. இவ்வுலகம், தொடக்கமில்லாதது திரிதல்தன்மை கொண்டது என்றே உறுதி செய்வர். ஜைனர்களுக்கு ஆகமம் உண்டு. அதனை இருவினை ஒழித்த கேவலஞானம் அடைந்த ஜினனுடைய வாக்கிலிருந்து வந்தது; உயிர் உலகம் இவைகளின் குணங்களைக் கூறுவது என்பர். இவ்வாகமம் ஜினனுடைய வாக்கிலிருந்து தோன்றி, கணதரருக்கு உபதேசிக்கப் பெற்று அவர்கள் அரசர்களுக்குச் சொல்ல, அது பரம்பரையாய் நிகழ்ந்துகொண்டிருக்கும்.

இவ் வாகமத்தை மேற்கொண்டு ஒழுகுபவரே ஜைனர்.

"உயிர்க்கு இன்னா செய்யாமையே உயர்ந்த அறம்" என்பதே ஜைனசமயத்தின் அடிப்படைக் கொள்கை. இதனை வடமொழியில் "அஹிம்சா பரமோ தர்ம:" என்பர். இந்தக் காரணத்தினால் வைதீக சமயத்தவர்கள் செய்கின்ற உயிர் வேள்விகளை ஜைனர்கள் வெறுத்துத் தள்ளுகின்றனர். துன்ப உருவமான எண்ணத்தையும் அவர்கள் விலக்கியுள்ளார்கள். (இக்கொள்கையைக் கதாரூபமாக யசோதர காவியம் என்ற சிறு பஞ்சகாவியம் நன்கு விளக்குகிறது)

ஜைனசமயத்தில் அருகர், சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், சர்வ சாதுக்கள் என்ற ஐந்துவகை புனிதவான்கள் (பஞ்ச பரமேஷ்டி) இருக்கின்றார்கள். இவர்களை வணங்குவதால் இல்லறத்தார்கள் வீடுபேற்றை அடைவார்கள்.

ஜின ஆகமங்கள், 4-பிரிவினை உடையன. பிரதமம், கரணம், சரணம், திரவியம் என்ற பெயர்களைக் கொண்டவை. பிரதம அனுயோகத்தில் தீர்த்தங்கரருடைய வரலாறுகள் கூறப்பட்டுள்ளன. மற்ற மூன்று அனுயோகங்களில் நரகம் முதலியவைகளின் விவரங்கள் கூறப்பட்டுள்ளன.

கரண அனுயோகத்தில் லோகங்கள், நரகப்பிரிவுகள், தீபங்கள், சமுத்திரங்கள், க்ஷேத்திரங்கள், மலைகள், நதிகள், நாடுகள், புரிகள், தேவர்கள் முதலிய அந்தர வாசிகள், யக்ஷர் முதலிய யோனிகள் முதலிய பிரிவுகளெல்லாம் கூறப்பட்டுள்ளன.

சரண அனுயோகத்தில் கரணங்கள், மதங்கள், அங்கங்கள், குணங்கள், நிலையங்கள், விரதங்கள், தொழில்கள், யதி, முனி, ரிஷிவகைகள், மரணவகைகள், கழிவு வகைகள், தியானவகைகள், தபவகைகள், ஆசார வகைகள் கூறப்பட்டுள்ளன.

இனி திரவிய அனுயோகத்தில், திரவியம், தத்துவம், பதார்த்தம், நியாசம், பிரமாணம், ஞானம், தரிசனம், கர்மம், புண்ணியம், பாபம் முதலிய பல விவரங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

இவைகளெல்லாம் விவரிக்கின்ற நூல்கள் ஜைன மதத்தினுடைய புனித நூல்கள் ஆகும். அவைகளை முழுதும் படித்தறிவது கடினம். படித்தறிந்தால் மிகவும் நுட்பமான பொருள்களை அறிந்துகொள்ளலாம்.

சமணத் துறவிகளின் சில ஒழுக்கங்கள்

மேலே கூறியவை ஜைன சமயத்தில் கூறப்பட்ட தத்துவங்களாகும். ஆனால் அன்றாட வாழ்க்கையில் சில சடங்குகளும், ஒழுக்கங்களும் உள்ளன. அவைகள்

சிறப்பாக துறவு பூண்ட குரவர்கள் மேற்கொண்டுவந்த செயல்களாகும். இச் செயல்கள் அவர்களைச் சுற்றிலு மிருந்த பிற சமயத்தார்களுக்கு வேறுபட்டனவாகத் தோன்றும். அந்தக் காரணத்தினால் அச்சடங்குகளையும், ஒழுக்கங்களையும் பின்பற்றிவந்த துறவிகளைப் பிற சமயத்தார் கண்டனம் செய்ய இடம் ஏற்பட்டது. சமய நூல்களில் கூறப்பட்டிருக்கும் கோட்பாடுகள் மட்டும் எடுத்துக்கொண்டால் குறைபாடுகளைக் கூறவழியில்லை. ஆனால் சடங்குகள் மட்டும் எடுத்துக்கொண்டால் பிறருக் குக் குறையாகத் தோன்றலாம். இவ்விதமான பேத உணர்ச்சி, 6, 7-வது நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் நிரம்ப இருந்தது. அப்போது நாட்டில் தோன்றிய சைவ, வைணவப் பெரியார்கள் மேலே கூறிய நடத்தைகளை மட்டும் சுட்டிக்காட்டிச் சமணத்தை வெறுக்கவும், எதிர்த் துப் போராடவும் தொடங்கினார்கள். சாதாரண மக் களுக்குச் சமய சித்தாந்தக் கொள்கைகளைக் காட்டிலும், சமயச்சடங்குகளும், ஒழுக்கங்களுமே பெரிதாகத் தோன் றும். அந்த முறையில்தான் தேவாரங்களிலும், பிரபந்தங் களிலும் சமணக் கண்டனங்கள் தோன்றியிருக்கின்றன.

ஜைனர்களில் இரண்டு வகையார்கள் இருக்கிறார்க ளென்று முன்னமே கூறப்பட்டது. வெள்ளையுடை தரிப்பவர்கள், எவ்வுடையும் தரியாதவர்கள் என்று இரண்டு வகுப்பார் உண்டு. வெள்ளையுடை தரிப்பவர் கள் வடநாட்டில் வெகுவாக யிருக்கின்றார்கள். அவர் களுடைய நடவடிக்கைகள் பிற மதத்தாருக்கு வேறுபா டாகத் தோன்றாது. இரவில் உண்ணாது பகலில் உண்பது ஒன்றே வேறுபாடாகத் தோன்றும். அது உயிர்களுக்குத் துன்பம் செய்யாமை என்ற கொள்கையைப் பின்பற்றி யது. ஆகவே அதனை ஒருவரும் வெறுக்கமாட்டார்கள்.

வடநாட்டில் ஜைனர்களுக்கும், இந்துக்களுக்கும் பகையிருப்பதாகத் தெரியவில்லை. வடநாட்டு ஜைனர்க்ள் நாகரீகத்திலும், செல்வாக்கிலும் முன்னேற்றம் அடைந்திருக்கின்றார்கள். தென்னாட்டில் செல்வாக்குக் குறைந்திருக்கின்றது. காரணம் என்ன என்று ஆராய்வோம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன் தென்னாட்டில் குடியேறின வடக்கத்தியர்கள் சமணர்களில் மற்றவகுப்பார்களாகிய திகம்பரர்களே. கி. மு. 3-வது நூற்றாண்டு பத்திரபாகு முதற்கொண்டு கி. பி. 6-வது நூற்றாண்டு வரை, தென்னாட்டுக்கு வந்தவர்கள் திகம்பரக் குரவர்களே. அவர்கள் துறவிகளாயிருந்து கடுமையான தவம் புரிந்து வந்தவர்கள். பொதுமக்களுடைய இருப்பிடங்களில் வாழாது, குன்றுகளில், குகைகளைக் குடைந்து அதில் தவம் செய்து கொண்டிருந்தார்கள். சிலபேர் ஊர்ப்புறங்களில் தனியாய் அமைத்த பள்ளிகளிலும், பாழிகளிலும் தங்கித் தவம் புரிந்துவந்தார்கள். அவர்கள் தலைகளில் மயிர்களைப் பறித்து, முண்டிதம் செய்துகொண்டு, கூறையைக் கட்டிக்கொண்டு, பீலியை கையில் இடுக்கிக்கொண்டு செல்வார்கள். உணவை கையில் இட இருகையால் ஏற்றி உண்பார்களாம். பல் தேய்க்காமல் பாசிப்பல்லோடும், உடல் குளிக்காமல் மாசுபடர்ந்த மெய்யோடும் இருப்பார்களாம். இந்தச் செயல்கள் துறவிகளுடைய செயல்களேயன்றிப் பொதுமக்களுடைய செயல்களாகத் தெரியவில்லை. இந்தச் சடங்கு ஒழுங்குகளைக் கண்ட பிற சமயத்தார்கள் வெறுப்பது இயல்பே. ஆகவேதான் சமயத்தின்பொருட்டுப் பகை ஏற்பட்டதென்று அறியலாம். மேலும் பிறசமயத்தாரை அந்தத் துறவிகள் கண்டால் "முட்டு" என்றும், கேட்டால் "முட்டு" என்றும், தீண்டாமைக் கொள்கையை

அனுசரித்தார்களாம். இப்படியிருந்த வேற்றுமைக் கொள்கைகளினுல் 6, 7-வது நூற்ருண்டுகளில் தமிழ் நாடெங்கும் மாச்சரியங்கள் தோன்றின. சமணப் பெருக் கத்திற்கும் தடை ஏற்பட்டது. இந்தவகையில் பல நூற் ருண்டுகள் வரை சமண சமயம் தென்னுட்டில் சுருங்கிக் கொண்டே வந்திருக்கின்றது.

ஆராய்ந்து பார்க்கும் காலத்தில் சமண சமயத்தின் பேரில் ஏற்பட்டிருந்த பொல்லாப்பு முழுதும் வெளிச் சடங்குகளைப் பற்றியேயன்றி அடிப்படையாக விருக்கும் கோட்பாடுகளைப் பின்பற்றியது அல்ல என்று நாம் அறிய வேண்டும். சமய நிலையங்களாகிய ஆலயங்களில் நடை பெறும் உருவவழிபாடுகள், ஆராதனைகள், அபிஷேகாதி கள் முதலியவைகளைக் கண்டால், ஜைன சமயத்தாருக் கும், இந்து சமயத்தாருக்கும், வெகு வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. இலௌகிக மக்களின் வாழ்க்கை வழக்கங்களிலும் வேறுபாடு காண்பதில்லை. துறவிகள் ஆன குருமார்களிடம் மட்டும் நடவடிக்கை வேறுபாடுகள் பல நூற்ருண்டுகளின் முன் இருந்தன. தற்போது அவ்வேறுபாடுகளும் மறைந்து விட்டன எனலாம். அவ்வாறு மறைந்துபோன வேறுபாடுகளை வைத்துக்கொண்டு இந்த நூற்ருண்டிலும் திருப்பித் திருப்பிப் பேசுவதில் பயனில்லை அல்லவா?

அதிகாரம்—3

வட நாட்டில் ஜைனம்

எந்தச் சமயத்திலும் புனிதப் பெருமக்கள் தோன்றியதும், மறைந்ததும், அற்புதங்கள் செய்ததும் ஆன இடங்கள் புண்ணிய இடங்களாகக் கொண்டாடுவது உலக வழக்கு. அப்படிப்பட்ட இடங்களில் அவரவர்கள் சமயச் சின்னங்களை வைத்து வணங்குவதும் வழக்கமாக இருந்திருக்கின்றது. உருவ வழிபாடு இல்லாத சமயங்களிலும் புனித இடங்களைப் போற்றுவார்கள் என்றால் உருவ வழிபாடு கொண்ட சமயங்களில் அவைகளை மிகவும் அழுத்தமாகக் கொண்டாடுவார்கள் அல்லவா? எடுத்துக்காட்டாக, உருவ வழிபாடு முற்றுமாக விலக்கப்பட்டிருக்கும் இஸ்லாமியத்திலும் மெக்கா, மதீனா, கெர்பலா முதலிய இடங்கள் புனித இடங்களாகக் கொண்டாடப்பட்டுக் கணக்கற்ற இஸ்லாமியர்கள் ஆண்டுதோறும் அங்கே வழிபாடு செய்யப் பெருஞ் செலவிட்டும் மிகவும் வருத்தப்பட்டும் யாத்திரை செய்கிறார்கள். உருவ வழிபாட்டில் ஒருவாறு கருத்துக்கொண்ட விவிலிய சமயத்தார்கள், தங்கள் பெருமக்களும், போதகரும் தோன்றிய பாலஸ்தீனத்திற்குச் சென்று வணங்குவது வழக்கம். அதுமட்டுமன்று, பின்னால் வந்த, புனித புருடர்கள் தோன்றி மறைந்த ஊர்களெல்லாம் புண்ணிய க்ஷேத்திரங்களாக வணங்கப்பட்டு வருகின்றன. அது போலவே, சைவம், வைணவம், பௌத்தம் முதலிய சமயங்களிலும் உண்டு. ஆகவே உருவ வழிபாடு மிகவாகக்கொண்டிருக்கும் ஜைன சமயத்தில் புண்ணிய

பூமிகள் அமைந்திருப்பது இயல்பே. அவற்றில் வடநாட்டில் அமைந்துள்ள சிலவற்றைக் கூறுவோம் :

ஜைனத்தில் புனிதப்பெருமக்களான தீர்த்தங்கரர்கள் தோன்றின இடங்களும் நிருவாணம் அடைந்த இடங்களும் புனித க்ஷேத்திரங்களாகும். அவைகள் எல்லாம் வடநாட்டில் உள்ளன முதல் தீர்த்தங்கரரான ரிஷபர் தோன்றின ஊர் அயோத்தியா. அவர் நிருவாணம் அடைந்த இடம் கைலாசம். இரண்டு, நான்கு, ஐந்து, பதினான்கு தீர்த்தங்கரர்கள் தோன்றின இடமும் அயோத்தியே. 2 முதல் 11 வரையும், 13 முதல் 21 வரையும், 23-ம் ஆன தீர்த்தங்கரர்கள் நிருவாணம் அடைந்தது சம்மேத பர்வம். இனி 3 சிராவஸ்தியிலும், 6 கௌசாம்பிலும், 7, 23 காசியிலும், 8 சந்திரபுரத்திலும், 9 காகந்தியிலும், 10 பதரிலபுரத்திலும், 11 சிம்மபுரத்திலும், 12 சம்பாபுரத்திலும், 13 காம்பிலிலும், 15 ரத்னபுரத்திலும், 16, 18 அஸ்திநுபுரத்திலும், 19, 21 மிதிலாபுரத்திலும், 20 ராஜகிரகத்திலும், 22 துவாரகையிலும், 24 குண்டபுரத்திலும் தோன்றினார்கள். மேலும் 12 சம்பாபுரத்திலும், 22 ஊர்ஜெயந்தகிரியிலும், 24 பாவாபுரத்திலும் நிருவாணம் அடைந்தார்கள். மேலே கூறியபடி தீர்த்தங்கரர்கள் தோன்றிய இடங்கள் நகரங்களாகும். அவைகளெல்லாம் அக்காலத்தில் இராஜ்ஜியங்களுக்கு இராஜதானிகளாய் இருந்தவைகள். நிருவாணம் அடைந்த இடங்களோ மலைகள். அவைகளில் சம்மேத பர்வம் பெரும்பான்மையான தீர்த்தங்கரர்கள் நிருவாணம் அடைந்த இடமாகும். இவைகளெல்லாம் மிகப் புனித க்ஷேத்திரங்களாக ஜைனர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றன. இறுதித் தீர்த்தங்கரரான வர்த்தமான மகாவீரர் தோன்றியது குண்டலபுரம்; மறைந்தது

பாபாபுரத்தில். அருகில் இருந்த மனோஹரவனம் என்னும் வனப்பிரதேசத்தில் அநேக சரசுகளின் மத்தியில், மணி சிலாதலத்தில் எழுந்தருளியிருந்து அவர் நிருவாணம் அடைந்தனர் என்று புராணம் கூறுகின்றது.

மகாவீர தீர்த்தங்கரர் பரமபதம் அடைந்த பிறகு கௌதம கணதரர் கேவலஞானம் அடைந்து, இறுதியில் விபுலாத்திரியில் முத்தி அடைந்தார். அவருக்குப்பின், சுதாமர், ஜம்புநாமர் கேவலிகள் ஆவார்கள். அவர்தான் கடைசி கேவலி. பிறகு நந்திமுனி, நந்திமித்திரர், அபராஜிதர், கோவர்த்தனர், பத்திரபாஹு என்ற ஐவர்கள் சாஸ்திர பாரங்கதர் ஆனார்கள். இப்படிப்பட்ட ஆசாரியர்கள் தோன்றிமறைந்த இடங்களும், புனித க்ஷேத்திரங்களாகப் போற்றப்படுகின்றன.

தற்போதும்கூட ஜைன சமூகத்தார்கள் பெரும்பாலும் தங்கள் தங்கள் புனித க்ஷேத்திரங்களை அடுத்தோ அல்லது சுற்றியோ வசிக்கிறார்கள் என்று அறியவேண்டும். இராஜஸ்தானம், சௌராஷ்டிரம், மத்திய பாரதம், இவைகளிலே ஜைன சமூகம் பெரும்பான்மையாகக் குடியிருக்கிறது. இராஜஸ்தானத்தில் ஆபூ மலையின் பேரில் மிகப்புகழ்பெற்ற ஜைன ஆலயங்கள் இருக்கின்றன. சௌராஷ்டிர தேசத்தில் கிரினார் மலையின் பேரில் பெரிய பெரிய ஜைன ஆலயங்கள் இருக்கின்றன. அதுபோலவே மத்தியபாரதத்திலும் உண்டு. பெரும்பான்மையான ஜைனர்கள் மார்வாடி மொழியும், குஜராத்தி மொழியும் பேசுகின்றார்கள். இவர்கள் தொழில் வியாபாரமாகும். மிகப்பெரிய கைத்தொழிற் சாலைகளையும் வைத்து நடத்துகிறார்கள். வியாபாரத்திற்காகப் பிற நாடுகள் செல்லும்போதும் ஆங்காங்கே தங்கியிருக்கும் காலங்களில் ஜைன ஆலயங்களைக் கட்டி வழிபாடு ஏற்

படுத்திக் கொள்வார்கள். அவைகள் பெரும்பாலும் வெள்ளைச் சலவைக் கற்களால் செய்யப்பட்டிருக்கும். மூர்த்திகளையும் சலவைக் கற்களாலேயே செய்திருப்பார் கள். ஆலயங்களை மிகத் தூய்மையா வைத்திருப்பார்கள். வணக்கமும் மிக அமைதியாக நடைபெறும். ஒவ் வொரு பெரிய வியாபாரத் தலத்திலும், ஜைனக் குடும் பங்கள் குடியேறி இருக்கிறார்கள். செல்வத்தில் திளைத்து இருப்பார்கள். ஆனாலும், சமய வழிபாட்டில் குறைந்தவர்கள் அல்லர். ஆகவே குடியேறி இருக்கும் வாணிபர்கள் ஒன்று சேர்ந்து, ஓரிடத்தில் ஓர் ஆலயமா வது கட்டியிருப்பார்கள். இவ்விதமான ஆலயங்கள் காளிகட்டம் (Calcutta), காசி, டெல்லி, பம்பாய், நாகபுரி, புனா முதலிய இடங்களில் இருக்கின்றன. அவைகளில் மிகச் சிறந்தது காளிகட்டத்திலுள்ள ஜைன ஆலயம்தான். ஓர் அழகிய பூங்காவின் இடை யிலே குளிர்ந்த நீர்த்தடாகங்களின் நடுவிலே தூய்மை யான வெண்மைப் பளிங்குக் கற்களால் அவ்வாலயம் இயற்றப்பட்டுள்ளது. வளைவுகளிலும், தூண்களிலும், தளங்களிலும், சுவர்களிலும், மேடைகளிலும் பல வண் ணங்கள் அமைந்த மணிக் கற்கள் பொறிக்கப் பெற் றிருக்கின்றன. காளிகட்டத்திற்குச் செல்கின்ற எந்த நாட்டானும் எந்த சமயத்தானும், அங்கிருக்கும் அழகு பொருந்திய ஆலயத்தைக் கண்டு களிக்காமல் திரும்பிப் போக மாட்டான். ஜைன சமயத்தவர்களுக்கு அழகு படுத்தும் குணத்தில் வேறு எவரும் ஈடு ஆகமாட்டார்கள்.

இனி பண்டைய ஜைன ஆலயங்களைப் பற்றி ஒரு சிறிது கூறுவோம். இராஜபுதனம் என்னும் ராஜ ஸ்தானத்தில் ஆரவல்லி என்ற மலைத்தொடர்கள் இருக் கின்றன. அவைகளின் தென் மேற்குப்புறத்தில் ஆபூ

மலைகள் இருக்கின்றன. அம்மலைகளின் பேரில் ஆபு என்ற ஊரும் இருக்கின்றது. சிரோஹி சமஸ்தானத்தில் ஆபூ பாதை என்ற புகைவண்டி நிலையத்திலிருந்து வடமேற்கே 17 கல்லில் அவ்வூர் இருக்கின்றது. அந்த இடம் ஜைனர்களுக்கு ஒரு புனித இடமாகும். அங்கே தில்வாரா என்ற பெயரில் ஐந்து ஜெயின ஆலயங்கள் இருக்கின்றன. தில்வாரா என்ற சொல் தேவல்வாரா என்றதின் மருவு ஆகும். அதற்கு ஆலய இடம் என்று பொருள். ஐந்து கோயில்களில் இரண்டு கோயில்கள் மிகப் புகழ் பெற்றவை. அவற்றில் விமலசா என்பது 1032-ல் கட்டப்பட்டது. அதில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தி ஆதிநாதர் என்ற ரிஷபதேவர். மற்றொரு கோயில், வாஸ்து பாலன், தேஜபாலன் என்ற மன்னர்களால் 1231-ல் கட்டப்பட்டது. அதில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தி நேமிநாதர் ஆவர். இந்த ஆலயங்கள் வெளிப்பார்வைக்குச்சாதாரணமாகத்தோன்றும். ஆனால் உள்ளே சென்றால் ஜகஜ்ஜோதியான சிற்பச் சிறப்புக்களைக் காணலாம். எட்டுமூலை மண்டபத்தில் அருமையான வெள்ளைப் பளிங்கினால் தோரணங்கள் போலும் மலர் மாலைகள் போலும் வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆதிநாதருடைய உருவம் வெண்கலத்தினால் ஆக்கப்பட்டது. கண்கள் இரத்தினங்களால் ஆனவை. கழுத்தில் விலையிடமுடியாத இரத்தினமாலை அணியப்பட்டுள்ளது. கோயில் பிரகாரத்தில் 52 கருவறைகள் உண்டு. ஒவ்வொன்றிலும் தீர்த்தங்கரர்களின் திருவுருவங்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. முகத்துவாரத்தில் விமலசாவின் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. அது குதிரையின்மேல் அமர்ந்தபாவனையில் செய்யப்பட்டுள்ளது. மற்ற ஆலயத்தில் வாஸ்துபாலன்,

தேஜ்பாலன், என்பவர்களுடைய உருவங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன.

இனி, சௌராஷ்டிர நாட்டில் ஜூனகட் என்ற நகரத்திற்கு 10 மைல் தொலேவில் கிரிநார் என்ற மலேகள் இருக்கின்றன. அம்மலேகள் கடல் மட்டத்துக்கு மேல் 3500 அடி உயர்ந்தும் ஐந்து சிகரங்களேக் கொண்டுமிருக் கின்றன.

இம்மலேகள் மிகப் பழமையான புகழைப் பெற்றி ருக்கின்றன. இந்த இடத்தின் பண்டையப் பெயர் உஜ்ஜையநதம் என்பது. கி. மு. 250-ல் ஏற்பட்ட அசோகனுடைய சிலாசாசனம் இங்கே உண்டு. இம் மலேகளில் பல ஆலயங்கள் உண்டு. அவற்றில் சிறந் தவை ஜைன ஆலயங்கள். அவைகள் இருக்கும் புனித இடம் கடல் மட்டத்திற்கு மேல் 3000 அடியும், சிகரத் திற்குக் கீழ் 600 அடியும் கொண்டது ஆகும். அங்கே 16 ஆலயங்கள் உண்டு. அவற்றுள் சிறந்தது நேமிநாதர் ஆலயம். இது 1778-ல் புதிப்பிக்கப்பட்டது. அதற்கு முந்தியிருந்த ஆலய வடிவம் எப்படிப்பட்டது என்று அறிய வகையில்லே. நேமிநாதர் ஆலயம் 195 அடிநீள மும், 130 அடி அகலமும் உள்ளது. சுற்றிலுமுள்ள பிரகாரத்தில் 70 அறைகள் இருக்கின்றன. அவைகளில் உள்ள திருஉருவங்கள் நேமிநாதருடைய வாழ்க்கைச் சரித்திரங்களேக் காட்டுகின்றன.

சௌராஷ்டிரத்தில் மற்ருெரு புனிதத் தலம் உண்டு. அதன் பெயர் பாலிதாணு என்பது. அந்த ஸ்தலம் கிரிநாரைவிடச் சிறந்த வேலேப்பாடு கொண்டது. பாலி தாணு நகரமானது அப்பெயர் கொண்ட சமஸ்தானத் தின் தலேநகர். ஊருக்கு மேற்கே சத்ருஞ்சயமலே என்ற மலே ஒன்று இருக்கிறது. அம்மலேயின்மேல்

பலகோயில்கள் இருக்கின்றன. ஆதிநாதர், குமாரபாலர், விமலசா, சம்பிரிதராஜா, சரஜ்முக் என்ற பெயர்களால் அவைகள் வழங்குகின்றன. ஜைனர்களுடைய 5 புனித ஸ்தலங்களில் சத்ரஞ்சய மலைதான் மிகச்சிறந்த தென்பர். மலையேறும் வழி முழுதும் சிறுசிறு அறைகள் உண்டு. அவைகளில் பளிங்கில் திருவடிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. முழுக்கோயில் கட்டமுடியாதவர்கள் ஆலயத்தைமட்டுமாவது தாபிப்பார்களாம். இம்மலையின் மீதுயாத்திரிகள் வழிபாடுமட்டும் செய்யலாம். சமையல் செய்யவோ, உண்ணவோ, தூங்கவோ கூடாது.

வங்காளத்தில் கிரிதிநிலையத்திற்கு 18 கல்லில் பார்சநாதர் மலை இருக்கின்றது. அதன் உச்சிக்கு அஸ்மித்சிகரம் என்றுபெயர். அதற்கு ஆனந்த முடி என்பது பொருள். அதனைச் சுற்றிலும், 20 ஜெயினர் கோயில்கள் இருக்கின்றன. இம்மலைமேல்தான் 24 தீர்த்தங்கரர்களில், 10 தீர்த்தங்கரர்கள் நிருவாணம் அடைந்தார்களாம். 19 தீர்த்தங்கரர்கள் இங்கே அடங்கியுள்ளார்களாம். சில கோயில்கள் மிக அழகாயிருக்கின்றன. வெண்பளிங்கால் ஆக்கப்பட்ட ஒரு சிறு கோயில் மிகச் சிறந்தது. 13-வது தீர்த்தங்கரர் பெயரால் இந்தப் புனித இடம் வழங்குகிறது.

பம்பாய்ப் பிராந்தியத்தில் பாதாமி என்ற பண்டைச் சளுக்கியர் தலை நகரில் உள்ள ஒரு குன்றில் ஐந்து குடைக் கோயில்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று கி. பி. 579-ல் ஆக்கப்பட்டது என்று கல்வெட்டு கூறும். அவைகளில் ஒரு குகை ஜைனசமயத்தது. 31 அடி நீளமும் 19 அடி ஆழமும் கொண்டிருக்கின்றது. அருமையான வேலைப்பாடு கொண்டது.

மத்திய இந்தியாவில் குவாலியர் என்ற நகரத்தில் ஒரு ஜைனக் கோயில் இருக்கின்றது. அதன் பெயர் சசிபாஹூ என்பது. அதில் வணங்கப்படும் மூர்த்தி 6-வது தீர்த்தங்கரராகிய பதுமநாதர். அருகிலே ஒரு பெரும் பாறையில் அநேக சமண உருவங்கள் செதுக்கப் பட்டிருக்கின்றன. 5 அடி முதல் 57 அடி உயரம் வரையில் 100 உருவங்கள் காணப்படுகின்றன. அவை பெரும் பாலும் ஆதிநாதருடைய உருவங்கள். 22வது தீர்த்தங் கரர் நேமிநாதர் 30 அடி உயரத்தில் உட்கார்ந்த நிலையில் இருக்கின்றார். இவைகளெல்லாம் 1441 முதல் 1474-க் குள்ளாகச் செதுக்கப்பட்டவைகள். உத்தரப்பிராந்தியத் தில் காம்பீலியில் ஒரு ஜெயினக் கோயில் இருக்கின்றது. மகாநதிக் கரையில் ராஜிம் என்ற ஊரிலும் சோனகிரி என்ற மலையிலும் ஜெயின ஆலயங்கள் இருக்கின்றன. இவைகள் பெரும்பாலும் தீர்த்தங்கரர்களின் பிறப்பு இறப்பு இடங்களாகும்.

தெக்கின நாட்டில் ஜைனம்

வடநாட்டில் தோன்றிய ஜைனமதம் நாளாவட் டத்தில் தெற்கே பரவத் தொடங்கிற்று. இதை நிரூ பிப்பதற்குப் பல கதைகள், இலக்கியங்களில் கூறப்பட் டுள்ளன. ஜைனமும், பௌத்தமும் தோன்றிய பிறகு மகதநாடு மிகவும் வல்லமையைப் பெறத் தொடங்கிற்று. அதை முதலில் நந்தர் என்ற வம்சத்தினர் ஆண்டு வந்தனர். கி. மு. நான்காவது நூற்றாண்டில் மேற்கே யவன நாட்டிலிருந்து அலெக்சாந்தர் என்ற மன்னன் பாரதத்தின்மீது படையெடுக்க வந்தான். சிந்து நதிக் கரையில் புரூரவன் போன்ற சில சிற்றரசர்களைத் தோற் கடித்தான். ஆனால் மேலே செல்ல முடியாது தனது

நாட்டிற்குத் திரும்பிவிட்டான். அப்போது அவனை எதிர்க்க ஆயத்தமாக இருந்தவன் சந்திரகுப்தன் என்ற பெயர் பெற்ற அரசன். சந்திரகுப்தன் நந்தனுடைய காமக்கிழத்தியான முரையின் மகன். சாணக்கியன் என்ற பெயர்பெற்ற அமைச்சனின் சாகசத்தினுல் நந்தனுடைய பேரரசுக்குச் சந்திரகுப்தனே தலைவனானன். அவனே மௌரிய வம்சத்தின் முதல் அரசன். அவன் பாடலீபுரத்தில் வெகு புகழோடு நெடுநாள் ஆண்டுவந்து இறுதியில் சமண சமயத்தில் சேர்ந்துகொண்டு துறவு பூண்டதாக ஜைன நூல்கள் கூறுகின்றன. அவனுடைய பேரன்தான் புகழ்பெற்ற அசோக சக்கரவர்த்தி. இவனே பௌத்த சமயத்தை நெடுந்தூரம் பரவச் செய்தவன்.

ஜைனமதத்தில் சுருதகேவலிகளில் இறுதிப் பெருமகனுர் பத்திரபாகு என்ற முனிவர். அவரே சந்திரகுப்தனை ஜைனமதத்தில் உபதேசம் செய்து சேர்த்தினவர். அக்காலத்தில் சிறந்த நகரமாயிருந்த உஜ்ஜினியில் 12 வருடங்கள் கடும்பஞ்சம் ஏற்படுமென்று திரிகால ஞானத்தால் அறிந்து தனது ஜைன மாணுக்கர்களை அழைத்துக்கொண்டு தென்னுடுகளுக்கு வந்தாராம். அவ்வாறு வரும்போது, கன்னட நாட்டில் சிரவணபௌகுளம் என்ற ஊரில் வரும்போது தனக்கு முடிவுநாள் வருகிறதென்று உணர்ந்து ஒரு மாணுக்கரை மட்டும் தன்னிடம் வைத்துக்கொண்டு மற்றவர்களைச் சோழ பாண்டிய நாடுகளுக்கு அனுப்பி வைத்தாராம். அவ்வாறு தன்னுடன் சேவைக்காக நின்றுவிட்ட மாணுக்கன்தான் சந்திரகுப்தனென்ற அரசனே ஆவான்.

அவ்வரசன் வெகு ஆண்டுகள் ஆட்சி செய்துவிட்டுத் தன் மகன் பிந்துசாரனிடம் பட்டத்தைத் துறந்துவிட்டு

ஜைனமதத்தின்படி தவம் செய்யும் பொருட்டுத் துறவி யானுன்.

அப்போது சிறந்த சமண ஆசாரியரான பத்ரபாகு விடம் மாணுக்கனுகி அவரோடு தென்னுட்டுக்கு வந்து இறுதிவரைக்கும் தன்குருவுக்கு சிசுருஷை செய்து வந்து தன் குரு நிருவாணம் அடைந்தபோது தான் உடன் இருந்து சடங்குகளை நடத்திஞனும். ஆசாரியர் பரமபதம் அடைந்த பிறகும் 12 ஆண்டுகள் அங்கே தவம் கிடந் தானும். வடநாட்டில் வற்கடம் நீங்கிப்போகத் தெற்கே சென்ற மாணுக்கர்கள் திரும்பி வந்ததும் அவர்களுக்கு வரவேற்புத் தந்து பிறகு அவனும் மேற்பதவி அடைந் தானும்.

தற்போதும் சிரவண பௌகுளம் என்ற இடத்தில் பத்திரபாகு வீடடைந்த குகை காட்டப்படுகின்றது. அந்தக் குன்றும் சந்திரகிரி என்ற பெயரால் வழங்கு கின்றது. அக்குன்றின் உச்சியில் சந்திர குப்த பஸ்தி என்ற கோயில் தொகுதி இருக்கின்றது. அவைகளில் மிகப் பழைய கோவிலில் பத்ரபாகு சந்திரகுப்தன் ஆகிய வர்களின் வாழ்க்கை வரலாறுகள் தொண்ணூறு காட்சி களாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் அங்கே உள்ள கல்வெட்டுக்களில் ஜைனர்களின் குடியேற்றமும் பத்திரபாகு சந்திரகுப்தன் இவர்களுடைய பெயர்களும் காண்கின்றோம். இதே செய்தியை ஒன்பது, 12, 15 நூற்றுண்டுக் கல்வெட்டுக்களும் ஆமோதிக்கின்றன.

இனி, சில வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் மேற் கண்டபடி நடந்த சரிதமானது கி. மு. 50 அல்லது 60 ஆண்டுகளில் நடந்ததெனக் கூறுவர். " அப்போது உஜ்ஜினியில் இருந்த முக்கால உணர்ச்சியுள்ளவரான பத்திரபாகு என்ற ஜைன முனிவர் தம்முடன் இருந்த

ஜைன சங்கத்தாரை நோக்கி இங்கே 12 வருஷம் கொடிய வறட்சி வரக்கூடும், வேறிடம் செல்லுக' என்று சொல்ல, அவருடைய ஆணையின்படி எல்லாரும் தென் திசைக்கு ஏகித் தமிழ்நாடு உலாவி, தவள சரோவரம் என்ற சிரவண பௌகுளத்தில் தங்கினார்கள். அவர்களால் தென்னாட்டில் ஜைனமதம் பரவியது. ஜைனசங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. கல்வி கேள்விகளில் சிறந்த பெரியார்கள் நூல் ஆராய்ந்தார்கள். அவர்களுக்குள்ளே ஒருவராக இருந்த சிம்மநந்தி என்பவர் கங்க ராஜ்யத்தை ஸ்தாபித்தார்" என்று ஆராய்ச்சியாளர்கள் எழுதியிருக்கின்றார்கள். இந்தக் கங்க ராஜ்யம் காவிரிக்கரையிலுள்ள தலைக்காட்டைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்த ஒரு கன்னடிய வம்சம் என்க. தமிழ்நாட்டுச் சமணப் புலவர்களின் வரலாறும் இவ்வரலாற்றுப் பகுதியை ஒருவாறு ஆமோதிக்கிறது. சந்திரகுப்தன் காலத்திற்கும் இந்த வரலாற்றுக் காலத்திற்கும் மூன்று நூற்றாண்டுகள் வித்தியாச மிருப்பதைக் காணலாம்.

இனி, கன்னட நாட்டில் தலைக்காட்டைத் தலைநகராக் கொண்டு ஆண்டுவந்த கங்க வம்சம் பெரும்பாலும் சமண சமயத்தையே போற்றி வந்தது என்று அறியவேண்டும். அந்த வம்சம் 9-நூற்றாண்டுகள் வரை ஆட்சி செய்தது. பெரும்பான்மை அரசர்கள் ஜைனர்களாய் இருந்தது மன்றி ஜைனக் குரவர்களுக்குத் தானங்களும் செய்திருக்கின்றார்கள். முதல் மன்னன் கொங்கணி வர்மன் (103 கி. பி.) சிம்மநந்தி என்ற ஜைன ஆசிரியரின் உபதேசத்தின்பேரில் மண்டலி என்ற ஊரில் ஒரு சைத்திய ஆலயத்தைக் கட்டினான். ஐந்தாவது நூற்றாண்டிலிருந்த அவினீதன் என்ற அரசன் புன்னாட்டிலிருந்த ஜைனர்களுக்குத் தானங்கள் செய்திருக்கின்றான். அவனுடைய

மகன் துர்வினீதன் என்ற புகழ்பெற்ற அரசன் ஜைன சமயத்தை மிகவும் போற்றினது மன்றி, இலக்கிய அறிவிலும் சிறந்தவன் எனப் பெயர் பெற்றிருந்தான். அவனுடைய ஆசிரியன் சத்தாவதாரம் என்ற நூலை எழுதிய ஜைன இலக்கண ஆசாரியனான பூச்சியபாதர் என்பவர். அவ்வரசன் இலக்கிய இலக்கணங்களில் தேர்ச்சி பெற்றுப் பாரவி இயற்றிய கிரதார்ஜ்ஜுனீயம் என்ற காவியத்திற்கு உரைஎழுதினான். மேலும் குணாட்டியர், பைஷாச பாஷையில் எழுதிய பிருகத் கதையை வடமொழியில் இயற்றினான். அதனையே கொங்கு நாட்டு விஜய மங்கலத்தில் இருந்த கொங்குவேளிர் என்ற புலவர் பெருமான் தமிழில் பெருங்கதை என்ற பெயரில் ஒரு புகழ்பெற்ற நூலை இயற்றினார். இவைகள் ஜைன நூல்களே. இவ்வரசனைப் போலவே கங்கவம்சத்தில் மற்றும் சிலமன்னர்கள் கஜசாஸ்திரம் போன்ற பல நூல்களை இயற்றி உள்ளார்கள்.

9வது நூற்றாண்டில் இராசமல்லன் என்ற மன்னன் காலத்தில் அவனுடைய மந்திரியும், தளகர்த்தனுமான சாமுண்டராயன் சிரவண பெளகுளத்தில் கோமடேசுவரர் உருவச்சிலையை நாட்டுவித்தான். அந்த உருவச்சிலை அங்குள்ள பெரியகுன்றில் நிறுத்தப்பட்டுள்ளது. இந்திர பெட்ட என்ற அந்தக் குன்று கடல் மட்டத்திற்கு மேல் 3250 அடி உயரமும் நிலமட்டத்திற்குமேல் 400 அடி உயரமும்கொண்டது. அது ஒரே ஒரு பெரும்பாறை. அதில் நிறுத்தப்பட்டிருக்கும் வெள்ளைக்கல் சிலையானது 57 அடி உயரமுள்ளது. புன்னகை கொண்ட முகத்தோடு இருக்கிறது. அத்துணை அற்புதம் கொண்ட உருவம் வேறு எங்குமில்லை. 983-கி. பி. யில் அது ஸ்தாபிக்கப்பட்டது.

அச்சிரவண பௌகுளத்தில் அக்காலத்தில் ஏற்பட்ட குருபீடம் நாளது வரைக்கும் இருக்கின்றது. தென்னாட்டிலுள்ள சமணர்களுக்கெல்லாம் அது தலைமைத் தானம் வகிக்கின்றது. அக்குருக்களினுடைய பட்டம் சாருகீர்த்தி பண்டிதாசாரியர் என்பது. மலையூர் என்ற இடத்தில் மற்றொரு மடம் இருந்தது. அதன் பெயர் ஹேமாத்ரி பீடம் என்பது. அது இப்பொழுது மறைந்து விட்டது.

கன்னட நாட்டில் ஏற்பட்ட 3வது மடம் ஹம்ச மடமாகும். அது 8வது நூற்றாண்டில் தொடங்கப் பட்டது. அதில் இருந்த ஆசாரியர்கள் பல அருமையான நூல்களை எழுதியிருக்கின்றார்கள். பல மன்னர்களுக்குக் குருக்களாகவும் இருந்திருக்கிறார்கள். அப்பீடத்துப் பட்டம் தேவேந்திர தீர்த்த பட்டாரகர் என்பது.

10வது நூற்றாண்டு முதல், மூன்று நூற்றாண்டுகள் ஹொய்சலர்கள் கன்னட நாட்டை ஆண்டார்கள். அவர்களில் சிலர் ஜைனர்கள். 1104 முதல் 1141 வரை ஆண்ட பிட்டிதேவன் சமணனாக இருந்தான். அவனே தன் நாட்டை மிகவும் பெரிதாகப் பெருக்கினவன். அவனுடைய மனைவி சாந்தலா தேவி ஜைன மதத்தைச் சார்ந்தவள். அவ்வரசன் பின்னால் இராமாநுஜரின் சீடனாகி வைணவ மதத்தை ஏற்றுக்கொண்டான்.

மேலே கண்ட ஜைன மடங்களே அன்றிப் பல ஜைனக் கோயில்களும் கன்னட நாட்டில் உண்டு. அவற்றில் மிகப் பழைய கோயில்கள் துவார சமுத்திரம் என்னும் ஹளேபீடு என்ற ஹொய்சலத் தலைநகரில் இருக்கின்றன. அவைகள் ஆதிநாதர், சாந்தீசுவரர், பார்சுவநாதர் என்பவர்களுடைய ஆலயங்கள்.

இனிக் கடற்கரை யோரத்தில் உள்ள துளுநாட்டில் ஜைன மதம் மிகவும் பெருகியிருந்தது. அதற்குச் சான்றுகள் ஆலயச் சின்னங்களேயன்றி மக்கள் தொகை யும் ஆகும். சென்னை நாட்டில் அதிகமான ஜைனர் கள் கன்னடம் ஜில்லாவில்தான் வசிக்கிறார்கள். அவர் களுக்கெனக் கோயில்கள், மடங்கள், சம்ஸ்கிருத பாட சாலைகளும் உண்டு. கார்க்கல் என்ற இடத்தில் ஒரு குன்றின் பேரில் ஓர் உயர்ந்த கோமடேசுவரர் சிலை நிற் கிறது. அதற்கு எதிரே மற்றொரு குன்றில் தீர்த்தங்கரர்க ளுடைய பஸ்தி ஒன்று இருக்கிறது. முடுபிதிரி என்ற ஊரில் 1000-கால் கொண்ட ஒரு ஜைன ஆலயம் இருக் கின்றது. அங்கே ஜைன சித்தாந்த கலாசாலை ஒன்றும் உண்டு. வேணூர் என்ற இடத்தில் மற்றொரு கோமு டேசுவரர் சிலையிருக்கிறது. பட்கல் என்ற ஊருக்கருகே பல ஜைன ஆலயங்கள் இருக்கின்றன. மேலும் தருமஸ் தலம் என்ற இடத்தில் உள்ள பெரிய இந்து ஆலயத்தை ஒரு ஜைனக் குடும்பம்தான் பரிபாலிக்கின்றது. அவ் விடத்தில் ஒரு ஜைனர் ஆலயமும் உண்டு. இவ்வாறு கன்னட நாடு முழுவதும் ஜைன சமயம் ஒருகாலத்தில் பரந்து இருந்ததென்று அறியலாம்.

மேலும் கன்னட இலக்கியத்திலும் ஜைனர்களு டைய பெருமை நுழைந்திருக்கின்றது. அதில் இலக் கணம் காவியம் சாஸ்திரம் முதலியவைகளில் பெருத்த பங்கு ஜைனர்களுடையதே. பண்டைய நூல்கள் எல்லாம் அவர்கள் எழுதினவையே. சிறந்த புலவர் களும் அம்மதத்தினரே ஆவர். கங்கவம்ச ஸ்தாபகர் சிம்ம நந்தி ஒரு பெரிய புலவர். துர்வனீதன் என்ற அரசனும் அவனுடைய குரு பூச்சியபாதரும் சிறந்த புலவர்களே. சூடாமணி என்ற ஜைனநூல், 9600 பாடல்களைக்

கொண்டதாம். பம்ப பாரதம், பம்ப ராமாயணம் எழுதினவர் ஜைனர்தான். பொன்ன, ரன்ன என்ற புலவர்களும் ஜைனர்களே. தீர்த்தங்கரர்களுடைய புராணங்களையும், கன்னட இலக்கணங்களையும் எழுதினவர்கள் ஜைனர்கள் தான். இவ்விதமாக நிகண்டுகளையும் கன்னட இலக்கியத்தில் பெரும்பான்மையான பண்டைய நூல்களையும் ஜைனர்களே இயற்றியிருக்கின்றார்கள். ஆகவே தான் கன்னட நாட்டில் ஜைன சமயம் தற்போதும் விளங்கிக்கொண்டிருக்கின்றது.

இனி தெக்கினத்து மற்றொரு பகுதியாகிய தெலுங்கு நாட்டிலும் ஜைனர்களுடைய ஆதிக்கம் முன்னாளில் இருந்திருக்கின்றது. ஆனால் கன்னடத்தைப் போல அத்தனை வலுவாக அது இருக்கவில்லை. பெரிய ஆலயங்களும் அங்கே காணோம். பெரிய காவியங்களும் இல்லை. அங்கங்கே ஒவ்வொரு இடத்தில் சிறிய கோவில்களும், சிறிய நூல்களுமிருக்கின்றன. உதாரணமாக விஜயநகரத் தலைநகரில் ஒரு சிறு ஜைன ஆலயம்தான் உண்டு. ஆனால் தமிழ் நாட்டிலோ ஜைன சமயம் சிறிது அதிகமாகவே புகுந்திருந்தது. ஆலயங்களும் உண்டு. இலக்கியங்களும் இயற்றப்பட்டன. அதனைப் பற்றிச் சிறிது விரிவாகக் கூறுவோம்.

அதிகாரம்—4

தமிழ்நாட்டில் ஜைனம்

தமிழ் நாட்டில் ஜைனம் என்ற பெயர் சமணம் என்ற சொல்லாலேயே வழங்குகின்றது. ஜைனம் என்ற சொல் ஜினன் என்ற பெயரிலிருந்து வந்தது. ஜினன் என்பது அருகதேவனுடைய பெயர்களில் ஒன்று. ஜினனுடைய சமயம் ஜைனம். சமணம் என்ற சொல் சிரமணர் என்ற சொல்லின் மருவு ஆகும். மேலும் சமணம் என்பது அமணம் என்றும் தமிழில் வழங்கும். தற்காலத்தில் சமணசமயம் தமிழ்நாட்டில் மிகக் குறுகி இருக்கிறதெனினும் முன்காலத்தில், மிகப்பரவி இருந்தது என்று அறியலாம். அதற்குச் சான்றுகள் இருவகைப் படும். தமிழ் இலக்கியத்தில் உள்ள சமண நூல்களும், அவைகளை இயற்றிய புலவர் வரலாறுகளும் ஒருவகை யாகும். சமண ஆலயங்கள், சமணச் சின்னங்கள், அவை களைப்பற்றிய கல்வெட்டுக்கள் என்பன இரண்டாம் வகை யாகும். இவ்விரண்டு வகைகளையும் ஆராய்ந்தால், சமண சமயத்தின் பரப்பு முழுவதையும் நன்கு அறியலாம்.

முந்திய அதிகாரத்தில், வடநாட்டில் ஏற்பட்ட பெரும் பஞ்சத்தை முன்னிட்டுப் பத்திரபாகு என்ற ஆசாரியர் தென்னாட்டிற்குச் சமணப் பெருமக்களை அழைத்துவந்ததைப் பற்றிக் கூறியிருக்கிறோம்.

அவ்வாறு, சமண அறிஞர்கள் தெற்கே வந்த செய்தியை தமிழ் இலக்கியமும் கூறுகின்றது. சங்க காலத்திலேயே சமண அறிஞர்கள், தமிழை ஆராய்ந்து அரிய நூல்களை இயற்றி உள்ளார்கள். அவைகளிலே சிறந்தவை நாலடியார், பழமொழி முதலியன. நாலடியார் தோன்றியதின் வரலாறு மேலே சொன்ன

சமணக் குடியேற்றத்தை மெய்ப்படுத்துகிறது. பஞ்சத்திற்காக அஞ்சி வடநாட்டிலிருந்து வந்த நூற்றுக்கணக்கான சமணப்புலவர்கள் பாடிய பாடல்களைப் பதுமனர் என்ற புல்வர் தொகுத்தவகையில் அந்நூல் ஏற்பட்டதாம். இனி பதினெண் கீழ்க்கணக்கில் ஒன்றாகிய திருக்குறளையும் சமணர் இயற்றிய நூல் என்று கூறுவாருண்டு. கடவுள் வாழ்த்தில் உள்ள சொற்களும் கருத்துக்களுமே அந்தக் கொள்கையை வற்புறுத்துமென்பர். (ஸ்ரீபுராணத்தின் முகவுரை காண்க.) பின்னர் தோன்றிய சிந்தாமணி, சிலப்பதிகாரம், சூளாமணி, நீலகேசி, யசோதர காவியம், மேருமந்திர புராணம் முதலிய நூல்கள் சமணச் சிறப்பையும், கொள்கைகளையும் எடுத்துக் கூறுவன. பின்னர் தோன்றிய நன்னூல் முதலிய இலக்கணங்களும், திவாகரம் முதலிய நிகண்டுகளும், கலிங்கத்துப்பரணி போன்ற பிரபந்தங்களும் சமண அறிஞர்கள் தமிழ்மொழிக்குத் தந்திருக்கும் மேன்மையை எடுத்து உரைக்கின்றன.

மேலே கூறிய இலக்கிய இலக்கணங்களே யன்றிச் சமயநூல்களும் சமண முனிவர்களால் எழுதப்பட்டுள்ளன. அவைகள் பெரும்பாலும் வடமொழி கலந்த நடையில் எழுதப்பட்டுள்ளன. அவ்வித நடை மணிப்பிரவாள நடை என்று பெயர் பெறும். இதனைப் பின்பற்றித்தான் வைணவர்களும் அதே நடையில் தங்கள் வியாக்யானங்களை (பகவத் விஷயம்) எழுதினார்கள். சமணர்களுடைய சமய நூல்களில் சிறந்தது ஸ்ரீபுராணம். அண்மையிலே இதனைச் சென்னைப் பல்கலைக் கழகத்தார்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் சமணக் கொள்கைகள் தெளிவாக எழுதப்பட்டுள்ளன. மேலும் நீலகேசி என்னும் செய்யுள் நூல் சமண சமயத்தின் கொள்கைகளை வற்புறுத்தியும், பௌத்தம் முதலிய பிற சமயங்

களைக் கண்டித்தும் எழுதப்பட்டுள்ளது.* இவ்வகை களில் தமிழ் இலக்கியத்தில் சமணர் ஒரு சிறந்த பங்கு எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். சிறு பிரபந்தங்களி லும் அவர்களுடைய உதவியைக் காணலாம். திருக்கலம் பகம், நூற்றந்தாதி, நரிவிருத்தம், கனநூல் முதலிய சிறு நூல்கள் எழுதப்பட்டுள்ளன. பாவை நூல்கள், பள்ளி எழுச்சி, தனிப்பாடல்கள் முதலிய பலவும் காணலாம். அறநெறிச்சாரம் என்பது அவர்கள் இயற்றிய ஒரு நீதி நூல் ஆகும்.

இனி, சமணர்களுடைய சமய நிலையங்களும் தமிழ் நாட்டில் கணக்கில்லாமல் இருக்கின்றன என அறிய வேண்டும். அற்புதமான வேலைப்பாடுகள் கொண்ட பண்டைய நிலையங்களைத் தமிழ்நாடு முழுவதும் காணக் கூடும். அவைகளில் சமணர்களுடைய வரலாற்றுப் பகுதிகள் சித்திரிக்கப் பெற்றிருக்கின்றன. தற்காலத்தில் சமணர்களுடைய ஆதிக்கம் விளங்கும் இடங்கள் திரு நறுங்கொன்றை, தீபங்குடி, சித்தாமூர், பெருமண்டூர், திருப்பருத்திக்குன்றம், ஆரணி முதலியன. அவ்விடங் களில் தமிழ்ச் சமணர்களுடைய இருப்பிடங்களும் ஆலயங்களும் இருக்கின்றன. ஆலயங்களிலே பண்டைய ஆலயங்களே அன்றித் தற்கால ஆலயங்களுமுண்டு. எல்லா வற்றிலும் வழிபாடுகள் நடக்கின்றன. குருக்கள்மார் களும் இருக்கின்றார்கள். சமண மடாலயங்களுமுண்டு. அம்மடாலயங்களில் அவர்களுடைய சமயநூல் தொகுதி களும் வைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டிலுள்ள சமணர்கள் பெரும்பாலும் படித்தவர்கள். தங்களுடைய சமயக் கொள்கைகளை நன்கு அறிவார்கள். அக்

*ஜீவசம்போதனை என்பது மற்றொரு அரிய சமய நூல்.

கொள்கைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளார்கள். தென்னாட்டுச் சமணர்கள் எல்லாரும் திகம்பர மரபுக் கொள்கைகளை உடையவர்கள். ஆலயங்களில் எழுந்தருளி யிருக்கும் மூர்த்திகளும் திகம்பர மூர்த்திகளே. பொதுவாக ஆலயங்கள் மிகத் தூய்மையாக வைக்கப் பட்டிருக்கின்றன என்று கூறவேண்டும்.

பண்டைக்காலம் முதல் தொண்டை நாட்டின் தலைநகர் காஞ்சி ஆகும். அங்கே எல்லா சமயத்தார்களும் தங்கள் தங்கள் நிலையங்களை வைத்துக்கொண்டு தங்கள் பெருமைகளைப் பிரசாரம் செய்து அவைகளை நிலைநாட்ட முயன்றார்கள். பல்லவர்கள் காலத்தில் சைவம், வைணவம், பௌத்தம், ஜைனம் முதலிய சமயங்கள் அங்கே வழங்கிவந்தன. பௌத்த சமயம் சில சின்னங்களை மட்டும் விட்டுவிட்டு மறைந்துபோயிற்று. ஆனால் சைவம், வைணவம், சமணம் இந்த மூன்றும், சிவகாஞ்சி (பெரிய காஞ்சி), விஷ்ணுகாஞ்சி (சின்ன காஞ்சி), ஜினகாஞ்சி (திருப்பருத்திக் குன்றம்) என்ற பெயர்களோடு தற்போதும் வழங்கிக் கொண்டிருக்கின்றன. திருப்பருத்திக் குன்றத்தில் அருமையான சமணக் கோயில்கள் இரண்டு இருக்கின்றன. அவற்றில் பெரிய கோயிலின் முகட்டில் அழியாதவண்ணங்களில் தீர்த்தங்கரர்களின் வரலாறுகள் தீட்டப்பெற்று இருக்கின்றன. இக்கோயிலை வழிபாடு செய்து கொண்டிருக்கும் ஜைனக் குடிமக்கள் இங்கே வாழுகிறார்கள். இக்கோயிலைப் பற்றி ஒரு பெரிய வரலாற்று நூல் ஒன்று சென்னை அரசியல் காட்சிச் சாலையார் பல படங்களோடு வெளியிட்டுள்ளார்கள். கோயிலுக்குள்ளே உள்ள மூர்த்திகளும், கோயில் சுற்றிடங்களும் வெகு தூய்மையாக வைக்கப்பட்டிருக்கின்றன.

இனி, பல்லவர் காலத்தில் காஞ்சி நகருக்குத் துறை முகமாக இருந்தது மாமல்லபுரம் (மகாபலிபுரம்). இந்த இடத்திலிருந்த இயற்கைப் பாறைகளைச் சமய நிலையங் களாக இயற்றினவர்கள் பல்லவருடைய சிற்பிகள். அக் காலத்தில் எந்தக் கருத்தோடு ஆக்கியோர்கள் இயற்றி னார்களோ அவற்றை முழுவதும் பிற்காலத்தவர்கள் மறந்துவிட்டார்கள். தற்கால ரீதியின்படி சரித்திர ஞானமில்லாத மக்கள் அச் சிற்பங்களைப் பாரதக் கதை களோடு பிணைத்துவிட்டார்கள். இவைகளை ஆராய்ந்த பண்டைக் கலை அரசியல் பகுதியார்களும், பாண்டவர்கள் பெயர்களாலே அவைகளை வழங்கத் தொடங்கினார் கள். மாமல்லபுரத்தில் உள்ள சிற்பச் செல்வங்களில் அர்ச்சுனன் தபசு என்ற பெயரால் பிசகாக வழங்கும் சிற்ப ஓவியம் மிகச் சிறந்தது. பிளவுபட்ட ஒருபெரும் பாறையில் தற்காலத் திரைப்படம்போல் சகரசக்கிர வர்த்தியின் வரலாற்றை அருமையாகத் தீட்டினவன் எந்த நிபுணனோ அறியோம். கணக்கற்ற நூற்றாண்டுகளாக அவ்வுருவச் சித்திரம் மக்களை வியப்படையச் செய்கின் றது. 2-வது தீர்த்தங்கரர் அஜிதநாதர் புராணத்தில் கூறப்படும் சகரசக்கிரவர்த்தியின் கதையே இங்குத் தீட்டப்பட்டுள்ளது. முழுவிவரம் அறிய வேண்டின், திரு. சீனி வேங்கடசாமி அவர்கள் எழுதிய "ஜைன சிற்பம்" என்ற நூலையும், 'சித்தாந்தம்' "சைவச் சிற்பமோ சமணச் சிற்பமோ?" (1947 - பக். 282) என்ற கட்டுரையையும் படித்துக்கொள்க.

இனி, ஆர்க்காடு வட்டங்களில் திருநறுங்கொன்றை, திருமலை, மாமுண்டூர், தீபங்குடி, சித்தாமூர் முதலிய பல சமணத்தலங்கள் இருக்கின்றன. அவ்விடங்களில் உள்ள

குடைகோயில்கள் எல்லாம், பல்லவர்கள் காலத்தில் வெட்டப்பட்டவையே. குரங்கணின்முட்டம், மகேந்திர வாடி, திருநறுங்கொன்றை, பனகுடி முதலிய இடங்களி லுள்ள வெட்டு மண்டபங்கள், சமணச் சிற்பிகளால் ஆக் கப்பட்டவை. பிற்காலங்களில் சிலமண்டபங்களில் சைவ, வைணவ மூர்த்திகள் புகுந்துகொண்டன. திருநறுங் கொன்றையில் உள்ள பாறைக்கோயில் மிக அருமையாக இருக்கின்றது. அதனை ஒட்டினாற்போல ஒரு மடாலயமு முண்டு. போளூருக்கு அடுத்த திருமலையில் சமணக் கல் வெட்டுகளும் இருக்கின்றன. தீபங்குடி புலவர் பெருமா ளான ஜெயங்கொண்டார் தோன்றிய இடம். ஆரணியில் தற்காலச் சமணக் கோயில்கள் உண்டு. பெரும்பான்மை யாகப் பல்லவர் காலத்து மகேந்திரவர்மன் சைவன் ஆவதற்கு முந்தி அவன் சமணசமயத்தில் இருந்தபோது இயற்றிவைத்த குடைகோயில்கள், கல்வெட்டுக்கள், சின்னங்கள் இவைகளே காணப்படுகின்றன. (6, 7 - நூற்றாண்டுகள்.)

சோழ நாட்டில் தஞ்சைவட்டத்தில் குன்றுகளும், பாறைகளும் இல்லை என்று அறிவோம். ஆகவே, சமணக் குரவர்கள் அங்கே தவம் செய்யச் செல்லவில்லைபோலும். சமண ஆலயங்களோ, மற்றச் சின்னங்களோ அங்கே அகப்படுவதில்லை. என்றாலும் திருநீடூர் என்ற பாடல் பெற்ற கோயிலில் இரண்டு கல்வெட்டுச் செய்யுள்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் "காரிகை" இயற்றிய அமுதசாகரனார் என்ற சமண முனிவரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. ஆகவே அந்நாட்டிலும் 10-நூற்றாண்டுகளின் முன் சமணம் செழித்திருக்கவேண்டும் அல்லவா ?

இனி, திருச்சி வட்டத்தில் தாயுமானவர் கோயில், திருவெள்ளறைப்பாறை, ஆறுநாட்டார்மலை முதலியவை களில் குடைகோயில்களும், சமணர் படுக்கைகளும் இருப்பதைப் பார்க்கின்றோம். அவற்றுள் ஆறுநாட்டார் மலை மிகவும் பழையது. திருச்சிராப்பள்ளி என்ற பெயரே சினப்பள்ளி அல்லது ஜைனப்பள்ளி ஆக இருக்கக்கூடும் என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின் றனர்கள்.

பாண்டி நாட்டிலோ சமணச்சின்னங்கள் மிகுதியாக அகப்படுகின்றன. திருத்தொண்டர் புராணமும், திரு வாலவாய்ப் புராணங்களும், இச்செய்தியை வற்புறுத்து கின்றன. சம்பந்தர் நாளில் கூன்பாண்டியன் சமணத்தி லிருந்து சைவத்திற்கு மதமாற்றம் செய்தது யாவரும் அறிந்ததே. அக்காலத்தில் மதுரையைச்சுற்றிலும் எட்டு குன்றுகளில் 8000-சமணக் குருக்கள்மார் இருந்ததாக அறிகிறோம். இக்கருத்தை சம்பந்தர்பெருமானே "ஆனை மாமலை ஆதியாய இடங்களில்பல அல்லல்சேர்" என்று கூறிஇருக்கின்றார். அவ்வெட்டுமலைகள் ஆனைமலை, பசு மலை, இடபமலை, நாகமலை, பன்றிமலை முதலியன. இதனை "எண்பெருங் குன்றத்து, எண்ணாயிரவர்" என்று சேக் கிழார் கூறுகின்றார். அக்குன்றுகளின் பெயர்களைக்கூறும் பழைய செய்யுளும் ஒன்று உண்டு. அது வருமாறு:—

"பரங்குன்று, ஒருவகம், பப்பராம், பள்ளி
யருங்குன்றம், பேராந்தை, யானை — இருங்குன்றம்
என்றெட்டு வெற்பும், எடுத்தியம்ப வல்லார்க்கு
சென்றெட்டு மோபிறவித் தீங்கு"

இக்குன்றுகள் மதுரையைச் சுற்றி யிருப்பதோடு, அவை களில் சமணர்கள் வசித்த சின்னங்களும், குடைவரை

G3 N53

களும் இன்றைக்கும் காணலாம். அவைகளைப்பற்றிக் கல்வெட்டு ஆராய்ச்சி வெளியீடுகள் விவரமாகக் கூறுகின்றன. மேலும் திருவிளையாடல் புராணத்தின்படி ஒரு வரலாறும் உண்டு. காஞ்சியில் ஆண்ட ஒருபல்லவன், மதுரைப்பாண்டியன்மீது பகைகொண்டு வடநாட்டிலிருந்த எட்டுமலைகளில் தவம் செய்துவந்த 8000—குரவர்களைத் தருவித்து அபிசார வேள்வி செய்யும்படி ஏவினனும். அவ்வமணக் குரவர்கள் வேள்வி இயற்றி நாகம், பசு, இடபம், ஆனை, பன்றி முதலியவைகளை எழுப்பி மதுரையின்மீது ஏவினார்களாம். அப்போது பாண்டியன் போர் செய்யமுடியாது இறைவனைத் துதிக்க, அவைகள் மலைகளாகச் சபிக்கப்பட்டனவாம். அவைகளே ஆனைமலை முதலியவைகள் ஆயினவாம். இக்கதையின் உட்கருத்து வடநாட்டு மலையிலிருந்த சமணக் குரவர்கள் தென்னாட்டு மலைகளில் வசிக்கத் தொடங்கினார்கள் என்று கொள்ளலாமல்லவா? மேலும் நாலடியார் பாடிய புலவர்கள் இந்த எட்டுமலைகளில் தவம் புரிந்தவர்கள் என்று வேறு ஒருசெய்யுள் கூறுகின்றது.

> "வண்பெருஞ் சிறப்பின் மாதாம் பதிந்தாங்
> கென்பெருங் குன்றத் திருந்த முனிவரர்".

> "எண்பெருங் குன்றத் தெண்ணாயிர மிருடி
> மண்பொருந்தப் பாடிய பாநானூறும்"

TAMIL NADU ARCHIVES
MADRAS
112046

என்பது பழைய செய்யுட்பகுதி. இந்த எட்டுக் குன்றுகளிலும் சங்கத்தார் காலம் முதற்கொண்டே 8000 குரவர்கள் குரு பரம்பரைபோல வாழையடி வாழையாக இருந்து தவம் செய்து கொண்டு சமண சமயத்தைப் பெருக்கியிருக்க வேண்டும். கூன்பாண்டியன் நின்றசீர்

நெடுமாறனாக மாறிய காலத்தில் இக்குரவர்களுடைய செல்வாக்கு குறைந்திருக்க வேண்டும்.

புதுக்கோட்டைச் சீமையில் சமணர்கள் தவம் செய்வதற்கு ஏற்ற சிறு குன்றுகள் உண்டு. குடிமியா மலை, நார்த்தாமலை, சிற்றன்னவாசல் முதலிய இடங்கள் மிகப் புகழ்பெற்றவை. அவைகளில் சிற்றன்னவாசலில் மிகச் சிறந்த ஓவியங்கள் தீட்டப்பெற்றிருக்கின்றன. ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகியும் வண்ணங்கள் சிறிதும் மழுங்கவில்லை. மலர்கள், பிராணிகள் முதலியவைகளின் உருவங்கள் இயற்கையையும் நாணச் செய்கின்றன. அங்கே குவிந்த பாறைகளுக்கு அடியில் சமணர் தவம் செய்த கல்படுக்கைகள் இருக்கின்றன.

இனி, தென் பாண்டி நாட்டிலும் சமணர்களுடைய சின்னங்களைக் காணலாம். தனிக் குன்றுகளைச் சமணக் குரவர்கள் தவம் செய்வதற்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கோயில்பட்டிக்கும், சங்கரன் கோயிலுக்கும் இடையில் இருக்கிற கழுகுமலை சமணர்களுடைய சிறந்த வாசத்தலமாக இருந்தது. அந்த மலையின் அடிவாரத்தில் முருகப்பிரான் ஆலயம் இருக்கின்றது. மலையின்மேல் ஏறினால் செங்குத்தான பாறையில், அவர்கள் தவம் செய்த இடங்களும், அவற்றிற்குமேல் தவம் செய்த பெருமக்களின் வடிவங்களும், அவைகளின் கீழ் அவர்களின் பெயர்களும் வெட்டப்பட்டிருக்கின்றன. சமணத்தவசிகளில் ஆண்பாலருக்குக் குரவர்கள் என்றும், பெண்பாலருக்குக் குரத்திகள் என்றும் குறிக்கப்பட்டுள்ளன. இவ்விதமான உருவங்கள் 95 இருக்கக் காண்கிறோம். குரவர்களின் பெயர்களில் சில குணசாகரர், புட்பநந்தி, ஸ்ரீநந்தி, சாந்திசேனப் பெரியார், கனகவீர அடிகள், சிறுப்படாரர், சாத்தம்பலவிதவன், குறண்டிக்

காவிதி, விலேசந்திரகுரவர், சாந்திசேன அடிகள், ஆதித்த படாரர் முதலியன. குரத்திகளின் பெயர்களில் சில பழகிறக்காணிக் குரத்தி, மிளலூர்குரத்தி, ஸ்ரீவிஜய குரத்தியார், திருச்சாரணத்துக் குரத்திகள், மணிநங்கை, நாங்கூர் குரத்திகள், அரட்டநேமி குரத்திகள் முதலியன. இப்பெயர்களை ஞானசம்பந்தர் தேவாரப்பதிகத்தில் கண்ட பெயர்களாகிய 'சந்துசேனன், இந்துசேனன், தருமசேனன், கந்துசேனன், கனகசேனன், கனகநந்தி, புட்பநந்தி, பவணநந்தி, அனகநந்தி முதலிய பெயர்களோடு ஒப்பிட்டுக் காணலாம். இந்தமலை ஒரே பாறையாக நில மட்டத்தின்மேல் அண்ணுந்து நிற்கின்றது. அதன் சரிவுகளில் விழும் மழைநீர் பாறையின் அடியில் அழகிய சுனை நீர்களாகமாறி அக்கம்பக்கத்தாருக்குக் குடிநீர் வசதியைத் தருகின்றது. அது வற்றாத பொய்கை ஆகி இருப்பதில் அதன்கரையிலிருந்து மேல் நோக்கினால் அருமையான இயற்கைக் காட்சி தென்படுகின்றது. பாறையின் வடபுறச் சருவில் ஒற்றைக்கல் கோயில் ஒன்று குடையப்பட்டிருக்கின்றது. அது மூத்தப்பிள்ளையார் கோயிலாகும். வடக்கே இளாபுரியில் (Ellora) குடையப்பட்டிருக்கும் கைலாய நாதர் கோயிலின் குறுகிய வடிவம் இக்கோயில் பெற்றிருக்கின்றது. இத்தனை இயற்கைச் செயற்கை அழகுகளைக் கொண்ட இம்மலையில் தவம்புரிவதற்கு ஏற்ற வசதிகளைச் சமணக்குரவர்கள் செய்து கொண்டார்கள் என்றால் அவர்களுடைய பண்பாட்டைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா ? அக்காலத்துச் சமணப் பெருமக்களுடைய வாழ்க்கை, ஒழுக்கம், துறவு முதலியவைகளை இம்மலைப்பாறையே எப்போதும் பேசிக்கொண்டிருக்கின்றது.

தென்பாண்டி நாட்டில் ஏர்வாடி என்ற தலத்துக் கருகில் மற்ருெருபாறை இருக்கின்றது. அதனை பொட் டல்பாறை என்று சொல்லுவார்கள். அதில் சமணர் களுடைய படுக்கைகளும், கல்வெட்டுக்களும் இருக்கின் றன. கருங்காலக்குடி என்ற ஊருக்கருகில், பஞ்சபாண் டவர் குட்டு என்ற ஒரு குன்று இருக்கின்றது. அதி லுள்ள ஒரு குகையில் சில தவப்படுக்கைகள் வெட்டப் பட்டுள்ளன. பிராம்மி கல்வெட்டுகளும் உண்டு. அருகி லுள்ள பாறையில் வீற்றிருக்கும் சமணத்துறவியின் உருவம் செதுக்கப்பட்டிருக்கின்றது. அதன்கீழ் அஜ்ஜ நந்தியின் திருமேனி என்று வட்டெழுத்தில் எழுதப்பட் டிருக்கின்றது. மேலும் அம்மலையின் மேலே சிறிது தூரத்தில் மூன்று குகைகள் இருக்கின்றன. அவை களில் ஒன்றில் வட்டெழுத்தில் தமிழ்ப்பாட்டு ஒன்று எழுதப்பட்டிருக்கின்றது. அதன்படி "பள்ளி தரை யன்" என்ற ஒரு குறுநிலத் தலைவன் பாண்டியனுக்காக விமானம் முதலியவைகளைக் கட்டினன் என்று கூறப்பட் டுள்ளது. மேலும் பரதேசிப் போடை என்ற ஒரு பாறையில் ஒரு குகையில் சமண சின்னங்களும், படுக்கை களும் பிராம்மி கல் எழுத்துக்களும் காணப்படுகின்றன.

அதிகாரம்—5

கொங்கு நாட்டில் ஜைனம்

இதுகாறும் தமிழ் நாட்டில் உள்ள பல இடங்களைப் பற்றியும் கூறிவந்தோம். இனி கொங்குநாட்டில் புகுவோம். கொங்கு நாட்டின் பரப்பைப்பற்றி முதல் அதிகாரத்திலேயே கூறியிருக்கிறோம். அப்படிப்பட்ட பரந்த இடத்தில் சமணசமயம் எவ்வாறு தோன்றி, நிலையங்களை ஏற்படுத்தியது என்பதை ஆராய்வோம். பண்டைக்காலத்தில் கொங்கு நாட்டில் மலை அரண்களைக் கட்டிக்கொண்டு, வேளிர்கள் என்ற குறுநில மன்னர்கள் ஆட்சி புரிந்து வந்தார்கள். குமணன் தெற்கேயும் அதிகமான் வடகிழக்கேயும் ஓரி வடமேற்கேயும் ஆணை செலுத்திவந்தார்கள். எப்பொழுதும் அவர்களுக்குள் சண்டை சச்சரவுகள் இருந்துகொண்டே இருந்தன. நாட்டில் அமைதி காண்பது அரிது. சங்கத்தார் காலத்திற்குப்பின் கன்னடிய ஆதிக்கம் தெற்கே வரத் தொடங்கிற்று. கொங்கு நாட்டு வடக்கெல்லையில் காவேரிக்கு இருபுறமும் படிநாடு என்ற பெயரில் ஒரு பிரதேசம் இருந்தது. அது கங்கவாடியின் ஒரு பகுதி. கங்கவாடியைக் கங்க அரசர்கள் ஆண்டுவந்தவர்கள். காவிரியின் வடகரையில், தலைக்காடு என்ற ஒரு நகரத்தைக் கட்டி அதில் இருந்துகொண்டு கங்கவாடியை ஆண்டுவந்தார்கள். கி. பி. இரண்டாவது நூற்றாண்டு முதற்கொண்டு எட்டு நூற்றாண்டுகள் அவர்களுடைய ஆட்சி வலுவாக இருந்தது. அவர்கள் வலிவு அடைய அடையத் தெற்கே கொங்கு நாட்டுப் பிரதேசங்களை அந்நாட்டோடுசேர்த்துக் கொள்ளத் தொடங்கினார்கள். இந்தவகையில் கொங்கு

நாட்டின் பெரும் பகுதிகள் கங்கர்களின் ஆட்சியில் இருந்தன.

மேலே கூறியபடி கங்கர்கள் தொடக்கத்திலிருந்தே சமண சமயத்தில் பற்றுக் கொண்டவர்களாய் இருந்தார் கள். சமண ஆசாரியர்களைக் குருக்களாக அமைத்துக் கொண்டும், அவர்கள் சொற்படி ஜைன ஆலயங்களைக் கட்டியும், தானதருமங்களைச் செய்தும் வந்தார்கள். அவ்வாறு செய்து வந்தவகையில் சமண சமயம் கொங்கு நாட்டில் எளிதில் புகத் தொடங்கியது.

அந்த அரச வம்சத்தில் 5-வது நூற்றுண்டில் தோன்றிய தூர்வினீதன் என்ற அரசன் வடமொழியில் சிறந்த கல்விமாளுக இருந்தான் என்றும், அவனே பெருங்கவி பாரவி நூலுக்குப் பேருரை எழுதினுனென் றும், பிரகத் கதையை வடமொழியில் ஆக்கினுன் என் றும் முன்னரே கூறியிருக்கின்ளேம்.

அந்தக் காலத்தில் சமணசமயம் கொங்கு நாட்டில் பரவுவதற்கு மிகவும் அனுகூலங்கள் இருந்தன. குறும்பு நாட்டு விஜயமங்கலத்தைச் சுற்றிப் பெரும்பான் மையாகச் சமணர்கள் குடியேறினுர்கள். இந்நாட்டு மக்களையும் சமணசமயம் தழுவச் செய்தார்கள். அவர் களில் படித்தமக்கள் மிகுதியாகத் தோன்றினுர்கள். விஜயமங்கலத்தில் ஒரு பெரிய கல்விமான் இருந்தார். அவர் குறுநில மன்னராகவு மிருந்தார். அவருடைய சிறப்புப்பெயர் கொங்குவேள் என்பது. அவரே துர் வினீதன் எழுதிய பிரகத் கதையைத் தமிழில் ஒரு பெரும் காப்பியமாக்கிச் சமணக் கொள்கைகளைப் பரப்பினுர். அதுமுதல் சுற்றுப்பக்கங்களில் சமணசமயம் பரவிற்று. சமணருடைய தேவாலயங்களும் கட்டப்பட்டன. குறும்பு நாடு பூந்துறை நாடு முதலியவைகளில் சிறப்

பாகவும், வாரக்கா நாடு, காவடிக்கா நாடு, நல்லுருக்கா நாடு, வையாவி நாடு முதலிய நாடுகளில் பரவலாகவும், சமண சமயம் ஓங்கிற்று. அடியார்க்கு நல்லார், பவணந்தி முனிவர், குணவீரபண்டிதர் முதலிய புலவர் பெருமக்களும் தோன்றினுர்கள். இந்த வகையில் சமணர் சமயம் கொங்கு நாட்டில் புகுந்து செழித்து வந்தது.

சமணப் பெரியார்கள் தமிழ் இலக்கியத்திற்குப் பெருத்த உதவி செய்திருக்கிருர்கள் என்று முன்னமே கூறியிருக்கின்ரேம். அவ்வுதவி இரண்டு மூன்று வகைப் படும். ஏற்கெனவே தமிழ் நாட்டில் இருந்த தமிழ் இலக்கியத்தைப் பல வகைகளில் சிறப்பித்தது மட்டுமன்று, வடமொழியில் தங்கள் முன்னேர்கள் இயற்றியிருந்த இலக்கியங்களைத் தமிழ்ப்படுத்தியது ஒன்று. அவ்வாறு தமிழ்ப்படுத்தியபோது தங்கள் சமயக் கோட்பாடுகளைத் தமிழ் மொழியில் புகுத்திவைத்ததும் ஒன்ருகும். பொதுவாகத் தமிழ் மொழிக்குச் செய்த உதவி கொங்கு நாட்டிற்கும் செய்யப்பட்டது. அவ்வாறு கொங்கு நாட்டுக்குச் செய்த உதவி பெருங்கதை என்ற காவியத்தில் உருவாகி விளங்குகிறது. வடநாட்டில் வழங்கி வந்த உதயணன் சரித்திரத்தைத் தென்னுட்டுத் தமிழர் அறிந்துகொள்ளும் முறையில் அது தமிழ்ப்படுத்தப்பட்டது. வடநாட்டு இராமாயணக் கதையைத் தமிழருக்கு அறிவிக்கும் பொருட்டுக் கம்பர் எவ்வாறு பாடினுரோ, வடநாட்டு பாரதத்தை அதே கருத்தோடு பெருந்தேவனுர் வெண்பாவிலும், வில்லிபுத்தூரார் விருத்தத்திலும் எவ்வாறு இயற்றினுர்களோ, அதுபோலவே வடநாட்டு உதயணன் சரிதத்தைக் கொங்குவேளிர் தமிழ்ப்படுத்தினுர். ஆனுல் கம்பர் விருத்தப்பாவிலும், பெருந்தேவனுர் வெண்பாவிலும் ஆக்கினது போலன்றிக் கொங்குவேளிர் அகவற்

பாவிலே பாடியிருக்கின்ருர். சங்கத்தார் காலங்களில் புறநானூறு, அகநானூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு முதலிய அரும்பெரும் நூல்கள் அகவற்பாவாலேயே ஆக்கப்பட்டன. ஐம்பெரும் காப்பியங்களில் மணிமேகலை முழுவதும் அகவற்பாவே. சிலப்பதிகாரத்திலும் பெரும் பகுதிகளும் அகவற்பாவே. அவைகளைப் போலவே பெருங்கதையும் அகவற்பாவில் ஆக்கப்பட்டுள்ளது. மற்றப் பாவினங்களைக்காட்டிலும், அகவற்பா எளிதாகப் பாடக்கூடியது. எளிதாக இருப்பதினுல், சொல் அணி களும், பொருள் அணிகளும் வெகு இலகுவில் சுவைபட இயற்ற முடியும். அவைகளில் சொல் அணிகளைக் காட்டிலும் பொருள் அணிகள் வெகு நன்ருக அமைக்க முடியும். ஆசிரியவிருத்தம், கட்டளைக்கலித்துறை, யமக அந்தாதிகள் முதலியவைகளில் பொருள் அணிகளை இயற்றுதல் கடினம். படிப்பவர்களுக்குக் கருத்துக்களை எளிதாகக் காட்டமுடியாது. அரிய கருத்துக்களை உறுதி யாகவும் ஆணித்தரமாகவும் அறிவிக்கவேண்டுமென்ருல் அகவற்பாவே சிறந்தது.

மேலும், சரிதவரலாற்றை அழகுபெற எழுதுதற்கு அகவலே சிறந்ததெனக் கொள்ளவேண்டும். மணிமேகலை, சிலப்பதிகாரம் என்ற காப்பியங்கள் அகவற்பாவினுல் இயற்றப்பட்டனவாகையால் வெகு உறுதியான நடைப் போக்கைக் கொண்டிருக்கின்றன. அவைகளைப்போலவே கதை வரலாற்றைக் கூறுகிற பெருங்கதையும் அகவற் பாவையே தம் கவிதைக்கு வாகனமாகக் கொங்கு வேளிர் கொண்டிருக்கும் முறை மிகவும் போற்றத் தக்கது. பண்டைத்தமிழர்கள் வகுத்துக்கொண்ட இந்த முறையை, பின்னுல் வந்த தமிழ்ப்புலவர்கள் கைவிட்டு விட்டார்கள். தமிழர் பண்பாடு ஓங்கியிருந்த தஞ்சைச்

சோழர் காலங்களிலும் தங்கள் புகழ்களைக் கூறும் மெய்க் கீர்த்திகளை, அகவற்பாவிலேயே எழுதிவைத்துக் கொண்டார்கள். ஆனால் நடுக்காலத்தில் வந்த பெரும் புலவர்களோ வடமொழிச் செய்யுள் நடையைப் பின்பற்றித் தாம் அம்மொழியிலிருந்து, கடன்வாங்கி எழுதிக் கொண்ட நூல்களை வடமொழி யாப்புக்கிணங்க, விருத்தப்பாவிலே எழுதினார்கள். பெருங்கதையின் நடைப்போக்கை இராமாயண நடைக்கு ஒத்திட்டுப் பார்த்தால் வேற்றுமை நன்றாகத் தெரியும். கதை வரலாறுகளுக்கு விருத்தங்களைக் காட்டிலும் அகவற்பாவே, சிறந்ததென அறியலாம். வேண்டுதல் இல்லாத எதுகை மோனைகளைப் புகுத்தி மண்டைகளை உடைத்துக் கொள்ளுவதைப் பார்க்கிலும், அந்தக் கட்டுத்தளைகளில்லாத அகவற்பாவே வரலாறுகளுக்கு ஏற்றம் தருவது என்று அறியலாம். இந்தக் கருத்தையே நெஞ்சில் கொண்டு ஆங்கிலப் பெரும் புலவர்களும் அகவற்பா போன்ற செய்யுள் நடையையே தங்கள் காவியங்களுக்கும் அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள். மிகப்புகழ் பெற்ற ஆங்கிலப் புலவர்களாகிய ஷேக்ஸ்பியர், மில்டன், டென்னிசன் முதலியோர்கள் பிளாங்க் வெர்ஸ் (Blank verse) என்ற யாப்பைத் தங்கள் பெருங்காவியங்களில் கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலப் புலவர்கள் சிறிய இன்னிசைக் கவிதைகளுக்கு மட்டும் மோனை, இயைபு என்ற தொடைகள் கொண்ட பாடல்களை இயற்றி யிருக்கிறார்கள். தமிழிலும் பிரபந்தங்கள் விருத்தங்களால் ஆக்கப்பட்டுள்ளன. ஆனால் காவியங்களுக்கு ஏற்றது அகவற்பாவே யென்பது கொங்குவேளிர், இளங்கோவடிகள், சாத்தனார் என்ற பெரும்புலவர்கள் ஆட்கொண்ட முறை தெரிவிக்கின்றது அல்லவா?

இனி, கொங்குவேளிர் ஆண்டிருக்கும் கவிப்போக்கு ஆங்கிலத்தில் டென்னிசன் (The Idylls of the King) "மன்னன் ஓவியங்கள்" என்ற காவியத்துடன் ஒத்திட்டுப் பார்க்கலாம். கருத்துக்கள் படிப்பவர் நெஞ்சில் ஆணித்தரமாகப் படும்படியும், படிக்கப் படிக்க, அரிய உணர்ச்சிகளை எழுப்பும்படிக்கும் சொல் ஓவியங்களும், கருத்து ஓவியங்களும் ஆங்காங்கே, நிரம்பி யிருக்கக் காணலாம். கதாநாயகர்கள் முதலியோர் களுடைய குணங்கள் அழுத்தம் திருத்தமாக அமைக்கப் பெற்றிருப்பதையும் காணலாம். இவ்வாறான பண்பு கள் காவியத்தின் உயர்வை எடுத்துக்காட்டுகின்றன.

கொங்கு வேளிர் தன் காவியத்தில் எடுத்தாண்டிருக் கும் ஒன்றிரண்டு அழகுகளை எடுத்துக்காட்டுகளாகக் கூறுவோம். கதாநாயகி வாசவதத்தையின் அழகை விவரிக்கவந்த ஆசிரியர் அவளுடைய அவயவங்களை இவ் வாறு வருணிக்கின்றார்.

"பிறையெனச் சுடருஞ் சிறுநுதல் பிறையின்
நிறையெனத் தோன்றுங் கறையில் வாண்முகம் ;
கிளியென மிழற்றுங் கிளவி கிளியின்
ஒளிபெறு வாயி னன்ன வொள்ளுகிர்"

"வேயெனத் திரண்ட மென்றோள் வேயின்
விளங்குமுத் தன்ன துளங்கொளி முறுவல்
காந்தண் முகி ழன்ன மெல்விரட் காந்தட்
பூத்துடுப் பன்ன புனைவளை முன்கை"

இது எத்தனைச் சிறந்த அழகு ஓவியம் என்று கூறவும் வேண்டுமா ?

ஒரு யானை, பாகர்களைக் கொன்றுவிட்டு ஊரில் ஓட நகரத்தார் நடுங்கினார்கள். அச்செய்தியைக் கேள்வியுற்ற அரசன்,

"நாவாய் கவிழ்த்த நாய்கன் போல
ஓவா வவலமொடு காவலன் கலங்கி"

அந்த யானையை அடக்கும்படி சேனையை அனுப்பியும் அதனால் ஆகாதது கண்டு உதயணனிடம் தெரிவிக்க அவன் அதனை அடக்கி நகரவீதிவழியாய் உலா சென்றான். அதனைக்கண்ட நகரத்தார்கள்,

"மன்னவன் வாழ்க வத்தவன் வாழ்க
ஒலிகெழு நகரத் துறுபிணி நீக்கிய
வலிகெழு தடக்கை வயவன் வாழ்க"

என்று வீதிதோறும் ஏத்தி எதிர் கொண்டார்கள். அதற்காக அரசன்,

"பன்மணி விளக்கும் பள்ளிக் கட்டிலும்
பொன்னி னடைப்பையும் பூரண கலசமும்"

முதலான பல பொருள்களையும் கொடுத்து ஒரு மாளிகையில் இருக்கச் செய்தான். அம்மாளிகை,

"அந்தக் கேணியு மெந்திரக் கிணறும்
தண்பூங் காவுந் தலைத்தோன் றருவிய
வெண்சுதைக் குன்றொடு வேண்டுவ பிறவும்
இளையோர்க் கியற்றிய விளையாட் டிடமும்"

கொண்டிருந்தது. அங்கே வீற்றிருந்த அளவில் கதிரவன் மறைந்தான். உடுக்கள் விளங்கின.

"மூலைப்பாற் காலத்து முடிமுறை யெய்திக்
குடைவீற் றிருந்த குழவி போல"ப்

பிறை உதித்தது. இந்தக் காட்சி எத்தனை அழகியது.

பெண்மக்களின் தேர்ச்சியைக் கூறும்போது அரசன்,

"பந்துங் கிளியும் பசும்பொற் றாதையும்
கந்தியன் மயிலும் கரந்துறை பூவையும்
கண்ணியும் கழங்கும் கச்சும் முற்றிலும்
பவழப் பாவையும் பளிக்குக் கிளிக்கூடும்"

அவர்களுக்கு அளித்து நீங்கள் இதுவரையில் கற்ற,

"அடிசில் வினையும் யாழின் றுறையும்
கடிமலர்ச் சிப்பமும் கரந்துறைக் கணக்கும்
வட்டிகை வரைப்பும் வாக்கின் விகற்பமும்
கற்றவை யெல்லாங் காட்டுமின்"

என்று உரைத்து மகிழ்வித்தான். இந்தக் காட்சியை எத்தனைச் சிறந்ததாகக் கொள்ளுவோம்.

பெண்டிர் கோலம் கொள்ளுதலை அடியிற் கண்ட படி வருணிக்கின்றார்.

கூந்தலை உலர்த்திப் பூமாலை முடித்து,

"பைங்கூற் பாதிரிப் போதுபிரித் தன்ன
அங்கோ சிகமும் வங்கச் சாதரும்
கொங்கார் கோங்கின் கொய்ம்மல ரன்ன
பைங்கேழ்க் கலிங்கமும் பட்டுத் தூசும்
நீலமு மாத்தமும் வாலிழை வட்டமும்
கோலமொடு புணர்ந்த வேறுவே றியற்கை
நூலினு முலண்டினு நாரினு மியன்றன
யாவை யாவை யவையவை மற்றவை
மேவன மேவன காமுற வணிந்து"

அதன்பின் ஏற்ற அணிகளை அணிந்துகொண்டனர்.

ஒரு யானை போகும்போது ஐந்துவகை நிலங்களையும், தாண்டிச் சென்றதாகக் கூறுகிற புலவர் மருதத்தை,

"பாளைக் கமுகும் பணையும் பழுக்கிய
வாழைக் கானமும் வார்குலைத் தெங்கும்
பலவும் பயினும் இலைவளர் மாவும்
புன்னையும் செருந்தியும் பொன்னணர் ஞாழலும்
மடைவாய் திருத்து மள்ளர் சும்மையும்
எடையர வின்றி இறையாறு தழீஇ
வயற்புலச் சீறூர் அயற்புலம் அணுகி"

என்றும், முல்லைத்திணையை,

> "இறங்கு குரல்இறடி இறுங்குகடை நீடி
> கல்வக்கதிர் வரகும் கார்பயில் எள்ளும்
> புகர்ப்பூ அவரையும் பொங்குகுலை பயறும்
> உழுந்தும் கொள்ளும் கொழுந்துபடு சணையும்
> தோரையும் துவரையும் ஆயவும் பிறவும்"

என்றும், குறிஞ்சித்திணையை,

> "ஈரமில் குறவர் இதன்மிசைப் பொத்திய
> ஆரத் துணியொடு காரகில் கழுமிய
> கொள்ளிக் கூவிரரி வெள்ளி விளக்கில்
> கவரிமான் ஏறு கண்படை கொள்ளும்
> தகரங் கவினிய தண்வரை சாரல்"

என்றும், பாலைத்திணையை,

> "ஓமையும் முழிஞ்சிலும் உலவையும் முகாயும்
> கடுவும் தான்றியும் கொடுமுள் தொடரியும்
> கள்ளியும் கடம்பும் முள்ளியும் முருக்கும்
> ஈங்கையும் இலவும் தேங்காய் நெல்லியும்
> வாகையும் பிறவும்"

ஆகிய மரங்களையு முடையதாய் வருணிக்கின்றார்.

தொழில் செய்பவரை குறிக்கும் இடத்துப் பொதியில் சந்தனம், விந்தமலை, யானைத் தந்தம், வடமலைப் பொன், மேல்கடல் கொடிப்பவழம், கொற்கைத் துறை முத்து, வெஞ்சமலை வெள்ளி, ஈழத்துச் செப்பு, இமயத்து வயிரம், கடாரத்து இரும்பு ஆகிய இவைகளைக்கொண்டு,

> "யவனத் தச்சரும் அவந்திக் கொல்லரும்
> மகதத்துப் பிறந்த மணிவினைக் காரரும்
> பாடலில் பிறந்த பசும்பொன் வினையரும்

கோசலத்து இயன்ற ஓவியந் தொழிலரும்
வத்தநாட்டு வண்ணக் கம்மரும் ''

சிறந்த வேலைகளைச் செய்தனர் என்று அக்காலத் தொழில் சிறப்புக்களை விவரிக்கின்றார்.

ஒரு நகரத்துப் பகுதிகளைக் குறிக்கும்போது,

'' கோயில் முற்றத்தும் வாயில் மருங்கினும்
வம்பலர் மொய்த்த வம்பலத் தகத்தும்
யானைத் தானத்து அருந்தவப் பள்ளியும்
தானைச் சேரியும் தானெடுத் துரைக்கும்
பாடை யறியா தேசிகச் சேரியும்
நீர்த்துரைக் கரையினும் கூத்துறை சேரியும் ''

ஆகிய இடங்களைக் கூறுகின்றார்.

மகதநாட்டை வருணிக்கும்போது,

'' துறக்கம் புரியும் தொல்லையி னியன்றது
பிறப்பற முயலும் பெரியோர் பிறந்தது
புகழ்ச்சி முற்று மகிழ்ச்சியின் மலிந்தது
மண்பெருஞ் சிறப்பின் மகத நன்னாடு ''

என்கின்றார்.

போர்க்களத்தைக் கூறும்போது, அதன் கொடுமைகளை,

'' சிலைத்தன தூசி மலைத்தன யானை
ஆர்த்தனர் மறவர் தூர்த்தனர் பல்கணை
விலங்கின ஒள்வாள் இலங்கின குந்தம்
விட்டன தோமரம் பட்டன பாய்மா
குழிந்தது போர்க்களம் எழுந்தது செந்துகள்
அழிந்தன பூழி விழுத்தனர் மேலோர் ''

என்று வீரச்சொற்களில் வருணிக்கின்றார்.

ஒரு பெண் பந்தாட்டம் ஆடத்தொடங்கி 21-பந்து களை எடுத்துப் பிறர் வியக்குமாறு ஆடினள். அவ்வாறு ஆடுகையில்,

"சூழன்றன தாமம் குழன்றது கூந்தல்
அழன்றது மேனி அவிழ்ந்தது மேகலை
எழுந்தது குறுவியர் இழிந்தது சாந்தம்
ஓடின தடங்கண் கூடின புருவம்
அங்கையின் ஏற்றும் புறங்கையி னேட்டியும்
தங்குற வளைத்தும் தான்புரிந் தடித்தும்"

அவள் பந்து ஆடினளாம் :

அரசன் ஆளுகையில்,

"முற்றிழை மகளிர் மூவரும் வழிபட
கொற்ற வேந்தர் நற்றிறை அளப்ப
நல்வளம் தரூஉம் பல்குடி தழைப்பச்
செல்வ வேந்தன் செங்கோல் ஓச்சினன்"

என்று செங்கோல் செழிப்பினை உயர்த்திக் கூறுகின்றார். மேற்கூறிய எடுத்துக்காட்டுகள் காவியத்தின் சிறப்புக் களை விளக்குகின்றன.

இனி கொங்குவேளிர் தாம் கொண்ட சமயக் கோட்பாடுகளை ஆங்காங்கு விளக்கியுள்ளதையும் சில எடுத்துக் காட்டுகளால் கூறுவோம்.

சமணக் கொள்கையின்படி 'காதிகர்மம்' என்பது ஆன்மாவின் அறிவை மறைக்கும் தீவினை ஆகும். அதனை,

"வெந்துயர் அருவினை வீட்டிய அண்ணல்
காதி வெவ்வினை கடையறு காலை"

என்ற அடிகளில் விளக்குகின்றார்.

இனி 'கருமம் தீர்ந்த உயிர் மேலே செல்லும்' என்பது சமணக் கோட்பாடு. அதனை,

வினை தீர் உயிரின் மிதந்தது

என்று குறிக்கின்றார்.

அல்லாத உணவை நீக்கவேண்டியது சமணர் கோட்பாடு. அதனை,

அல்லூண் நீத்தல்

என்பர்.

அல்லூண் நீத்தலின் அடங்கிய உடம்பினன்

என்கின்றார்.

மந்திரங்கள் ஐந்து. அதனைப் பஞ்சமந்திரம் என்பர்.

அஞ்சாது ஐம்பதம் நினைமதி நீ

என்கின்றார்.

'ஒரு குன்றின்மேல் நின்று பதுமைபோல அசைவற்று நின்றுசெய்யும் தவயோகத்திற்குப் பிரதிமாயோகம் அல்லது படிவக் குழு' என்று பெயர். அதனை "ஓங்கிய படிவத்து அறம்புரிதந்தை" என்கின்றார். தீர்த்தங்கரர்கள் பிரதிமாயோகம் செய்ததை முன்னமே குறித்துள்ளோம்.

இனி சமண நிலையங்கள் 'அருகத்தானம்' என்றும், 'சேதியம்' என்றும் கூறப்படும். இவைகளில் 'அருகத் தானம்' 'அராத்தாணம்' என்றும், 'சேதியம்' என்பது 'ஜினன் ஆலய'மென்றும் வழங்குவன. அவற்றை,

அருந்தவர் பள்ளியும் அருகத் தானமும்
அருமணி சுடரும் அரான் தாணம்
துகடீர் பெருமை சேதியந் தொழுது

என்ற அடிகளில் அறிக.

மேலும், அருகனமர்ந்த மரம் அசோகமரமென்றும், அவன் கொண்ட குடை முக்குடை என்றும் குறிக்கப் படுகின்றன.

அணித்தகு பள்ளி அசோகத் தணிநிழல்
தாமம் முக்குடை தாமுறை கவிப்ப

என்ற அடிகளால் அறிக.

இனி பள்ளி என்பது "நீத்தோர் உறைவிடம்" என்பதனை,

அருந்தவர் பள்ளி படிவப் பள்ளி
மூதறி முனிவன் பள்ளி

என்கின்றார். மற்றும், வெள்ளிமலையில் வித்தியாதரர்கள் வசிக்கின்றார்கள் என்பதனை,

விச்சாதரர் உறை வெள்ளியம் பெருமலை
விளங்கொளி விஞ்சையர் வெள்ளியம் பெருமலை

என்கின்றார்.

இட்சுவாகு குலம் முதலியவற்றை ஐம்பெருங் குலம் என்று கூறி,

அலகை ஆகிய ஐம்பெரும் குலத்து

என்றும், தீர்த்தங்கரருடைய யட்சி தேவதையை இயக்கி என்றும், குறித்திருக்கின்றார்.

மேலே கண்ட எடுத்துக்காட்டுக்களால் சமணக் கொள்கைகளை ஆங்காங்கே எவ்வாறு ஆண்டு வந்திருக்கின்றார் என்பதை அறியலாம்.

இனி பொதுப்பண்புகளைக் கொங்குவேளிர் அங்கங்கே ஆண்டிருப்பதை ஒரு சிறிது எடுத்துக்கூறுவோம்.

நட்பின் தன்மையை வெகு அழகாக,

கெட்டகாலை விட்டனர் என்னாது
நட்டோர் என்பது நாட்டினை நன்று

என்று கூறுகின்றார்.

மன்னன் ஒரு செய்தியைக் கண்டு கோபித்தகாலை ஓர் அமைச்சன் அச்செயல் குற்றமாகாது என்று கூறி,

குலத்தினும் குணத்தினும் நலத்தகு நண்பினும்
நிலத்தினில் நின்னெடு நிகர்க்குநன் ஆதலின்
மேல்வகை விதியின் விழுமியோர் வகுத்த
பால்வகை அல்லது பழிக்குனர் இல்லை.

ஆதலால் சினம் தணிதல் நலம் என்று கூறின மதி எத்தனை சிறந்தது ?

இனி, அடைக்கல மடைந்தவரைப் பாதுகாத்தல் கடமை என்பதற்கு,

அற்றம் காத்தலின் ஆண்மை போலவும்
குற்றம் காத்தலின் குரவர் போலவும்
ஒன்றி ஒழுகலின் உயிரே போலவும்
நன்றி அன்றி கன்றியது கடிதற்கு
தகவில செய்தலின் பகைவர் போலவும்

ஒழுகுதல் அன்பரது செயல் என்ற குறிப்பு அருமையானது.

இரண்டு செயல்களில் எது சிறந்தது என்பதற்கு அடியிற்கண்ட கருத்தைக் காண்க.

இழிந்த மாக்களோ டின்பம் ஆர்தலின்
உயர்ந்த மாக்களோ டுறுபகை யினிது

என்ற கருத்தை ஆராயின், வெற்றிவேற்கையில்,

கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டில்
கரும்புலி வாழும் காடு நன்றே

என்ற அடிகளும், ஆங்கிலத்தில்,

துறக்கத்தில் அடிமைப்படலின்
நிரையத்தில் ஆளுதல் நன்று

என்றதையும் ஒத்திட்டுப் பார்க்க.

அன்புமயமான மொழிகளைக் கூறுமிடத்து அடியிற் கண்ட அரிய கருத்துக்கள் கூறப்பட்டன.

துன்பக் காலத்து துணை எமக்கு ஆகி
இன்பம் ஈதற்கு இயைந்து கைவிடாது
பெருமுது தலைமையின் ஒருமீக் கூரிய
உயர்தவக் கிழமை நும்உடம்பின் ஆகிய
சிற்றுப காரம் வற்றல் செல்லாது
ஆல வித்தின் பெருகி ஞாலத்து
நன்றி யீன்றது

என்ற அடிகளில் காண்க.

பிரிவினை எத்துணை துன்பம் தரும் என்பதனை உணர்த்த,

நவில்தொறும் இனிய ஞானம் போல
பயில்தொறும் இனியநின் பண்புடைக் கிழமை
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள மின்புறப்
பிரிவுரு துன்பம் எம்மாட்டு எய்த

நகரம் செல்வாய் என்ற மொழிகளால் உணர்த்துகின்றார்.

இனி, காங்கியரின் கொள்கையை உணர்த்தும் காலத்து அடியிற்கண்ட வடிவத்தைக் கற்பிக்கின்றார்.

பூதியும் மண்ணும் பொத்தக் கட்டும்
மானுரி மடியும் மந்திரக் கலப்பையும்
கானெடு மணியும் கட்டுறித் தியாத்த
கூறை வெள்ளுரி குண்டிகை காவினர்
தரும தருக்கர் தற்புறம் சூழ
பரிபு மெலிந்த படிவ பண்டிதன்
சாங்கிய நுணித்தலூர் சாறையர் முனிவன்

என்று வருணிக்கின்றார். பின்னர் அச்சமயக் கோட்பாடுகளையும் எடுத்துரைக்கின்றார்.

இவ்வாறு பெருங்கதையில் கதை விளக்கம் மட்டுமே யன்றிப் பலவிதங்களிலும் காவியச்சுவைகளோடு சமயக் கோட்பாடுகளும், அருமையாகப் பிணைக்கப்பட்டுள்ளன. ஆகவேதான் பண்டை ஆசிரியர்கள் பெருங்கதையை ஐம்பெருங் காப்பியங்களோடு சமமாக இணைத்துப் பேசி யிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட அருமையான காவியம் ஒரு சமணப் பெரியாரால் கொங்கு நாட்டில் இயற்றப் பட்டது. அது நாட்டிற்கு ஒரு பெருஞ்சிறப்பு அல்லவா?

அதிகாரம்—6

கொங்கு நாட்டுச் சமண சமய நிலையங்கள்

எந்தச் சமயத்தை எடுத்து ஆராய்ந்தாலும் அது மூவகை நிலையங்களை கொண்டிருக்கக் காண்போம். அந் நிலையங்கள் கோயில், மடம், சங்கம் எனப் பெயர்பெறும். சிலசமயங்களில் இம்மூன்று நிலையங்களும் ஒத்த பெருமை பெற்றிருக்கலாம். மற்ற சமயங்களில் ஒன்றிரண்டு உயர்ந்தும், ஒன்றிரண்டு தாழ்ந்தும் இருக்கலாம். சமண சமயத்திலும் அவ்வாறே இருக்கக்காண்போம். வடநாட்டில் சமண சமயத்தில் கோயில்களும், மடங்களும் சிறந்திருக்கின்றன. சங்கங்களும், கிட்டத்திட்ட அவைபோலவே சிறந்திருக்கின்றன. நடுநாடாகிய கன்னட நாட்டில் கோயிலும், மடமும் சிறந்திருக்கச் சங்கம்சிறப்புறவில்லை. தமிழ்நாட்டிலோ ஆர்க்காடு வட்டத்தில் கோயிலோடிணைந்த மடம் உண்டு. சங்கங்களோ தற்போது சிறக்கவில்லை. கொங்கு நாட்டில் ஆலயங்கள் மட்டும் இருக்கின்றன. மடங்கள் மறைந்து விட்டன. மக்கட் குறைவினுல் சங்கங்சள் ஏற்பட வழியில்லை. ஆகவே கொங்குநாட்டைப்பற்றி எடுத்துரைக்கும் போது கோயில்களைமட்டும் சிறப்பாகக் கூறவேண்டும். மற்றவற்றைப்பற்றிக் கூறுவதற்குத் தக்க சான்றுகள் இல்லை.

மேலும் கோயில்களின் நிலைமைகளைக் கூறும்போது பல நூற்றுண்டுகளுக்குமுன் இருந்த செழிப்பான நிலை இப்போது மிகவும் குன்றிவிட்டதென்று சொல்லவேண்டும். கங்கவமிசத்தார் ஆண்டகாலத்தில் அதாவது கொங்கு வேளிர் பெருங்கதை இயற்றின காலத்தில் கொங்கு நாட்டில் சமண சமயம் சிறந்திருந்ததென்றும், அப்போது மூன்றுவகை சமயநிலையங்களும் செழித்திருந்தன என்று

அறியலாம். பிறகு சில நூற்றுண்டுகளின்பின் அடியார்க்கு நல்லாரும், பவணந்தி முனிவரும், உரையாசிரியராகவும், இலக்கண ஆசிரியராகவும் இதே நாட்டில் விளங்கின காலத்தில் முன்னிருந்த செழிப்பு அழியாமல்இருந்திருக்க வேண்டும். அக்காலத்தில் சமணக்கோயில்களில் வழிபாடு கள் சிறப்பாக நடைபெற்றன. வழிபாடுகளுக்காகவும், கோயில் திருப்பணிகளுக்காகவும் அக்கால மன்னர்கள் நிரம்ப தானதருமங்கள் செய்திருக்கின்ருர்கள். ஏனெனில் அச்செய்திகளைக் கூறும் கல்வெட்டுக்கள் சமண ஆலயங் களில் கி.பி. 12, 13 நூற்றுண்டுகளிலும் இருக்கின்றன.

அதற்குப் பிந்திதான் சமயச் செழிப்பு குறைந்திருக்க வேண்டும். பிற்காலத்தில் கல்வெட்டுச் சான்றுகளுமில்லை. புது நூல்களும் தோன்றவில்லை. பழைய ஆலயங்களும் சீர் கெடலாயின. ஆலயங்களைக் காத்துக்கொண்டிருந்த சமண அர்ச்சகர்களும் ஆதரவு இல்லாமல் குன்றத்தொடங்கினர் கள். இதன் விளைவாகத் தற்காலத்தில் கொங்கு நாட்டில் ஆலயங்கள் மட்டும் பாழடைந்த நிலைமையில் இருக்கின் றன. மடங்கள் இப்பொழுது இல்லை. கொங்குவேளிர் காலத்தில் இருந்த தமிழ்ச்சங்கமும் இப்பொழுது இல்லை. ஆகவே அக்காலத்திலிருந்த பழம்பெருமையை அறிவிப் பதற்குப் பாழடையும்நிலையிலிருக்கும் சில சமண ஆலயங் களே நமக்குச் சான்றுகளாக நிற்கின்றன. அவைகள் இருக்கும் நிலையைப் பொதுமக்கள் அறியமாட்டார்கள். முன்னமே இந்த அறியாமையைப்பற்றிக் கூறியிருக்கின் ருேம். முன்னம் இருந்த செழிப்பு நிலைமையை. விளக்கு வதற்காகத் தற்போதுள்ள ஆலயங்களின் குறிப்புகள் பயன்படும் அல்லவா? அழியும் நிலையில் அவைகள் இருந்தபோதிலும் அவைகளும் முந்திய நன்மை நிலையை எடுத்துக்காட்டுபவை ஆகும் அல்லவா?

சமணக் கோயில்கள்

1. விஜயமங்கலம் நெட்டைக் கோபுரம்



2. விஜயமங்கலம் கோயிலின் உள்புறம்



3. திங்களூர்

4. சீனுபுரம்

5. திருமூர்த்திமலை ஒருபுறம்

6. திருமூர்த்திமலை மறுபுறம்

கொங்கு நாட்டில் சமணசமயம் செழிப்பாக இருந்த நாளில் 72 சமண ஆலயங்கள் இருந்ததாகச் சமண அர்ச்சகர்கள் கூறுகிறார்கள். அவைகளில் சிறந்த தலம் விஜயமங்கலமாகும். விஜயமங்கலத்தைச் சுற்றிப் பல தலங்கள் இருந்திருக்கின்றன. அவைகளில் தற்போது இருப்பவை, அரசண்ணாமலை, வெள்ளோடு, பூந்துறை, சீனாபுரம், திங்களூர் என்பவையே. இவைகள் எல்லாம் ஈரோடு தாலூகாவில் மேற்பகுதியில் உள்ளன. இவைகளே அன்றி, அவநாசிக்கு அடுத்த பழங்கரை கிராமத்தில் ஒரு சமணக்கோயிலும், காங்கயத்தில் மற்றொன்றும் இருந்ததாகக் கூறுவர். அவைகள் இருக்கும் இடம் இப்போது தெரியவில்லை.

விஜயமங்கலம் என்ற பெயரைச் சற்று ஆராய வேண்டும். அப்பெயர் விஜயமங்கை என்றும் அந்நாளில் வழங்கிவந்திருக்கிறது. அப்பெயர் வடமொழிப் பெயர். சமணர் வைத்த பெயர் ஆக இருத்தல்வேண்டும். பொதுவாகக் கொங்குநாட்டில் உள்ள ஊர்ப்பெயர்கள் எல்லாம் தனித் தமிழ்ப் பெயர்களாக இருக்கின்றன. வடமொழிப் பெயர் இருந்தால் அதற்குத் தனிக் காரணம் இருந்திருக்கவேண்டும். ஜைனர்கள் வடமொழிப் பெயர்களை விரும்புகின்றவர்கள். அவர்கள் இவ்வூரில் தங்கள் சமயத்தைத் தாபித்து வெற்றி (விஜயம்) பெற்றதினால் ஊரின் பெயரை விஜயமங்கலம் என்று மாற்றினார்கள் போலும். அப்படியானால் முற்பெயர் எதுவோ அறியச் சான்றுகள் இல்லை.

விஜயமங்கலம் என்ற ஊர் கோயமுத்தூரிலிருந்து ஈரோடு செல்லும் பெரிய பாதையில் இருக்கின்றது.

கோவையிலிருந்து வட கிழக்கே, சென்னைப் பெரும் பாதையில் 42 கல்லில் இருக்கின்றது. இதற்குப் புகை வண்டி நிலையமும் உண்டு. ஆனால் அந்த நிலையத்தி லிருந்து ஊர் மூன்றுகல் தொலைவில் இருக்கின்றது. ஊர் ஒரு பெரிய கிராமம் ஆகையால் அதிலிருந்து நான்கு புறங்களிலும் வண்டிப் பாதைகள் செல்லுகின்றன. ஊரில் குடியிருப்புப் பகுதி இரண்டு பிரிவுகளாகப் பிரிக் கப்பட்டு இருக்கின்றது. மேற்குப் பிரிவு விஜயபுரி என்றும், கிழக்குப் பிரிவு விஜயமங்கலம் என்றும் கூறப் படுகின்றன. இவைகளைத் தவிர வடக்குப் பிரிவு ஒன்று இருந்தது. அதனுடைய பெயர் பஸ்திபுரம் என்று பழைய குறிப்புகள் கூறுகின்றன. முன்காலத்தில் அது தனியான பகுதியாக இருந்திருக்கவேண்டும். இப் போது அந்த இடத்தில் ஒரு சமணக் கோயிலைத் தவிர குடியிருப்புக்கள் இல்லை. முந்தி செழிப்பாகவும், சிறப் பாகவும் இருந்த குடி வசதிகள் இப்போது புறம்போக் காகவும் விளைநிலங்களாகவும் மாறிவிட்டன. பஸ்திபுரம் என்ற சொல்லுக்கு சமண ஊர் என்று பொருள்.

சமணர்களுடைய கோயில் இருப்பிடங்கள் பஸ்தி என்ற சொல்லால் வழங்கப்பெறுகின்றன. கன்னட ஜில்லாவில் ஜைனக் கோயில் குடியிருப்புக்களுக்கு, "பஸ்தி" என்ற பெயர் இப்போதும் வழங்கி வருகின் றது. இங்கே பஸ்திபுரக் கோயிலை வழிபாடு செய்யும் அர்ச்சகக் குடும்பங்கள், கன்னடிய ஜைனர்களே. இவர் களுடைய உறவினர்கள் மேற்கே மலையாளத்துக்குச் சேர்ந்த வயனாட்டில் குடியிருக்கிறார்கள். ஈரோடு வட் டத்தில் இருக்கும் சமண அர்ச்சகர்களெல்லாம் கன்ன டியக் குடிகளே. இவர்கள் வயனாட்டிலிருந்து இங்கே குடியேறினதாகவும் கூறுகிறார்கள். அவர்களுடைய

உறவினர்கள் மைசூர் நாட்டிலும் இருப்பதாகக் கூறு கிறார்கள். ஆகவே இக்குடும்பங்கள் தலைக்காட்டுக் கங்க வமிசத்தார் ஆதரவின்கீழ் மைசூர் பீடபூமியிலிருந்து ஈரோடு தாலூகாவிற்கு வந்து அங்கே ஆலயப் பணி விடையில் அமர்ந்திருக்கவேண்டும். கோயில் வழிபாட்டிற் காக, இக்குடும்பத்தார்களுக்கு நிலமானியங்கள் கொடுக் கப்பட்டிருந்தன. கோயில்களைச் சரியாகப் பரிபாலனம் செய்யாத வகையில் அவர்களுக்கு விட்டிருந்த மானிய நிலங்கள் எல்லாம் பராதீனமாய்விட்டன. அந்த வகை யில் கோயிலுக்கும் சொத்து இல்லை. அர்ச்சகர்களுக்கும் சொத்தும் பிழைக்க வகையும் இல்லை.

இந்தப் பரிதாபமான நிலையில் கோயில்கள் இருக் கின்றன. அர்ச்சகர்களும் இருக்கிறார்கள். பேருக்கு அர்ச் சகர்கள் என்று சொல்லிக்கொண்டு, யாசகத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

விஜயமங்கலத்தில் பஸ்திபுரம் என்ற பகுதியில் உள்ள கோயிலை நாட்டு மக்கள் நேட்டைக்கோபுர மென்று அழைக்கிறார்கள். அதில் உள்ள மூர்த்தியை அம்மணீசுவரர் என்று சொல்லுவார்கள். கோபுரம் அகலமும், கனமும் இன்றி நெட்டையாக இருப்பதினால் அதனை நெட்டைக்கோபுரம் என்கிறார்கள் போலும். மூலத்தானத்தில் இருக்கும் மூர்த்தி யாதொரு உடையு மின்றி நிருவாண நிலையில் இருப்பதால் அம்மணீசுவரர் என்று கூறுகிறார்கள் எனலாம். தமிழில் அம்மணம் என் றால் நிருவாணம் என்ற பொருள் அல்லவா? மேலும் அம ணம் என்றால் சமணம் அல்லது ஜைனம் என்ற பொருள் உண்டு. ஆகவே அவர்களுடைய கடவுள் அமணீசுவரர் என்று ஆகி மகரம் இரட்டித்து அம்மணீசுவரர் என்ற பெயரும் ஏற்பட்டிருக்கலாம். பொதுமக்கள் இந்த

மூர்த்தியை வேறெரு மதத்துக்குச் சேர்ந்த மூர்த்தி என்று கருதுவதே இல்லை. பல கோயில்களில் உள்ள தெய்வங்களைப் போலவே இதுவும் ஓர் இந்து சமயத் தெய்வமாகக்கொண்டு அதனையும் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். அக்கோயிலில் வழிபாடு செய்யும் அர்ச்சகர்களை மற்றப் பூசாரிகளைப் போலவே உள்ளவர்கள் என்று பாவித்து அவர்களுக்குக் காணிக்கைகளும் கொடுப்பார்கள். இந்த வகையில்தான் தற்காலத்தில் அவர்களுடைய பிழைப்பும் நடைபெறுகிறது. மிகவும் வறுமை ஏற்பட்ட காலத்தில் சமணக் குடும்பங்கள் மிகுதியாக வசிக்கும் வயனாடு, தென் கன்னடம் முதலிய இடங்களுக்குச் சென்று உதவிபெற்று வருவதுண்டு.

அர்ச்சகக் குடும்பம், பூஜை செய்யும் தொழில் உள்ளவர்கள் ஆதலாலும் தமிழர் நடுவில் கன்னடம் பேசிக்கொண்டு, பூணூல் தரித்தவர்களாய் இருப்பதினாலும், அக்கம்பக்கத்து மக்கள், அவர்களைப் பிராமணர்கள் என்று எண்ணுகிறார்கள். அவர்களை அழைப்பதும், ஐயர் என்ற பட்டத்தைக்கொண்டுதான். அந்தக் குடும்பத்தாரும் சமண சமயத்தில் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்களாகப் பாவித்துக்கொண்டு தங்கள் பேர்களுக்குப் பின்னால் ஐயர் என்ற பட்டத்தையும் வகித்துக் கொள்ளுகிறார்கள். விஜயமங்கலத்துக் கோயிலில் அர்ச்சகம் செய்யும் குடும்பத்தார்களில்தான், முன்னாளில் கார்மேகக் கவிஞர் என்ற பெரும்புலவர் தோன்றினது.

இக் கவிஞர் கொங்கு மண்டல சதகம் என்ற ஒரு அரிய நூலை இயற்றி இருக்கின்றார். இந்நூலில் கொங்கு நாட்டு எல்லைகள், பிரிவுகள், ஊர்கள், ஆறுகள், நதிகள், கோயில்கள், புலவர்கள், சமயாசிரியர்கள், சீமான்கள், பேருபகாரிகள், தலைவர்கள் முதலானவர்களுடைய வர

லாறுகள் அடங்கியிருக்கின்றன. இவ்வரலாறுகளை இயற்றிய கவிஞர் சிறந்த ஆராய்ச்சியாளராக இருந்திருக்க வேண்டும். கணக்கற்ற நூல்கள், வரலாறுகள், நாட்டுப் பாடல்கள், நாட்டுக் கதைகள், ஏட்டுப்பிரதிகள், கல்வெட்டுச் சாசனங்கள் இவைகளை யெல்லாம் மிகவும் நுட்பமாக ஆராய்ந்தவராக இருக்கவேண்டும். கணக்கற்ற நூல்களில் உள்ள கருத்துக்களை நூறு பாடல்களில் அடக்கிப் பாடிய பெருமை அவருக்கு உண்டு. அப்படிப்பட்ட கவிஞர், கன்னட மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்தும் தமிழில் இத்தனைப் பாண்டித்தியம் பெற்றிருந்தார் என்றால் வியப்பு வரும் அல்லவா? அவர் ஆராய்ச்சியில் சிறந்தவராக இருந்தது மட்டும்அல்ல, சமண நூல்களை நன்றாக வாசித்து அறிந்து, கொங்கு நாட்டில் உள்ள 24-நாடுகளையும் சுற்றிப்பார்த்து அங்கே வழங்கிவரும் வரலாற்றுச் செய்தி ஒவ்வொன்றையும் அறிந்துகொள்ளும் அறிவு நுட்பம் படைத்தவர் என்று அறியவேண்டும். சமணராய் இருந்தபோதிலும், மற்ற சமயங்களான சைவம், வைணவம் இரண்டையும் வெறுக்காமல், அவைகளில் தோன்றிய பெரியார்களின் பெருமைகளையும் சேர்த்தி இருப்பது அவருடைய பரந்த இதய ஒளியைக் காட்டுகின்றது. மேலும் அதுவரை வழங்கிவந்த சில கருத்துக்களைத் தாம் மறுத்துத் தாம் கண்டு பிடித்தவைகளையே மெய்யென்று நிலைநாட்டியிருப்பதும் மிகவும் போற்றத் தக்கது. உதாரணமாகப் பவணந்தி முனிவரையும், வில்லிபுத்தூரரையும், தொண்டை நாட்டினரென்று தொண்டைமண்டல சதகம் கூறியிருக்க, அவர்கள் இருவரையும் கொங்கு நாட்டினரென்று உறுதியுடன் கூறுகின்றார். அதுபோலவே அடியார்க்கு நல்லார் கொங்கு நாட்டினரென்

றும் அவருடைய ஊராகிய "நிரம்பை" கொங்கு நாட்டுக் குறும்பு நாட்டில் சேர்ந்த தென்றும் கூறுகின்றார். திருவிசைப்பா பாடிய களந்தை சோழ நாட்டார் தமது என்று கூறியிருக்க, இக்கவிஞரோ கொங்குநாட்டு வாரக்கா நாட்டிலுள்ள பெரிய களந்தையை அத்தலம் என்கிறார். இவ்வாறு அவருடையகொள்கைகளை உறுதிப் படுத்திக்கொண்டு எப்படிப்பட்ட எதிர்ப்பு வந்தாலும் அதனை சட்டைசெய்யாமல் தமது கொள்கைகளையே வற்புறுத்தி வெளியிடும் பெருமை கொண்டிருக்கிறார்.

அக்கார்மேகக் கவிஞர் தோன்றித் தமது கொள்கைகளை வற்புறுத்தியிராவிட்டால் முற்காலத்தில் கொங்கு நாட்டில் சமணம் இருந்த நிலை நாம் அறிய வழியில்லை. மேலும் அரிய வரலாற்றுப் பகுதிகள் நமக்குக் கிடைத்திருக்கவும் வகையில்லை. அப்படிப்பட்ட கவிஞருக்குக் கொங்கு நாடு மிகவும் கட்டுப்பட்டுள்ளது அல்லவா ?

விஜயமங்கலத்து அர்ச்சகக் குடும்பத்தின் வம்சாவளி அடியிற்கண்டபடி :—

- சந்திர ஐயர்
  - கமலய்யர்
    - கமலய்யர்
    - சீனிவாசய்யர்
      - சூர ஐயர்
      - கமல ஐயர்
      - நாகராஜ்
    - நாகராஜர்
  - பண்டித ஐயர்
  - ஆதி ஐயர்
    - பத்பநாப ஐயர்
      - கமல ஐயர்
        - மக்கள் 3
  - சந்திர ஐயர்
    - நாகராஜய்யர்

இந்த வம்ச விவரங்களை 22 ஆண்டுகளுக்கு முன் அங்கே சென்றிருந்தபோது, அப்போது அர்ச்சகரா யிருந்த

இனி நெட்டைக்கோபுரம் என்ற இந்தக் கோயில் பார்த்தமாத்திரத்திலேயே மிகப் பழைமையானது என்று அறியலாம். பல நூற்றாண்டுகளாகச் செப்பன் இடப் படாததினால் பாழடைந்த தோற்றத்தில் அது இருக்கின்றது. சுற்றுப்பக்கங்களில் யாதொரு பாதுகாப்பும் இல்லாததினால், மாடுமேய்ப்பவர்கள் அதனுடைய சின்னங்களை நாள்தோறும் அழித்துக்கொண்டே வருகிறார்கள். கோயிற் சுவர்களிலிருந்த சாசனங்களை அரசாங்கத்தார் படியெடுத்திருக்கிறார்கள். இடிந்துபோன சில இடங்களைச் செப்பனிட்டு இருக்கிறார்கள். என்றாலும் செய்ய வேண்டிய பாதுகாப்பு செய்யப்படவில்லை. சமண சமயத்துப் பெரியார்கள் இந்தக் கோயிலைப்பற்றி ஒரு சிறிது அக்கறை எடுத்துக்கொண்டால் இப் பண்டைய கோயில் வெகு எளிதில் நல்ல நிலைமைக்கு வந்துவிடும். பொதுமக்கள் நெட்டைக்கோபுரம் என்று சொன்னாலும் அதனுடைய பெயர் "சந்திர பிரபா தீர்த்தங்கரர் கோயில்" என்பதே ஆகும். மூலத்தானத்தில் இருக்கும் மூர்த்தி அந்தத் தீர்த்தங்கரருடைய திருவுருவமே ஆகும். ஆனால் கோயிலில் மற்ற தீர்த்தங்கரருடைய உருவங்களும் இருக்கின்றன. இக்கோயில் கொங்கு நாட்டில் கட்டப்

சூரய்யர் கொடுத்து உதவினார். மேலும் அவருடைய தந்தையார்தான் கார்மேகக் கவிஞர் என்ற புனைபெயரில் கொங்கு மண்டல சதகத்தை எழுதினதாகக் கூறினார். அக்கவிஞர் இறந்தது, 1?–11–1895 என்றும் கூறினார். சதகத்தின் பதிப்பாசிரியர் தாம் இல்லாதபோது சதகத்தை எடுத்துச் சென்றதாகவும் கூறினார். இவ்வர்ச்சகர் சொன்னது உண்மையாகில் சதகம் மிகவும் பிற்காலத்தது எனலாம்.

பட்டுள்ளதால், கொங்கு நாட்டுக் கோயில் நிர்மாணத்தையே அது கொண்டிருக்கின்றது.

இந்தக் கோயில்தான் கொங்கு நாட்டிலுள்ள எல்லாச் சமணக் கோயில்களிலும் மிகப் பெரியது. கோயிலைச் சுற்றிலும் விரிந்த பிரகாரமும் உயர்ந்த மதிலும் உண்டு. முன் வாயிலில் மிக உயர்ந்த கோபுரம் இருக்கின்றது. கோபுரத்திற்கு வெளியிலே கொடிக் கம்பம் ஒன்று நிற்கின்றது. இவ்வாறு வெளிக்கொடிக் கம்பம் வைத்துக் கட்டுவது கொங்கு நாட்டிற்கு ஒரு சிறப்பான முறையாகும். இது மற்றை நாடுகளில் இல்லை. இக் கோயில் சமணக்கோயில் ஆனாலும் கொங்கு நாட்டின் முறைப்படி கொடிக்கம்பம் கோபுரத்திற்கு வெளியே வைக்கப்பட்டிருக்கிறது. கோயிலின் முக்கிய கட்டிடம் கருங்கல்லால் ஆகியது. சுவர்கள், தூண்கள், தளவாடம், மேற்பரப்பு எல்லாம் கருங்கல்லே. முழுக் கட்டிடமும் ஐந்து மண்டபங்களைக் கொண்டு இருக்கின்றது. மூலத்தானம் அல்லது கர்ப்பக்கிருகமும், அர்த்தமண்டபமும், குறுகிய அளவிலும், மற்ற மூன்று மண்டபங்களும், விரிந்த அளவிலும் கட்டப்பட்டுள்ளன. வடகிழக்கில், பிரகாரத்தில் ஒரு தனிக் கோயில் கட்டப்பட்டுப் பூர்த்தியாகாமல் இருக்கின்றது. கிழக்கு மதிலில் ஒரு சிறுவாயில் இருக்கின்றது. அதற்கு எதிரே ஒரு தீர்த்தக் கிணறு தோண்டப்பட்டுள்ளது. பீமன் தன்னுடைய கதாயுதத்தால் நிலத்தைக் குத்தியதாகவும் அவ்வாறு குத்தியபோது இந்தத்தீர்த்தம் ஏற்பட்டதாகவும், அதனால் அதற்குப் பீமதீர்த்தம் என்று பெயர்வந்ததாகவும் ஒரு ஐதீகம் உண்டு. இந்தத் தீர்த்தக் கிணற்றின் ஆழம் பத்து அடி. அதன் கைப்பிடிச் சுவரில் ஒரு கல்வெட்டு இருக்கின்றது.

கர்ப்பக்கிரகம் அல்லது மூலத்தானத்தில் இருப்பது சந்திரபிரபா தீர்த்தங்கரர் என்று கூறியிருக்கிறோம். முன் காலத்தில் மூலத்தானத்தில் இருந்த மூர்த்தி பெரிய உருவத்தில் சுதையால் செய்யப்பட்டதாக இருந்தது என்று கூறுகின்றார்கள்.' அந்த உருவம் அழிந்துபோய்விட்டது. தற்போதிருக்கும் மூர்த்தி ஓர் அடி உயரம் கொண்ட சிறிய வடிவில் அமைந்ததாகும். இம்மூர்த்தி முன்னாளில் அபிஷேகத்திற்காக ஏற்படுத்தியிருந்த மூர்த்தி என்பர்.

அர்த்தமண்டபம் என்ற இரண்டாவது மண்டபத்தில் நடுவில் ஒரு பீடத்தில் அமர்ந்திருப்பவர் வர்த்தமானர் அல்லது மகாவீரர். இம்மூர்த்தியும் ஓர் அடி உயரந்தான் உண்டு. அவர் 24-வது தீர்த்தங்கரர் என்று அறிவோம். இந்துக் கோயில்களில் அர்த்தமண்டபத்தில் நடுவில் மூர்த்திகளை வைப்பதில்லை. இந்தக் கோயிலில் அவ்வாறு வைத்திருப்பது மாறுபாடாகத் தோன்றும்.

மூன்றாவது மண்டபம், முதலிரண்டு மண்டபங்களை விடப் பெரியது. இதனை மகாமண்டபமாகக் கூறலாம். இதிலும் மண்டபத்தின் நடுவில் ஒரு பீடத்தின்பேரில் ஒரு மூர்த்தி வைக்கப்பட்டிருக்கின்றது. இம்மூர்த்தி அனந்தநாத தீர்த்தங்கரராவர். பீடம் உள்பட ஒன்றே கால் அடி உயரமும், மூர்த்தி மட்டும் ஏழு அங்குலம் உயரமும் உள்ளது. இம் மண்டபத்தில் மேற்குப் பகுதியில் சுவர் ஓரமாகக் கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும் பதின்மூன்று தீர்த்தங்கரர்களுடைய உருவங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. இம் மண்டபத்தின் கிழக்குச் சுவரின் இடையில் ஒரு கதவு இருக்கின்றது. அக் கதவிற்கு எதிரே மேற்குச்சுவரில் ஒரு சிறு அறை இருக்கின்றது. இதில் நேமிநாதரின் யக்ஷி கூஷ்பாண்டினி வைக்கப்பட்டிருக்கின்றது. இவ்வுருவம் முதலில் அரசண்

ணுமலேயில் இருந்தது. அங்கே ஆலயம் பழுதாய்ப்போக அந்த உருவத்தை இங்கே கொண்டுவந்து வைத்திருக்கிருர்கள். அந்த தேவியைத் தமிழ்மக்கள் அரசாத்தாள் என்று சொல்லுகிருர்கள்.

நான்காவது மண்டபம் மூன்ருவது மண்டபத்தைப் போலவே பெரியது. இதில் மேற்குச் சுவரில் ஒரு சிறிய அறையில் நேமிநாதரின் யக்ஷியாகிய கூஷ்பாணிணி அல்லது தர்மதேவியின் உருவம் வைக்கப்பட்டிருக்கிறது. வடமேற்கு மூலேயில் ஆறு உருவங்கள் இருக்கின்றன. அவைகள் ஐந்து பாண்டவர்களும் திரௌபதியும் என்கிருர்கள். கூஷ்பாணிணிக்கு இடது புறத்தில் ஓர் அழகிய பெரிய உருவம் நிற்கின்றது. அதன் உயரம் இரண்டரை அடி. ஆசனம் பத்மாசனம். அது ஆதீசுவரர் அல்லது ரிஷப தீர்த்தங்கரருடைய திருஉருவம். அதன் இருபுறங்களிலும் கோமுக யக்ஷனும் சக்ரேஸ்வரி யக்ஷியும் நிற்கிருர்கள். மேலே இரண்டு சாமரேசுவரர்கள் சாமரத்தோடு நிற்கிருர்கள். இனி வடமேற்கு மூலேயில் நாலரை அடி உயரமுள்ள ஒரு நாகரும், வடக்கே இரண்டு சித்தர்களும் இருக்கிருர்கள். ஒரு தூணுக்குப் பின்பக்கத்தில் ஒரு கல்வெட்டு இருக்கின்றது. கூஷ்பாணிணி அறைக்கு எதிரே கிழக்கு நோக்கிய கதவு ஒன்றும் அதற்கு வெளியே எதிர்ப்புறமாக ஒரு பலிபீடமும் இருக்கின்றன.

ஐந்தாவது மண்டபத்தில் எட்டுத் தூண்களும், மேலே விட்டங்களும் இருக்கின்றன. அவைகளிலே ஐதீக வரலாறுகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. தென்புறத்தில் நாகராஜருக்கும் மருதேவிக்கும் நடந்த திருமணக் காட்சி தீட்டப்பட்டுள்ளது.

மேற்கே மணமக்களுடைய பள்ளியறைக் காட்சி தெரிகிறது. பிறகு மருதேவியின் பிரசவ அறைக் காட்சி

யும் பிறந்த குழந்தையை சஹிதருமேந்திரனுடைய அரசி எடுத்துச் செல்லும் காட்சியும், பிறகு யானையின் பேரில் எழுந்தருளுவித்துத் தருமேந்திரன் அபிஷேகம் செய்யும் காட்சியும் காணப்படுகின்றன. இக் குழந்தை தான் ஆதீசுவரர் அல்லது ரிஷபதேவர். இனி வடபுறத் தில் தீர்த்தங்கரருக்கு தீக்ஷையானவுடன் முக்குடை அளிக்கப்பட்ட காட்சியும் பரத சக்ரவர்த்தியினுல் வணங் கப்படும் காட்சியும் தெரிகின்றன. இனி கீழ்ப்புறத்தில் அபிஷேகத் திருவிழாவிற்குச் சென்ற தேவர்களின் உருவங் கள் தீட்டப்பட்டுள்ளன. அம்மண்டபத்துத் தூண்களில் விநாயகர் உருவமும், நடனமாதர்களின் உருவங்களும் செதுக்கப்படுள்ளன. நடன மாதர்கள் பல அணிகளை அணிந்திருக்கிருர்கள். சிறப்பாக சூரியப்பிறை, சந்திரப் பிறை என்ற தலை அலங்காரங்களைப் பூண்டிருக்கிருர்கள்.

வாயில் கோபுரம் மிக உயர்ந்தது. அதில் தெற்கே யானையின்பேரில் சக்ரேசுவரியும், மேற்கே சாமரர்களோடு கூடிய தீர்த்தங்கரரும் வடக்கே இருபுறமும் இரண்டு யானைகள் குடங்களில் நீர் பொழிய இடையில் ஒரு தீர்த்தங்கரரும், கிழக்கே நடனமாதரும் தீட்டப்பட்டுள் ளார்கள். வாயிலின் முகட்டில் ஒரு சதுரத்தின் இடை யில் ஒரு பெரிய பத்மம் இயற்றப்பட்டுள்ளது. கோபுரத் தின் மேல்பகுதி செங்கல்காரையால் கட்டப்பட்டுள்ளது. மூன்று நிலைகள் கொண்டது. காரை உருவங்கள் மழுங் கிக் கிடக்கின்றன.

கோயிலின் வெளிப்புறத்திலிருக்கும் கொடிக்கம்பம் முப்பது அடி உயரம் கொண்டது. இதற்குச் சமணப் பெயர் மானஸ்தம்பம் என்பது. அக்கம்பம் நான்கு தூண்கள் கொண்ட ஒரு சிறு மண்டபத்தின் இடையில் நிறுத்தப்பட்டிருக்கின்றது. கம்பம் ஒரே கல்லால் செய்

யப்பட்டது. சிகரத்தில் இருந்த கமலம் பூமி அதிர்ச்சியினால் உடைந்து விழுந்துவிட்டதாம். கம்பத்தின் அடிப்பகுதி சதுரமாக உள்ளது. அதன் பக்கங்களிலும் நான்கு உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கிழக்கே அன்னப்பட்சியின்மீது பிரம்மயக்ஷனும், தெற்கே வீற்றிருக்கும் சந்திரப்பிரபா தீர்த்தங்கரரும், மேற்கே மகிஷ வாகனத்தில் 8 கரம் கொண்ட ஜுவாலா மாலுனி யக்ஷியும், வடக்கே குதிரையில் பிரம்மயக்ஷனும் (சாஸ்தா) செதுக்கப்பட்டுள்ளார்கள்.

கோயிலின் கிழக்குப் பிராகாரத்தில் வடக்கு மூலையில் பூர்த்தியாகாத கோயில் கட்டிடமொன்று இருக்கிறதென்று கூறினோம். இது ஆதீசுவரருக்காகக் கட்டப்பட்டது. கட்டிடம் ஏன் முடிவு பெறவில்லை யென்று தெரியவில்லை.

சந்திரப்பிரபா கோயில் மிகப் பழமை பெற்ற கோயில் என்று அறியவேண்டும். இந்தக் கோயிலில் முன் மண்டபத்தில் ஒரு தூணில் கீழ்ப்புறமாக கிரந்தத்திலும், தமிழிலும், பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று இருக்கின்றது. அதில் சாமுண்டராஜனுடைய தங்கை புல்லப்பை என்ற ஒரு பெண்மணி நிசீதிகை செய்ததாகக் கண்டிருக்கின்றது. நிசீதிகை என்றால் உண்ணாவிரதமிருந்து உயிர்விடும் ஒரு சடங்கு ஆகும். அச்சடங்கு மிகவும் புனிதமான சடங்கு என்று சமணர்கள் கருதுவார்கள். இக்கல்வெட்டில் கண்ட சாமுண்ட ராஜன் கங்க அரசர்கள் மாரவர்மன் II, ராஜமல்லன் II இவர்கள் காலத்தில் அமைச்சராயிருந்து சரவண பௌகுளத்தில் கோமடேசுரர் உடைய உருவத்தை நிலை நாட்டின அதே சாமுண்டராயனென்று கல்வெட்டு ஆராய்ச்சியாளர் சொல்லுகின்றார். அப்படியாயின்

இந்தக் கல்வெட்டு 10-வது நூற்றுண்டின் இடையிலேயே ஏற்பட்டிருக்கவேண்டும். அதாவது கி. பி. 983-ல் ஏற்பட்டிருக்கலாம். (597/1905).

மேலும் இவ்வாலயத்தில் கொங்கு சோழர் காலத்துக் கல்வெட்டுக்களும், விஜயநகரத்து ஹரிஹரராயன் கல்வெட்டுமிருக்கின்றன. கொங்கு சோழன் குலோத்துங்கச் சோழ தேவனுடைய கல்வெட்டின்படி சகம் 1085-ல் இக்கோயிலுக்கு ஒரு நிலம் தானம் செய்யப்

கோயிலில் உள்ள முக்கியப் பகுதிகள்

1. சந்திரபிரபா தீர்த்தங்கரர், கர்ப்பக்கிருகம் மூலஸ்தானம்.
2. வர்த்தமான மகாவீரர்.
3. அனந்தநாத தீர்த்தங்கரர், சுற்றிலும் 13 திரு உருவம்.
4. கூஷ்பாணிணி (நேமிநாத தீர்த்தங்கரருடைய யக்ஷி) இது அரசண்ணுமலையில் இருந்தது.
5. கூஷ்பாணிணி அல்லது தர்மதேவி, நேமிதீர்த்தங்கரர் யக்ஷி, மூலம்.
6. பஞ்சபாண்டவர், துரோபதை.
7. ஆதீசுரர், ரிஷப தீர்த்தங்கரர், கோமுக யக்ஷன், சக்ரேசுவரி யக்ஷி.
8. நாகர், சித்தர்.
9. முன் மண்டபம், தளஉத்தரத்தில் ஜினசரித்திரம், கால்களில் விநாயகர்கள்.
10. பலிபீடம்.
11. கோபுரம்.
12. மானஸ்தம்பம்.
13. ஆதீசருக்காகக் கட்டின கோயில், ஆனல் பூர்த்தியாகவில்லை.
14. பீமதீர்த்தம்.

பட்டது என்று அறிகின்ருேம். அக்கல்வெட்டின்படி இக் கோயிலின் பெயர் வீரசங்காதப் பெரும்பள்ளி என்பார் கள். சமணர்கள் ஆலயங்களுக்குப் பள்ளி என்ற சொல் கூறப்பட்டதென்று அறிவோம். பெரும்பள்ளி என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளதால் இக்கோயில் மற்றச் சமணக் கோயில்களைக் காட்டிலும் பெரியதாக இருந் திருக்கவேண்டும். (598/1905) மற்றும் இரண்டு கல் வெட்டுக்கள் அரைகுறைகளாகத் தெரிகின்றது. அவை களிலே சில திருவிழாக்கள் நடத்துவதற்குக் கொடுக்கப் பட்ட தானமும், கதவு நிலை முதலிய தந்த செய்தியும் சகம்–1189) கண்டிருக்கின்றன. மேலும் விஜயநகரத்து ஓர் அரசன் கல்வெட்டிலும் சகம் 1334-ல் ஒரு நில தானம் செய்த செய்தி கூறப்பட்டுள்ளது. ஆகவே, மேலே கண்ட ஐந்து கல்வெட்டுகளின்படி 10–வது நூற்ருண்டு முதல், 14-வது நூற்ருண்டுவரை அதாவது 5 நூற் ருண்டுகள் முழுதும் இந்த ஜைன ஆலயம் செழிப்பான நிலையில் இருந்திருக்கவேண்டுமென்று அறியலாம்.

மேலும், விஜயமங்கலம் சமண நிலையம் ஒன்றிற்குப் பேர் பெற்றதுமட்டுமல்ல. இங்கே பெரும்பாதைக்குத் தென்புறத்தில் மூன்று பழைய ஆலயங்கள் இருக்கின் றன. அவைகளில் சிவாலயங்களில் நாகேசுவர சுவாமி கோயிலில் 38 கல்வெட்டுகளும், சோமேசுரர் கோயிலில் 2 கல்வெட்டுக்களும், பெருமாள் கோயிலாகிய கரிய மாணிக்கப் பெருமாள் கோயிலில் 12 கல்வெட்டுக்களும் இருக்கின்றன. இவைகள் பெரும்பாலும் கொங்கு சோழர் காலத்துக் கல்வெட்டுக்கள். அவ்வைகளிலிருந்து பல சரிதச் செய்திகளும் நாட்டுச் செய்திகளும் அறிய லாம். அந்த விவரங்களை இங்கே கூறவேண்டியதில்லை யல்லவா ?

அதிகாரம்—7

சமண சமயச் சுற்று ஆலயங்கள்

விஜயமங்கலம் கேந்திரநிலையமாக இருந்து அதனைச் சுற்றிலும் சமண சமயம் அக்காலத்தில் பெருகிற்று. அங்கங்கே சிறுசிறு கோயில்கள் கட்டப்பட்டன. சமண சமயம் செழிப்போடிருந்த நாளில் அக்கோயில்களில் சிறந்த வழிபாடுகள் நடந்து வந்தன. ஒவ்வொரு கோயிலை யும் காத்துக்கொண்டு ஒவ்வொரு ஜைனக்குடும்பம் வழி பாடு செய்து வந்தது. அக்கோயில்களுக்கு மன்னர்களும், செல்வர்களும் தான தருமங்கள் செய்தார்கள். பிறகு நாளாவட்டத்தில் செல்வாக்குக் குறைந்தது. கோயில் களில் பூசை நின்று போய், கட்டிடங்களும் அழி வுற்றன. அழிந்தவை போக, சில கோயில்கள் இன்னும் நிலைத்திருக்கின்றன. அப்படியிருக்கும் கோயில்களில் ஐந்து கோயில்கள் விஜயமங்கலத்தைச் சுற்றித் தற் போதும் காணப்படுகின்றன. அக்கோயில்களில் ஒன் றிரண்டில் மட்டும் பூஜை நடைபெறுகின்றது. மற்ற வற்றில் அதுவும் இல்லை. அக்கோயில்களின் நிலைமை பரிதாபமாய் இருந்தபோதிலும், அவைகளைப் பற்றிய செய்திகள் அறிந்துகொள்ளத் தகுந்தனவாக இருக் கின்றன. அவற்றைப் பற்றிச் சிறிது கூறுவோம்.

விஜயமங்கலத்தை விட்டு நேராகத் தெற்கே சென் ருல் அரசண்ணமலை என்ற ஓர் அழகிய உயர்ந்த குன்று தோன்றும். ஊருக்குத் தெற்கே அது மூன்று மைல் தொலைவில் இருக்கின்றது. விஜயமங்கலத்துப் புகை வண்டி நிலையத்திற்கு அடுத்தாற்போல் வடக்கே அது அமர்ந்துள்ளது. மலையானது நிலமட்டத்திற்கு மேல்

200 அல்லது 250 அடி உயர்ந்திருக்கின்றது. கடைத் தெருவில் தானியக் கடைகளில் இராசியாகக் குவித்த தானியக் குவியல்போல் அம்மலேயின் வடிவம் அமைந் திருக்கின்றது. மலே முழுதும் மரஞ்செடிகளால் சூழப் பெற்றுப் பார்வைக்குப் பச்சை இலேபோலத் தோன்றும். இம்மலேயின் மீதிருந்த கோயில் வாயிலும், விஜயமங்க லத்துக்கோயில் வாயிலும் எதிரெதிரே நோக்கிக் கொண் டிருந்தன. மலே ஏறுவது சுலபம். மேற்குப் புறத்தில் கற்படிகள் இருக்கின்றன. பழுது பார்க்காத காரணத் தால் சிலபடிகள் நொறுங்கி விழுந்து கிடக்கின்றன. கொங்கம்பாளேயம் என்பது மலேக்கு அருகில் அடிவாரத் தில் உள்ள ஊர். அங்கிருந்து மலேயடிக்கு நடை பாதை செல்லுகிறது. அதன் வழியாக நடந்து மலேயேறிச் சென்ருல் ஓர் அருமையான காட்சி தென்படுகின்றது. மலேயின் உச்சியில் நூறு அடி வளேவில் ஒரு சம பரப் பான இடம் இருக்கின்றது. அச்சம நிலத்தின் நடுவில் இரண்டு சிறு கோயில்கள் இருந்தன. மேற்குப்புறத்தில் நேமிநாதர் ஆலயம் இருந்தது. தற்போது கட்டடம் இடிக்கப்பட்டுள்ளது. கீழ்ப்புறத்தில் கூஷ்பாணிணி தேவியின் ஆலயம் இருக்கின்றது. அதிலிருந்த திருவுரு வத்தை எடுத்துக்கொண்டுபோய் நெட்டைக் கோபுரக் கோயிலில் வைத்துள்ளார்கள். தற்போது அம்மலேயில் சமயச்சின்னம் எதுவும் இல்லே. சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் இந்து சங்யாசி ஒருவர் அம்மலேக்குச் சென்று நேமி நாதர் உருவத்தை அகற்றிவிட்டுப் புதிதாக ஒரு சிறு கோயில் கட்டி அதில் ஒரு லிங்கப் பிரதிஷ்டை செய்து வைத்துவிட்டார். இந்த நாளிலும் இப்படிப்பட்ட மாறு பாடுகள் நடைபெறுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன் புகை வண்டியில் செல்லும்போதெல்லாம் விஜயமங்கலம்

நிலையம் அணுக அணுக அம்மலைமீதிருந்த ஜைனஆலயம் வெள்ளை வெளேரென்று காட்சி தந்துகொண்டிருந்தது. தற்போது அக்காட்சி தருவதில்லை. பச்சை மலைமீது வெள்ளைச் சிகரம் ஒரு சிறந்த காட்சியை அளிக்கும் அல்லவா? பழைய கோயில் அழிந்ததும் அவ்வழகிய காட்சியும் மறைந்தது. அரசண்ணாமலை மீதிருந்த தேவியை அரசாத்தாள் என்ற பெயரில் தமிழ் மக்கள் வணங்கி வந்தார்கள். தற்போதும்கூட அந்த வட்டா ரத்துப் பெண்மக்கள் அரசாத்தாள் என்று பேரிடுவது வழக்கம்.

இனி வெள்ளோடு என்ற ஊர் ஈரோடு வட்டத்தில் ஒரு பெரிய ஊர். அதில் குடித்தனம் சிறப்பாக நடை பெறுகின்றது. அது பெருந்துறை நிலையத்திலிருந்து தெற்கே மூன்றுகல் தொலையில் இருக்கின்றது. அவ் வூருக்கு வடகிழக்கிலே ஓர் இடிந்த கோயில் இருக் கின்றது. அதனுடைய அளவு 80 அடி நீளமும், 10 அடி அகலமும்தான் இருக்கும். அதில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியின் பெயர் ஆதீசுரர் அல்லது ரிஷப தீர்த் தங்கரர். இக்கோயிலுக்கு யாதொரு பாதுகாப்பும் இல்லை. அப்படிப்பட்ட ஒருகோயில் உண்டென்றே பொதுமக்களுக்குத் தெரியாது. மிகவும் வருந்தித் தேடி னால்தான் அக்கோயிலைக் கண்டு பிடிக்கமுடியும். ஊரின் பெயராகிய வெள்ளோடு என்பது வெள்ளை ஓடை அல் லது வெள்ளோடை என்பதன் மரூஉ ஆகும். வெண் மணல் நிறைந்த ஓர் ஓடை அருகில் ஓடுவதால் இவ்வூருக்கு அப்பெயர் ஏற்பட்டது. இந்த வட்டாரங் களில் அப்படி மாறின பெயர்கள் நிரம்ப உண்டு. ஈரோடை என்பது ஈரோடு என்றும், சிற்றோடை என் பது சித்தோடு என்றும் மருவி வழங்கி வருவதை ஒத்

திட்டுப் பார்க்கலாம். ஆதிநாதர் முதல் தீர்த்தங்கரராக இருந்தும் கோயில் சிறியதாக அமைந்திருக்கின்றது.

ஜைன ஆலயம் பார்க்கச் சென்றபோது கோயிலுக்குள் ஓர் அர்ச்சகர் தன்னந்தனியாக இருந்துகொண்டு பூசை செய்து கொண்டிருந்தார் (1929). அவர் பெயர் நாகையர் என்று கூறினர். கோயிலில் கல்வெட்டுக்கள் காணவில்லை. ஆனால் 40 ஆண்டுகளுக்குமுன் அவைகள் இருந்ததாகவும் பின்னல் அவைகள் சிதைந்து போனதாகவும் அந்த அர்ச்சகர் கூறினர். மூலத்தானத்தில் ஆதி தீர்த்தங்கரர் திருவுருவம் இருந்தாலும் மற்ருெருபுறத்தில் சந்திர பிரபா தீர்த்தங்கரருடைய உருவமும் வைக்கப்பட்டிருந்தது.

வெள்ளோட்டுக் கிராமத்தில் மற்றும் பல கோயில்கள் இருக்கின்றன. சிவாலயம் பழையது. ஆனல் கல்வெட்டுக்கள் தெரியவில்லை. சுவாமியின் பெயர் சர்வலிங்கமூர்த்தி. அம்மன் பெயர் பாடகவல்லி. மற்றும் பெருமாள் கோயில், சுப்பிரமணியர் கோயில், நஞ்சுண்டேசுரர் கோயில் என்பவைகள் இருக்கின்றன. கிராம தேவதைகளாக, அண்ணன்மார் கோயில், ராஜாக் கோயில், பொங்காளியம்மன் கோயில், ஆயி அம்மன் கோயில் என்பவவைகளும் இருக்கின்றன. அண்ணன்மார் கோயில் என்பது பண்டைக் காலத்தில் வேளாளருக்கும், வேட்டுவருக்கும் நடந்த போரின் சம்பந்தமாக ஏற்பட்ட கோயிலாகும். போரில் இறந்த குன்றுடையாக் கவுண்டன் மக்களே அண்ணன்மார் எனப்படுவார்கள். நாட்டுப்புறங்களில் பல ஊர்களில் இக்கோயிலைப் பார்க்கலாம்.

இனி, பூந்துறை என்ற ஊர், ஈரோடு வட்டத்தில் வெள்ளோட்டிலிருந்து 5 கல்தொலைவில் இருக்கின்றது.

பண்டைக் காலத்தில் பூந்துறை ஒரு சிறந்த நகரமாக இருந்தது. கொங்கு மண்டலத்து 24 நாடுகளில் ஒன்ருகிய பூந்துறை நாட்டின் தலைநகராக இருந்தது. தற்போது அவ்வூர் தாழ்வடைந் திருக்கின்றது. இவ்வூரில் உள்ள சந்தை வெளிக்கு அருகாமையில் பாழடைந்த ஒரு சிறு கோயில் இருக்கிறது. அதன் அளவு 25 அடிக்கும், 10 அடிக்கும்தான் இருக்கும். அதில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியின் பெயர் பாரிசநாத தீர்த்தங்கரர் என்பது. இந்தத் தீர்த்தங்கரர் 23-வது தீர்த்தங்கரராவர். இவருக்கு அடையாளம் பாம்பு. தேவியின் பெயர் பத்மாவ்தி. கோயிலுக்கு அருகே பூசாரியின் இருப்பிடம் இருக்கிறது. இந்தப் பூசாரி விஜயமங்கலத்து அர்ச்சகருக்குச் சொந்தம். அக்கம் பக்கத்து மக்கள் இக்கோயிலை அமணீசுரர் கோயில் என்கிருர்கள். இக்கோயிலைக் கண்டுபிடிப்பதே சிரமமாய்விட்டது. இவ்வூரில் ஒரு பெரிய அழகிய பெருமாள் கோவில் ஒன்றும் இருக்கின்றது, சுவாமியின் பெயர் தாமோதரர்.

மேலும், சீனுபுரம் என்ற ஓர் ஊர் பெருந்துறையிலிருந்து திங்களூர் போகும் வழியிலிருக்கின்றது. அவ்வூருக்குக் கிழக்கே பாதையின் ஓரமாக வடபுறத்தில் தன்னந் தனியாக ஒரு சிறு கோயில் இருக்கிறது. கோயில் கட்டிடம் 30 அடி நீளமும், 10 அடி அகலமும் தான் இருக்கும். அதனைப் பாதுகாப்பாரின்றி நாளுக்கு நாள் அழிந்துகொண்டே வருகின்றது. அதில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தி ஆதீசுரரே ஆகும். மூர்த்தியின் திருவுருவம் 2½ அடி உயரமிருக்கும். உட்கார்ந்த நிலையில் இருக்கின்றது. அழகாகவும் இருக்கின்றது. கோயிற் கதவு எப்பொழுதும் திறந்த வண்ணமாய் இருக்கின்றது. சீனுபுரம் என்பதும் மிகவும் பழைய ஊர். இதைத்தான்

சனகை என்று கூறுவார்கள். சனநாதபுரம் என்றும் பெயர் இருந்ததாம். 8, 9-நூற்றாண்டுகளுக்கு முன் சமண சமயம் செழித்திருந்த நாளில், பவணந்தி முனிவர் இங்கே எழுந்தருளியிருந்து நன்னூல் என்ற சிறந்த இலக்கணத்தை இயற்றினதாகக் கொங்குமண்டல சதகம் கூறுகிறது. சன்மதி முனிவர் ஞானப்புதல்வரான பவணந்தி முனிவர் சமண சமயத்தில் தோன்றிய ஒரு சிறந்த அறிஞர். அக்காலம் வரை வழங்கிவந்த தொல்காப்பியம் போன்ற மிகப் பண்டைய இலக்கணங்களைக் கற்க இயலாத மாணவர்களுக்கு எளிதாக இலக்கணம் படிப்பிக்கும் முறையில் அம்முனிவர் நன்னூலை இயற்றினார். தற்காலத்திலும் தமிழ் மாணவர்கள் நன்னூலைக் கற்றுத்தான் தமிழ் இலக்கணம் அறிவார்கள். தற்போது நமக்குக் கிடைத்திருப்பது எழுத்ததிகாரமும், சொல்லதிகாரமுமே. மற்ற அதிகாரங்கள் எழுதினாரோ இல்லையோ அறியமுடியவில்லை. நன்னூலுக்குப் பவணந்திமுனிவர் இயற்றியுள்ள கடவுள் வணக்கத்தில் "பூமலி யசோகின் புனைநிழல் அமர்ந்த நான்முகன்" என்றும், "முச்சக நிழற்றும் முழுமதி அச்சுதன்" என்றும் கூறியிருத்தல் அவருடைய சமணக் கொள்கையைக் காட்டுகின்றது. பவணந்திமுனிவர் சீயகங்கன் என்ற குறுநில மன்னனின் வேண்டுகோளுக் கிணங்கி நன்னூலை எழுதினார். நன்னூலுக்குப் பல உரைகள் இருந்தபோதிலும், சமணச் சார்பான ஓர்உரை மயிலைநாதர் என்ற ஒருசமணப் புலவரால் ஆக்கப்பட்டுள்ளது.

சீனாபுரத்திலும், அருகிலும் சைவ ஆலயங்களும் உண்டு. அருகே ஒரு சிறிய குன்றின்மேல் முருகக் கடவுள் எழுந்தருளியிருக்கின்றார். பழனி வேலாயுத சுவாமி கோயில் என்று அதனைக் கூறுவார்கள். அது

கட்டு மலையாகத் தோன்றும். 75 அடி உயரமிருக்கும். ஆனால், அழகாகவும் மனோரம்மியமாகவும் காற்றோட்ட முள்ளதாகவும் அது இருக்கின்றது.

இனி திங்களூர் என்பது அப்பிச்சிமார் மடத்திற்கு அருகிலுள்ள ஓர் பெரிய ஊர். விஜயமங்கலத்திலிருந்து கோபி செல்லும் பாதையி லிருக்கின்றது. ஊருக்குத் தெற்கே ½ கல் தொலைவில் ஒரு தோட்டத்தின் இடையிலே ஒரு பெரிய கிணற்றின் மேட்டில் ஒரு பழைய கோவில் தென்படுகின்றது. கோயில் கிழக்கு நோக்கியது. அதில் மூன்று மண்டபங்கள் உண்டு. கர்ப்பக் கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்ற முப் பிரிவுகளைக் கூறலாம். கர்ப்பக்கிரகத்தில் புஷ்பநாதர் அல்லது புஷ்பதந்த தீர்த்தங்கரர் திருவுருவம் இருக்கின் றது. உருவம் ஓர் அடி உயரம்தான் இருக்கும். முன் மண்டபத்தில் தென்சுவரின் மத்தியில் ஒருசிறு அறையில் பிரமயக்ஷனுடைய உருவம் இருக்கின்றது. கிரீடத்தில் ஒரு தீர்த்தங்கரரின் சிறிய உருவம் இருக்கின்றது. மற் றொன்று சீதல தீர்த்தங்கரரின் உருவம். வாகனம் குதிரை; உயரம் 4 அடி. இம்மகா மண்டபத்தில் 4 தூண்கள் இருக்கின்றன. நடுவில் உள்ள அர்த்த மண்ட பத்தில் ஒரு நிலவறை இருக்கின்றது. இப்பொழுது அது மூடப்பட்டுள்ளது.

இவ்வூரில் இக்கோயிலைப் பூசை செய்துகொண்டு ஒரு ஜைனக் குடும்பம் இருக்கின்றது. போதுமான வரும்படி இல்லாததினால் அடிக்கடி அர்ச்சகர் வெளியூர் களுக்கு யாசகத்திற்காகச் செல்கின்றார். இக்கோயிலின் கதவு நிலையில், தமிழ்க் கல்வெட்டு ஒன்று இருக்கின்றது. (614/1905) அக்கல்வெட்டின்படி கொங்கு சோழனை கோனாட்டான் விக்கிரமசோழதேவனுடைய (1004-45

கி.பி.) 40-வது ஆண்டில் அதாவது சகம் 967-ல் அக்கல் வெட்டு பொறிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆண்டில் கோயிலினுடைய முகமண்டபம் கட்டப்பட்டதாகவும், அக்கோயிலுக்குச் சந்திர வசதியென்று பெயரிடப்பட்ட தென்றும் அது கூறுகிறது. சந்திரவசதி என்ற பெயர் குறிக்கத்தக்கது. இதே ஊரில் இருக்கும் சிவாலயத்தில் உள்ள ஒரு கல்வெட்டின்படி அவ்வூரின் பெயர் சந்திர புரி என்று கண்டிருக்கின்றது. திங்களூர் என்ற தமிழ்ச் சொல்லுக்கு "சந்திரபுரி" என்பது வடமொழிப் பெயர் ஆகும். ஆகவே திங்களூர், ஜைனக் கோயில் என்ற பொருளில் சந்திரவசதி என்ற பெயர் வந்திருக்க வேண்டும். வசதி என்பது பஸ்தி என்ற வடச்சொல் லின் திரிபு ஆகும். விஜயமங்கலத்தில் பஸ்திபுரம் என்ற பெயர் இருக்கிறதை முன்னமே குறித்துள்ளோம். அதே பெயர் தென் கன்னடத்தில் கார்க்கல் என்ற இடத்தில் சமணர் கோயிலுக்கு வழங்குகின்றது. மேலேகண்ட கல்வெட்டிலிருந்து ஜைன ஆலயத்தின் முகமண்டபம் கி. பி. 1004-ல் கட்டப்பட்டதெனத் தெரிகின்றது. அதற்கு வெகு காலத்திற்கு முந்தியே கர்ப்பக்கிரகம் முதலியவைகள் கட்டப்பட்டிருத்தல்வேண்டும் அல்லவா?

இனி திங்களூரில் சிவாலயம் ஒன்றும், விஷ்ணு ஆல யம் ஒன்றும் இருக்கின்றன. அவைகளிலும் பல கல் வெட்டுக்கள் இருக்கின்றன. ஆனால் அவைகள் எல்லாம் ஜைனக் கோயில் கல்வெட்டுக்குப் பிந்தியவையே. பெரும் பான்மையாகக் கொங்கு சோழர்கள், கொங்கு பாண்டி யர்கள், ஹொய்சளர்கள் காலத்துக் கல்வெட்டுக்களே ஆகும். அவைகளின்படி திங்களூர் குறுப்பு நாட்டில் உள்ளதென அறிகிறோம். குறுப்பு நாடு என்பது குறும்பு நாடு என்பதனுடைய மருவு ஆகும். குறும்பு நாடு என்ற

சொல்லே, சுந்தரமூர்த்தி சுவாமிகள் "கொங்கில் குறும்பில் குரக்குத்தளியாய்" என்று தேவாரத்தில் குறிப்பிடுகிருர் இதே நாட்டிற்குச் சேர்ந்த குரக்குத்தளி தற்காலத்தில் பெரியபாளேயம் என்ற பெயரால் வழங்குகிறதென்றும் அதிலேபல கல்வெட்டுக்கள் உண்டு என்றும் அறியவேண்டும். அது ஒருதேவார வைப்புத்தலமாக விளங்குகின்றது.

இனி, குறும்பு நாட்டிலும் பூந்துறை நாட்டிலும் உள்ள ஜைன ஆலயங்களின் சம்பந்தமாக உள்ள வரலாறுகளேக் கொங்கு மண்டல சதகம் கூறியுள்ள முறைப்படி அதிலிருந்து சில மேற்கோள்களே எடுத்துக்கொண்டு விவரிப்போம். விஜயமங்கலத்திலிருந்த கொங்கு வேளிர் உதயணன் கதை என்ற பெருங்கதையை இயற்றி அரங்கேற்றிய காலத்தில் சங்கத்தார் கேட்ட கேள்விகளுக்கு ஓர் அடிமை மாதைக்கொண்டு உத்தரம் சொல்லச் செய்தார் என்று கொங்கு மண்டல சதகத்தில் அடியில்கண்ட செய்யுள் கூறுகின்றது.

"நீதப் புகழுத யேந்திரன் காதை நிகழ்த்துதற்குக்
கோதற்ற மங்கையின் மூன்று பிறப்புற்ற கொள்கையன்றி
மேதக்க சொற்சங்கத் தார்வெள்கவே கொங்கு வேளடிமை
மாதைக் கொண்டுத்தரஞ் சொன்னதுவுங் கொங்கு
[மண்டலமே.

கொங்குவேளிர் உதயணன் கதையை தமிழில் எழுதுவதற்கு முதல் நூலாயிருந்த வடமொழி பிரகத் கதையை எழுதினவன் துர்வினீதன் என்ற கங்கர் மன்னன். அவனுக்கு முன்தோன்றல் அவனிதன் என்ற மன்னன். அவ்வரசர்களும் கொங்கு மண்டலத்தினரே என்று அடியிற்கண்ட செய்யுள் கூறுகின்றது—.

"தவநித நோற்கு மறவாணர் மேவத் தழைகுடிகள்
நவநிதி யோங்கத் தரியலர் தாழ நலம்பொருந்தி

அவநித ஞதியரசர் வடக்கு மடங்க மணி
மவுலி தரித்துப் புகழ் நீண்டது கொங்கு மண்டலமே"

இனி சியகங்கன் என்ற அரசன் கேட்டுக்கொள்ள நன்னூல் என்னும் இலக்கணத்தை எழுதிய பவணந்தி முனிவர் தோன்றிய சனகாபுரமும் கொங்கு நாட்டில் உள்ளது என்பதற்குச் செய்யுள்,

"கங்கக் குரிசி லுவக்கநன் னூலைக் கனிந்துபுகல்
துங்கப் புலமைப் பவணந்தி மாமுனி தோன்றிவளர்
கொங்கிற் குறும்பு தனிலாதி நாதகுரு விளங்க
மங்குற் பொழிற்சன காபுரமுங் கொங்கு மண்டலமே."

மேலும் அந்தச் சியகங்கனைப்பற்றியும் மற்றொரு செய்யுளுமுண்டு.

"சொல்காப் பியத்தின் குணதோடந் தேர்ந்து சொலுவ
தொல்காப் பியங்கற்க நீண்டதததனைச் சுருக்கியிசை[தற்குத்
பொல்காப் பெரும்பவ ணந்தியென் றோதி யுபகரித்த
வல்கா வலன்சிய கங்கனுந் தான்கொங்கு மண்டலமே"

தவிர, குணவாயில் கோட்டத்தில் துறவு பூண்டிருந்து சிலப்பதிகாரம் என்னும் அரும்பெரும் காப்பியத்தை அருளிச் செய்த இளங்கோ அடிகள் கூறியதும் செங்கோட்டு வேலர் வீற்றிருப்பதுமாகிய திருச்செங்கோடு என்னும் திருப்பதியும் கொங்கு மண்டலமென்று அடியிற்கண்ட செய்யுள் கூறுகிறது.

"உளங்கோ துரும லொழுகு செங்குட்டுவாக்கோர் துணை
இளங்கோ வடிகள் இயற்றிய காப்பியத் தேவமுதம் [யாம்
கொளுங்கோன் மதுவென கூறுசெங்கோட்டுவேல்குமரனமர்
வளங்கோன் இடாத செங்கோடு வளர்கொங்குமண்டலமே."

இளங்கோவடிகள் சமண சமயத்தவர் என்று கூறுவார் உண்டு. அவர் இயற்றிய காப்பியத்திற்கு அடியார்க்கு நல்லார் ஓர் அருமையான பேருரை எழுதியிருக்கின்றார்.

அவரும் சமணர் என்று கூறுவார் உண்டு. அவர் அவதரித்த ஊர் நிரம்பை என்பது. அது கொங்கு மண்டலத்தில் உள்ளதென்று அடியிற்கண்ட செய்யுள் கூறுகின்றது.

"குருவை யுணர்ந்த விளங்கோ வடிகளுட் கொண்டு
தருவை நிகரும் சிலப்பதி காரத் தனித்தமிழுக் [சொன்ன
கருமை யுரைசெ யடியார்க்கு நல்லா ரவதரித்து
வருமைப் பொழினிரம் பைப்பதி யுங்கொங்கு மண்டலமே"

இந்தச் செய்யுளில் "குருவை உணர்ந்த இளங்கோ வடிகள்". என்பதற்குச் சற்குருவாகிய தீர்த்தங்கரருடைய நிலையை நன்கு உணர்ந்து துறந்த இளங்கோ அடிகள் என்று சதக உரையாசிரியர் உரை எழுதியிருக்கின்றார். ஆகவே அவருடைய கருத்தில் இளங்கோ அடிகள் சமணர் என்பதாகும். அடியார்க்கு நல்லார் கொங்கு மண்டலத்திலே நிரம்பை என்னும் ஊரில் உதித்தவர் என்றும், பொப்பண காங்கேயன் என்னும் கொடையாளியின் ஆதரவில் வாழ்ந்தவரென்றும், சிலப்பதிகார உரைச் சிறப்புப் பாயிரத்தால் தெரியவருகின்றது. நிரம்பை என்ற பெயர் குறுப்பு நாட்டு ஊர்த்தொகையில் காணப்படுகின்றது. அந்நாட்டிலேயே திங்களூர், விஜயமங்கலம், சீனுபுரம் என்பவைகளும் காணப்படுகின்றன. நிரம்பையின் பெயர் விஜயமங்கலத்திற்கு அடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆகவே, நிரம்பை விஜயமங்கலத்திற்கு அணித்தாற்போல் இருந்திருத்தல்வேண்டும். காங்கேயர் என்ற பட்டப் பெயர்கொண்ட பரம்பரைக் குடும்பங்கள் இந்த வட்டாரங்களில் உண்டு. ஆனால் தற்போது நிரம்பை என்ற ஊர்ப்பெயர் வழக்கத்திலிருப்பதாகத் தெரியவில்லை. என்றாலும் முற்காலத்தில் அது குறும்பு நாட்டில் இருந்திருந்து தற்போது வேறொரு பெயரில் வழங்கியிருத்தல் கூடும்.

அதிகாரம்—8

தென்மேற்குக் கொங்கில் சமணம்

கொங்கு நாட்டில் தென்மேற்குப் பகுதியில் ஜைனச் சான்றுகள் அங்கங்கே அகப்படுகின்றன. நாளதுவரை இடைத்திருக்கும் சான்றுகளைத் தொகுத்து இங்கே எழுதுவோம். தென்மேற்குப் பகுதியானது தற்காலத்துப் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பல்லடம் தாலூகாவில் ஒரு பகுதி என்பவைகள் அடங்கினது ஆகும். இவைகளுக்குப் பண்டைக்கால நாட்டுப் பெயர்கள், வாரக்க நாடு, காவடிக்க நாடு, நல்லூர்க்கா நாடு, ஆனைமலைநாடு, வைகாவி நாடு என்பவைகள். வாரக்க நாட்டில் தென்சேரிகிரி, களந்தை, பல்லடம், வெள்ளலூர் முதலியவைகள் இருக்கின்றன. காவடிக்க நாட்டில், பொள்ளாச்சி, கோமங்கலம், ஊற்றுக்குளி முதலியவைகள் இருக்கின்றன. நல்லூருக்கா நாட்டில் உடுமலைப்பேட்டை, தளி, திருமூர்த்தி மலை முதலியவைகள் இருக்கின்றன. ஆனைமலைநாட்டில், ஆனைமலை, காளியாபுரம், வேட்டைக்காரன்புதூர் முதலியவைகள் இருக்கின்றன. வைகாவி நாட்டிலே பழனி, ஆய்க்குடி, ஐவர்மலை, கலையமுத்தூர் முதலியவைகள் இருக்கின்றன. இவைகளிலே, களந்தை, தேவனும்பாளையம், கப்பளாங்கரை, ஆனைமலை, திருமூர்த்திமலை, ஐவர்மலை முதலிய இடங்களில் சமணச் சின்னங்கள் இருக்கின்றன. இவைகளைத் தொகுத்துக் குறிப்புக்களை ஒன்று சேர்த்தி அவைகளில் கிடைக்கும் முடிபுகளை இனி எழுதுவோம்.

முதலில் வாரக்காநாட்டுக் களந்தையைப் பற்றி ஆராய்வோம் :—

களந்தை என்ற ஊர் கோவைக்குத் தெற்கே திருப்புகழ் பெற்ற தலமாகிய கிணற்றுக் கடவுப்பொன்மலை வேலாயுதர் (கனகமலை) வீற்றிருக்கும் குன்றுக்கும், அதற்குக் கிழக்கே பல்லடம் தாலூகாவில் திருப்புகழ் பெற்ற மற்றொரு முருகன் தலமாகிய தென்சேரி மலைக்கும் இடையிலே ஒரு செழிப்பான தென்னஞ் சோலையின் இடையிலே இருக்கிறது. அங்கே ஓர் அருமையான பண்டையக் கோயில் இருக்கின்றது. அக்கோயிலைப் பெரியகளந்தை ஆதீசர்கோயில் என்று கூறுவார்கள். இக்கோயிலில் 12 கல்வெட்டுச் சான்றுகள் இருக்கின்றன. அவைகள் கொங்கு சோழர் காலத்துக் கல்வெட்டுக்கள். ஜடாவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டுக்களும் இருக்கின்றன. இக்கோயிலின் பெயர் ஆதித்தேச்சுரம் என்று 1278-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. பாண்டியன் கல்வெட்டுக்களில் அதன் பெயர் ஆதிபுராணீசுவரம் என்று கூறப்பட்டிருக்கிறது. 10-வது நூற்றாண்டில் கருவூரில் அவதரித்த கருவூர்த் தேவர் இந்தத் தலத்தைத்தான் திருவிசைப்பாவில் களந்தை ஆதித்தேச்சர மென்று பாடியிருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுவார்கள். ஆகவே இந்தத் தலம் மிகப் பழமையான கோயிலைக் கொண்டிருக்கின்றது என்பதில் ஐயமேயில்லை.

மேலும் இவ்வூர் கோயிலைப் பொதுமக்கள் ஆதீசர் என்று வழங்குவதை ஒரு சிறிது ஆராயவேண்டும். ஆதீசர் என்ற பெயர் சமண தீர்த்தங்கரர்களில் முதல் தீர்த்தங்கரருடைய பெயராகும். முற்காலத்தில் இவ்வூரில்தான் இலக்கண ஆசிரியர் வச்சணந்தி முனிவர் என்ற சமணப் புலவர் இருந்ததாகக் கூறுவர். ஆகவே இங்கே

சமண ஆதிக்கம் ஒரு காலத்தில் இருந்திருக்க வேண்டு மென்று அறியலாம்.

மற்றும், வாரக்கநாட்டிற்குச் சேர்ந்த பல ஊர்களில் உள்ள கோயில்களின் பெயர்கள் அமணேசுவரர் கோயில் கள் என்று வழங்கிவருகின்றன. கப்பளாங்கரை முதல் தேவனும்பாளையம் வரை இந்தப் பெயர்களைக் காண் கிறோம். தேவனும்பாளையத்தில் ஆற்றின் இடையில் ஒரு பண்டைய கோயில் இருக்கின்றது. அதன் தூண் களில் பல சித்திர வேலைப்பாடுகளுமுண்டு. அவைகளில் கல்வெட்டுக்களும் இருக்கின்றன. அக்கோயிலில் எழுந் தருளியிருக்கும் மூர்த்தியின் பெயர் அம்மணேசுவரர் என்பார்கள். அண்மையிலே திருப்பணி செய்தவர்கள் பதித்த கல்வெட்டில் அமணீஸ்வரர் என்று மூர்த்தியின் பெயரைக் குறித்திருக்கிறார்கள். இப்பெயர்கள் சமணர் பெயர்களாகத் தோன்றுகின்றன. பிற்காலத்துப் புலவர் ஒருவர் சுவாமியின் பெயரை சிலேடையாகக் கொண்டு நிந்தாத் துதியில் பாடியிருக்கின்றார். அதன் கருத்து என்னவெனில், "அமணேசரே, உமது மச்சினன் சேலை திருடி வைத்துளான்; அதில் ஒன்றை எடுத்து உம் அம்மணத்தை மறைத்துக்கொள்ள உமக்கு உரிமை இல்லையோ?" என்பதாகும். இந்தப் பெயருடைய கோயில்கள் ஆனைமலைத்தொடரிலுள்ள திருமூர்த்திமலை மட்டும் பரவியிருப்பதாகக் கல்வெட்டு ஆராய்ச்சியாளர் தம் அறிக்கையில் கூறியுள்ளார். (பக்-118-9-1926-7).

இனி பொள்ளாச்சிக்குத் தெற்கே உள்ள ஆனைமலை என்ற ஊருக்கும் அதற்குத் தெற்கே உள்ள வேட்டைக் காரன் புதூர் என்ற ஊருக்கும் இடையில், வண்டிப் பாதைக்கு மேற்கே, ஒன்றிரண்டு கல் தொலைவில் ஒரு கரடுமுரடான சதுரக்குன்று ஒன்று தெரிகின்றது. இக்

குன்றின்பேரில் ஒன்றிரண்டு கோயில்கள் இருக்கின்றன. இக்குன்றைப் பொதுமக்கள் ஆனைமலைக்கரடு என்று வழங்குவார்கள். ஆனால் நாட்டுப் படத்தில் அக்குன்றின் பெயர் ஜைன்கல்துர்க்கம் என்று கூறப்பட்டுள்ளது. இந்தப் பெயரே இது ஜைன சம்பந்தம் கொண்டது என்று காட்டும்.

இந்த மலை நிலமட்டத்தின்மேல் 450-அடியும், கடல் மட்டத்தின்மேல் 1450-அடியும் உயர்ந்திருக்கின்றது. இம்மலைக்குப் படிக்கட்டுகள் உண்டு. ஆனால் ஓர் இடத்தில் அவைகள் சரிந்துபோயிருக்கின்றன. ஆகவே ஏறுவது கடினம். வெகு சாக்கிரதையாக ஏறவேண்டும். மலை உச்சியில் பெருமாள் கோயில் தென்படுகின்றது. அது சமீபகாலக் கோயில் எனத் தோன்றுகிறது. பெருமாளை சேனைக்கல்ராயப்பெருமாள் என்று பூசாரி சொன்னார். பெருமாளுக்கு இருபுறமும் இரண்டு தேவிகளும், நம்மாழ்வார், உடையவர் இருவர்களும் இருக்கின்றார்கள். 4, 5 கட்டடங்கள் இருக்கின்றன. மூர்த்திகள் இல்லை. பழைய அரசர்களின் கோட்டைச் சின்னங்கள் காணப்படுகின்றன. ஜேன்கல் என்பது ஜெயின் கல் என்று மாறிவிட்டதாகப் பூசாரி கூறுகிறார். ஜேன் என்கின்ற கன்னடச் சொல்லுக்குத் தேன் என்பது தமிழ்ப் பொருள். இந்தக் கரட்டில், தேன்ஈக்கள் கூண்டுகட்டியிருப்பதால் இப்பெயர் வந்ததாம். இம் மலைமேல் ஓர் இயற்கைக் குகையும், நீர்ச்சுனையும் உண்டு. பண்டைக் காலத்தில் இப்போதுள்ள பெருமாள் எழுந்தருளுவதற்கு முன் அங்கே சமண உருவம் இருந்திருக்கக் கூடும். பட்டயத்தில் பெருமாள் பெயர் இருப்பதாகப் பூசாரி கூறுகிறார்.

உடுமலைப்பேட்டை தாலூகாவில் அவ்வூருக்குத் தெற்கே 12 கல்லில் திருமூர்த்தி மலை என்ற பெயருடன் ஓர் அருமையான புனித இடம் இருக்கின்றது. இந்த இடத்திற்கு நூற்றுக்கணக்கான மக்கள், ஞாயிற்றுக் கிழமை தோறும் சென்று வழிபடுகிறார்கள். இங்கே ஒரு அழகான பள்ளத்தாக்கின் வழியாக ஒரு சிற்றாறு ஓடு கின்றது. பாறைகளின்மீது குதித்து ஓடும் நீர் மிகத் தூய்மையாக இருக்கும். சில இடங்களில் பாறைகளி லிருந்து நுரைகளைத் தள்ளிக்கொண்டு ஓடும். சில இடங்களில் நீர் தேங்கிக்கொண்டு கன்னங்கரேல் என்று தோன்றும். அங்கே அடிவாரத்திலிருந்து ஒரு கல் தொலைவுவரை, பாறைகளின்மீது ஏறிச் சென்றால் ஓர் அழகிய நீர்வீழ்ச்சி ஒன்று காணப்படும். அதற்குப்பின் ஓர் இயற்கைக்குகை உண்டு. அதில்இயற்கை உருவங்கள் சில இருக்கின்றன. நீர்வீழ்ச்சி அக்குகையை மறைத்துக் கொண்டு மேலே ஒரு பாறையிலிருந்து பாய்கிறது. அடி வாரத்திலோ, நீரோடையின் அருகு முற்றும் ஒரே அகன்ற பாறையாக இருக்கின்றது. அதற்கு ஒருபுறத்தில் ஏறத் தாழ 30-அடி குறுக்களவு கொண்ட ஓர் உருண்டைக் கற்பாறை நிற்கின்றது. அந்தப் பாறையின் கீழ்ப்பக்கத் தில் 15-அடிக்குமேலே ஓர் அருமையான உருவம் செதுக் கப்பட்டிருக்கிறது. அவ்வுருவம் தலைசாய்ந்து நிற்கிற படியால்-அப்பெரும்பாறை முன்னொருகாலத்தில் இருந்த நிலையில் இப்போது நில்லாமல் ஓரளவு சாய்ந்தோ அல் லது உருண்டோ வந்திருக்கவேண்டுமென்று எண்ண வேண்டியிருக்கின்றது. இந்த உருவம்தான் பொதுமக் கள் வழிபாடு செய்யும் திருமூர்த்தி உருவம் ஆகும்.

இம்மூர்த்தியின் உண்மை நிலை அறியாத பொது மக்கள் இதனைப் பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்

சமணப் பாறையும் அதன் முன் உள்ள கட்டடங்களும்



7. திருமூர்த்திமலை - கல்மண்டபம்



8. திருமூர்த்திமலை - கொடிக்கம்பம்



9. ஐவர்மலை—மலைக் காட்சி

10. ஐவர்மலை—சமணர் சிலைகள்

மூர்த்திகளின் உருவம் என்று எண்ணுகிறார்கள். இந்த வட்டாரத்து மக்கள் திரிமூர்த்தி என்றும், மும்மூர்த்தி என்றும் பெயரிட்டுக்கொள்ளுகிறார்கள். இது தற்கால மரபு. ஆனால் அந்தப் பாறையிலுள்ள உருவத்தைக் கூர்ந்துநோக்கினால் அது இந்து சமயத்துத் திரிமூர்த்திகள் அல்ல என்றும், சமணசமயத்துத் திருமூர்த்தி யென்றும் அறியலாம். பாறையிலுள்ள வடிவம் வீற்றிருக்கும் ஒரு தீர்த்தங்கரரின் வடிவம் என்றும், அவருடைய இருபுறங் களிலும் இரண்டு சாமரேந்திரர்கள் சாமரங்களை ஏந்தி வீசிக்கொண்டு இருக்கிறார்களென்றும் காட்டும்.

ஆகவே, அவ்வுருவம் தீட்டப்பட்ட காலத்தில் அந்த வட்டாரங்களில் சமண சமயம் செழிப்பாக இருந்து பின்னால் மறைந்திருக்க வேண்டுமென்று அவ்வுருவ நிலை அறிவிக்கின்றது.

மக்களுடைய பெயர்களில் திருமூர்த்தி ஐயர், திரு மூர்த்தி செட்டி என்று யாராவது எழுதினால் அதைக் காணும் பண்டிதர்கள் அது தப்பு என்று சொல்லி திரி மூர்த்தி ஐயர், திரிமூர்த்தி செட்டி என்று எழுதும்படிச் சொல்லுவார்கள். எந்த உச்சரிப்புச் சரியென்று பண்டிதர் கள் அறிந்துகொள்ளவில்லை. பாறையில் எழுந்தருளி யிருக்கும் உருவம் ஜைனத் திருமூர்த்தி என்றும், அது இந்துத் திரிமூர்த்தியல்ல என்றும் அறிந்தால் அவ்விதம் கூறமாட்டார்கள். சூளாமணியில் அருகக் கடவுளைப் பற்றிக் கூறும்போது,

"அணியாதும் ஒளிநிகழும் ஆரணங்கு திருமூர்த்தி
கணியாது முழுதுணர்ந்த கடவுளென் றறையுமே?"

"திருமறுவு வலன் அணிந்து திகழ்கின்ற திருமூர்த்தி
ஒருமறுவும் சிலையென்ப தொழியாமல் உணர்த்துமே!"

என்று பாடப்பட்டுள்ளது. அதுபோலவே சீவக சிந்தாமணியில் அருகக் கடவுளை,

"செம்பொன் வரைமேல் பசும்பொன்எழுத் திட்டதேபோல்
அம்பொன் பிதிர்வின் மறுஆயிரத் தெட்டணிந்து
வெம்பும் சுடரின் சுடரும் திருமூர்த்தி விண்ணோர்
அம்பொன்முடி மேல்அடித்தா மறைசென்னி வைப்பாம்"

என்றும் கடவுள் வணக்கம் கூறப்பட்டுள்ளது. இந்த மேற்கோள்களினால் சமணர்கள் தங்கள் மூர்த்திகளைத் திருமூர்த்தி யென்றே வழங்கினார்கள் என்று அறிய வேண்டும். இந்தக் கோயில் தலத்திலும் பாறையில் உருவப்படுத்தியிருக்கும் மூர்த்தியையும் சமணர்கள் திருமூர்த்தி யென்றே வழங்கியிருப்பார்கள். அங்கே சமண வழிபாடு அழிந்துபோய் இந்து சமயவழிபாடு தொடங்கிய போது திருமூர்த்தி என்றசொல் திரிமூர்த்தி என்று மாறியிருக்க வேண்டும்.

இந்த மாறுதலை அறியாத ஒரு தமிழ்ப் பண்டிதர் நாட்டில் வழங்கும் வழக்கத்தை ஒட்டி இந்தத் தலத்திற்கு ஒரு புராணம் பாடியபோது அனசூயை வரலாற்றைக் கூறி ஒரு சாபத்தால் மும்மூர்த்திகள் அவள் முன்னிலையில் குழந்தைகள் ஆன கதையை எழுதியிருக்கின்றார். இந்தச் செய்யுள்நூல் வேலாயுத பண்டிதர் அவர்களால் இயற்றப்பட்ட திருமூர்த்தித் தலபுராணமாகும்.

இவ்வித மாறுபாடுகள் வேறு இடங்களிலும் ஏற்பட்டிருக்கின்றன என்பார்கள். சைவத் திருமுறைகளில் கண்ட திரிச்சிராப்பள்ளி என்ற சொல் அதற்கு முந்தி திருச்சினப்பள்ளி யென்றே இருந்திருக்கவேண்டுமென்று சில ஆராய்ச்சியாளர் கூறுவர். திருச்சிக் கோட்டைப் பாறையில் சமணப்படுக்கைகள் இருப்பதும், பள்ளி

என்ற சமணச் சொல் ஊர்ப்பெயரொடு சேர்ந்திருப்பதும் சான்றாகக் கூறுவர்.

மேலும் திருமூர்த்தி மலையில் பாறைக்கோயிலுக்கு முன்னால் சமநிலப் பாறையில் ஒரு கல்வெட்டு ஒன்று கொட்டை எழுத்தில் இருக்கின்றது. அக் கல்வெட்டின் படி சுவாமியின் பெயர் அமணேசுர சுவாமி யென்றும், அந்த வட்டாரத்தின் பெயர் அமண சமுத்திரம் என்றும் கண்டிருக்கின்றது. இதில் அமண் என்ற சொல்லுக்கு ஜைனர் என்ற பொருள் என்றும், அச்சொல் ஸ்ரமண என்ற வடமொழியிலிருந்து வந்ததென்றும், ஜைன உருவத்திற்கு அம்மணசுவாமி அல்லது நிர்வாணமூர்த்தி என்ற பெயர் ஆதியிலிருந்த தென்றும், பின்னாலே இந்துமதத்தர்கள் அவ்வுருவத்தைக் கண்டு மும்மூர்த்தி என்ற பொருளில் திரிமூர்த்தி என்று பெயரிட்டு வழங்கினார்கள் என்றும் கல்வெட்டு ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள் (186. 1927). அந்தக் கல்வெட்டின்படி பரிதாபி வருஷம் கார்த்திகை மாதத்தில் தளி பாளையக்காரன் எத்துலப்ப நாய்க்கன் ஆண்ட காலத்தில், ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டதென்றும், அந்த ஒப்பந்தத்தின்படி அமணசமுத்திரத்தின் தலைவர்களின் குடும்பத்தில்நடக்கும் திருமணங்களில் அமணேசுர சுவாமிக்கு நாலுபொன் திருமணவரி கொடுக்க வேண்டும் என்றும் கண்டிருக்கின்றது.

அடுத்தாற்போலிருக்கும் தொம்பர் மலையில் உள்ள ஒரு கோயில் கல்வெட்டில் எத்துலப்ப நாயக்கனின் மனைவி 1793-ல் ஒரு கல் சாசனம் பொறித்திருக்கின்றாள். எத்துலப்ப நாய்க்கன் என்ற பெயர் ஒரு பட்டப் பெயராகையால், இரண்டாவது கல்வெட்டுக்கும், முதல் கல்வெட்டுக்கும் சம்பந்தம் உண்டோ என்பது ஐயம். திருமூர்த்தி மலைக்குச் சிறிது தூரத்தில் பாதையின் ஓரமாக

கணக்கற்ற மனிதச் சிலேகள் காணப்படுகின்றன. இச்சிலே களின் மத்தியில் ஓர் ஆடவனும் இருபுறங்களில் அவன் மனைவியரும் நிற்கும் நிலேயில் சிற்பிக்கப்பட்டுள்ளார்கள். அவ்வாறு 20 கற்சிலேகள் வரைக்கும் இருக்கின்றன. இத்தனே சான்றுகள் பிற இடங்களில் காண்பது அரிது. நுட்பமான ஆராய்ச்சி செய்யும்பட்சத்தில் தான் அமண சமுத்திரம் என்ற திருமூர்த்தி மலேயின் முழு வரலாறும் கிடைக்க முடியும்.

பொள்ளாச்சி வால்பாறைப் பாதையில் அடிவாரத்தில் ஆற்றைத் தாண்டினதும், ஆதாளி அம்மன் கோயில் என்ற ஒரு கோயில் இருக்கின்றது. அதற்கருகில் ஒரு பாறையில் இயற்கைக் குகை ஒன்று இருக்கின்றது. அக் குகைக்குள் சமணர்கள் தவம் செய்த படுக்கைகள் காணப்படுகின்றன. மற்ற சமணச் சின்னங்களு மிருக்கின்றன. இந்த இடம் சமண சமயத்தின் ஆதிக்கம் பெற்ற இடமாயிருக்கவேண்டும். ஆதாளி அம்மன் என்ற பெயரே சமணச்சார்பான பெயராய் இருக்கலாம். ஆதிநாதருடைய யக்ஷியின் உருவமாயிருந்து பின்னுல் கிராம தேவதையாக மாறியிருக்கக் கூடும். ஆனேமலேத் தொடரின் அடிவாரத்தில் பலவகைப்பட்ட சமணச் சின்னங்கள் காணப்படுவதை இங்குச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியிருக்கின்றது. அமண லிங்கம் என்ற பெயரால் பல கோயில்கள் பொள்ளாச்சி, உடுமலேப்பேட்டைத் தாலூகாக்களில் இருக்கின்றன என அறியவேண்டும்.

இனி ஐவர் மலேயைப் பற்றி ஆராய்வோம். மதுரை ஜில்லா, பழனி தாலூகா என்று தற்போது வழங்கும் பிரதேசமானது முற்காலத்தில் கொங்கு நாட்டு 24 நாடுகளில் ஒன்ருகிய வைகாவி நாடு என்ற பெயரால் வழங்கிவந்தது. அதனே ஆவினன்குடி நாடு

என்றும், வையாபுரி நாடென்றும் கூறுவர். இந்நாடு ஆமிராவதி ஆற்றிலிருந்து வராகமலை அல்லது கோடைக் கானல் மலைத்தொடர்ச்சி மட்டும் பரந்திருந்தது. இதில் பழனி, கலையமுத்தூர், கடத்தூர், கணியூர், கொழுமம் முதலிய ஊர்கள் உண்டு. கலயமுத்தூரில் பண்டைக் காலத்து உரோமானிய நாணயப் புதையல்கள் அகப்பட் டிருக்கின்றன. ஆகவே இந்நாடு மிகப் பழமை பொருந் திய நாடு என்று கூறவேண்டும். இந்நாட்டில் பழனியி லிருந்து 9-வது கல்லில் கொழுமம் செல்லும் பாதையில் ஐயம்பாளையத்திற்கு அருகில் ஐவர்மலை என்ற ஒரு மலை இருக்கின்றது. இப்பெயரைக் கொண்டு இம்மலையில் பஞ்சபாண்டவர்கள் வசித்ததாகக் கதை கூறுவர். அது பொருத்தமுடையதன்று. இம்மலையின் பண்டைப் பெயர் அயிரை என்பது. அப்பெயரே ஐவர் என்று மருவி விட்டதுபோலும். இம்மலையில் பாதிதூரம் ஏறினால் அங்கே சில இயற்கைக் குகைகள் இருக்கின்றன. அவை களுக்குள்ளே சமணர்கள் தவம் செய்த இடங்கள் இருக் கின்றன. அக்குகைகளுக்கு மேலே வரிசையாகத் தீர்த்தங் கரர்களுடைய திருவுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவ்வுருவங்களின் கீழே வட்டெழுத்திலும், தமிழிலும் சில கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவைகளை அரசாங்கத்தார் படியெடுத்திருக்கிறார்கள். (691 முதல் 705/195). அக்கல் வெட்டுக்களில் அடியிற்கண்ட பெயர் களைக் காண்கிறோம். அஜ்ஜநந்தி (692), இந்திரசேனன் (694), மல்லிசேனப் பெரியார் (697), பார்சுவபடாரர் (700), பெரும்பட்டியூர் பத்தினிகுரத்தியார் மாணாக்கி யான பூவணந்திக்குரத்தி (701, அயிரைமலை (702) என் பவைகள். மற்றொரு கல்வெட்டில் (705) வரகுண பாண்டியன் 8-வது ஆண்டு அதாவது சகம் 792-ல் குண

வீரக் குரவடிகள் மாணுக்கரான, சாந்திவீரக் குரவர் திருவயிரை மலையில், பார்சுவபடாரர், உருவத்தையும் யக்ஷிகள் உருவங்களையும் புதுப்பித்தார் என்று காண் கின்றோம். இக்கெல்வெட்டில் சோழநாடு, ஈழநாடு, தொண்டைநாடு வென்று, இடவையிலும், வேம்பிலிலும் எதிரிகளைத் தோற்கடித்த வரகுண பாண்டியனுடைய ஆட்சிக்காலம் 784-ல் தொடங்கியது என்று அறிகின் றோம். ஆகவே 8-வது நூற்றாண்டிலேயே அயிரை மலை யிலே சமணர்களுடைய ஆதிக்கம் செழிப்புடன் விளங் கிற்று என்று அறியலாம்.

இம்மலையில் தற்போது கணக்கில்லாத முறையில் பண்டைக் கலைகளுக்குத் தீங்குகள் விளைவிக்கப்படுகின் றன. பண்டாரங்களும், பூசாரிகளும் அங்கே சென்று குகைகளையெல்லாம் மண்சுவர் வைத்துக்கட்டி சந்நியாசி மடங்களாக்கியும் சமண உருவங்களுக்கும் கல்வெட்டுக் களுக்கும் சுண்ணும்பு பூசிக்கெடுத்தும் அவலட்சணமான கட்டிடங்களை எழுப்பி இந்து சமய உருவங்களை வைத் தும் பணம் பெறுவதற்காகப் பலவித மாறுதல்களைச் செய்து வருகிறார்கள். சரித்திர உண்மையை விரும்புகிற மக்கள் இச்செயல்களை வெறுப்பார்கள்.

மேலும், இந்த அயிரைமலை சங்கத்து நூல்களில் பதிற்றுப்பத்தில் ஆறுமுறை குறிக்கப்பட்டுள்ளது. மூன் றாம்பத்தில் பாலைக்கௌதமனார் இருமுறையும் (செய்யுள் 21ம் பதிகமும்), கபிலர் ஏழாம்பத்தில் ஒருமுறையும், (செ. 70), அரிசில் கிழார் 8-ம் பத்தில் ஒரு முறையும் (செ. 79), பெருங்குன்றூர்க்கிழார் 9-ம் பத்தில் இரு முறையும் (செ. 88) கூறியுள்ளார்கள். அயிரையின் பரப்பைப்பற்றி 'அயிரைபரை', 'அயிரை பரவியும்' என்றும் அயிரையின் நிலைத்த தன்மையைக் குறித்து

'அயிரை நிலைஇ' என்றும், அயிரை ஒரு நெடிய குன்று என்பதைக் குறித்து 'அயிரை நெடுவரை', 'நெடுவரை அயிரை' என்றும் கூறியிருக்கின்றனர். அரசனை வாழ்த்தும்போது 'அயிரை நெடுவரையைப் போன்று வாழி' என்று வாழ்த்துகையில் அவ்வரையின் பரந்த நிலைத்த நெடிய தன்மைகள் உவமைகளாக எடுத்தாளப்பட்டன. பதிற்றுப்பத்து என்பது சேரமன்னர்களைப் பெரும்புலவர்கள் பாடின வாழ்த்துச் செய்யுட்களைக்கொண்டது. அதனாலே அவர்கள் தங்கள் நாட்டு மலையின் பெருமைகண்டு அதனை உவமைப்படுத்திக் கூறினார்கள். ஆகவே, சேரர்களுக்கு அயிரைமலை ஒரு சிறந்த மலையாக இருந்தது எனலாம். அயிரை மலைப்பிரதேசமும் சங்கத்தார் நாளில் சேரருக்குச் சேர்ந்தது எனவும் கூறவேண்டும் அல்லவா!

கொங்கு நாட்டின் தென்கிழக்குப் பகுதி

கொங்கு நாட்டில் தென் கிழக்கில் உள்ள பகுதி தற்போது கரூர் தாலூகாவைச் சேர்ந்தது. இதில் அடங்கிய பண்டைய நாடுகளின் பெயர், கீழங்கநாடு, வெங்கால நாடு என்பவைகள். கீழங்கநாடு என்பது புகலியூர், வாங்கல், நெரூர் முதலிய ஊர்களைச் சுற்றியுள்ள பகுதி. வெங்காலநாடு என்பது, கோயம்பள்ளி முதல் வெஞ்சமாக் கூடல்வரை உள்ள பிரதேசமாகும். அதில் உள்ளது கரூர் என்ற தலைநகர். இந்த நாடுகளில் மலையாக உள்ளது ஒன்றே ஒன்றுதான். அது கீழங்க நாட்டில் புகலியூர் என்ற புகைவண்டி நிலையத்திற்கு வடக்கேயுள்ள வேலாயுதம்பாளைய மலை. இம்மலையின் பழைய பெயர் ஆறுநாட்டார் மலை என்பது. இம்மலை காவேரி ஆற்றிற்குத்

தென்புறத்தில் உள்ளது. மலைமேல் முருகக் கடவுள் கோயில் ஒன்று இருக்கின்றது. அவ்வாலயத்தைச் சுற்றிச் செல்லுகையில் குடைந்த பகுதிகள் சிலபாறையில் தெரிகின்றன. அதில் சமணர்களுடைய பீடங்கள் காணப்படுகின்றன. அங்கே கல்வெட்டுச் சான்றுகளும் இருக்கின்றன. அவை பழைய தமிழில் பொறிக்கப்பட்டுள்ளன. சில சொற்களே தெரிகின்றன. ஆதி, வஞ்சி என்ற சொற்கள் தெரிகின்றன. இங்கே தவம் செய்த சமணக் குரவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருக்கவேண்டும்.

பின்னுரை

இதுகாறும் கொங்குநாட்டில் எங்கெந்தப் பகுதிகளில் சமண சமயம் செழித்திருந்தது என்பதைப் பற்றிக் கூறினோம். அவ்வாறு கூறும்போது எங்கெந்த இடங்களில் தற்காலத்திலும் சமணச் சின்னங்கள் இருக்கின்றன என்றும் கூறினோம். மேலும் அச்சின்னங்கள் எந்த நிலையில் இருக்கின்றன என்றும் கூறினோம். பொதுவாகப் பார்க்குமிடத்துக் கொங்கு மண்டலத்தில் நடுப்பகுதியில் சமண சமயம் செழித்து வந்ததென்று கூறப்பட்டது. அங்க நடுப்பகுதியில் உள்ள விஜயமங்கலத்தைத் தலைமைத்தானமாக வைத்துக்கொண்டு சமணப் பெரியார்கள் சுற்று இடங்களில் சமயத்தைப் பரப்பினார்கள் என்று அறியலாம். அவ்வாறு பரப்பின சுற்று இடங்கள் தென்மேற்கு, தென்கிழக்குப் பகுதிகள் ஆகும். அந்தந்த இடங்களில் தற்போதுள்ள ஆலயச் சின்னங்கள், உருவச் சின்னங்கள், கல்வெட்டுச் சான்றுகள் முதலியவற்றையும் கூறினோம். மேலும் நடுப்பகுதியில் தற்போது வசித்துவரும் சில சமயக் குடும்பங்களின் விவரங்களையும் எழுதியிருக்கின்றோம்.

மேலே கண்ட சமயப் பரப்பானது தலைக்காட்டுக் கங்க வம்சத்தார் காலம் தொட்டுங்கி கொங்கு சோழர் காலம் வரைக்கும் பல நூற்றாண்டுகளாக வளர்ந்திருக்க வேண்டும். கங்க வம்சத்தார்களில் துர்வினீதன் காலம் அதாவது 5, 6வது நூற்றாண்டு முதற்கொண்டு கொங்கு சோழர் ஆட்சி இறுதியாக அதாவது பதின் மூன்றாவது நூற்றாண்டு வரைக்கும் சமண சமயம் கொங்கு நாட்டில் நிலைத்திருக்கவேண்டும். இச்செய்திகள் கல்வெட்டுச் சான்றுகளின் மூலமாக அறியப்படுகின்றன.

மேலும் சமண சமயம், சமயப் பெருக்கில் மட்டும் சிந்தை கொள்ளவில்லை. நாட்டினுடைய பண்பாட்டை வளர்த்துவதற்கும் முற்பட்டிருக்கின்றது. கல்விப் பெருக்கிலும், காவியங்களை இயற்றி இலக்கியத்தைப் பெருக்குவதிலும் நாட்டின் நாகரீகத்தை உயர்த்தியிருக்கின்றது. ஒப்பற்ற இலக்கியமாகிய பெருங்கதையை தமிழ்நாட்டிற்குக் கொடுத்திருக்கின்றது. மாணவர்கள் எளிதில் உணர்ந்துகொள்ளும் முறையில் நன்னூல் என்னும் தெளிந்த இலக்கணத்தைத் தந்திருக்கின்றது. வச்சணந்தி மாலையென்ற மற்றொரு இலக்கணத்தையும் தந்திருக்கின்றது.

பேருரைகளில் மிகச் சிறந்த உரையாகிய புகழ் பெற்ற அடியார்க்கு நல்லார் உரையை வெளியிட்டிருக்கின்றது. இவ்வுரை இல்லாவிடில் பண்டைத் தமிழரின் நற்கலைகளை நாம் அறிந்து கொள்ள வகையேயில்லை. இறுதியாகக் கொங்குநாட்டு வரலாற்று நூலாகிய கொங்குமண்டல சதகத்தையும் சமண சமயமே அளித்திருக்கின்றது. இவ்வாறு பலவகைப்பட்ட முறைகளிலும் கொங்கு நாட்டுப் பண்பாட்டைச் சமணசமயமானது வளர்த்திருக்கின்றது என அறியலாம்.

மேலும் மற்றச் சமயங்களாகிய சைவமும் வைணவமும் வெகு பண்டைக்காலம் முதற்கொண்டு நாட்டில் விளங்கி வந்திருந்தாலும், அவைகள் கோயில்களுடைய எண்ணிக்கைகளை மிகுதிப்படுத்தினவே யன்றி இலக்கியப் பண்பாட்டை சமண சமயத்தைப்போல அத்தனை மிகுதியாகச் செய்யவில்லை. மக்களின் எண்ணிக்கையைப் பார்த்தாலும் புலவர்களின் எண்ணிக்கையிலும் சைவமும் வைணவமும் ஒப்பு உவமை இல்லாமல் பெருகியிருக்கின்றன. சமணமோ அந்த வகையில்

நூறுயிரத்தில் ஒரு பங்கும் இல்லை. அப்படியிருந்தும், இயற்றியிருக்கும் நூல்களைப் பார்க்கும் அளவில் சமணம் மிகவும் உயர்ந்த நிலையில் இருந்ததென்று அறியவேண்டும். சதவிகிதம் கணக்குப் போட்டுப் பார்த்தாலும் சமண ஆதிக்கம் மிகுந்தே இருக்கின்றது. வைதீக சமயங்களில் பெருங்கதை போன்ற ஓர் இலக்கியமோ, நன்னூல் போன்ற ஓர் இலக்கணமோ, அடியார்க்கு நல்லார் உரைபோன்ற ஓர் உரையோ, கொங்கு மண்டல சதகம் போன்ற ஒரு வரலாற்றுப் பிரபந்தமோ இயற்றப்படவில்லையென்று அறியவேண்டும். ஆகவே, கொங்குமண்டலத்திற்குச் சமண சமயம் செய்திருக்கும் தொண்டு வேறு எதுவும் செய்யவில்லை என்பது திண்ணம்.

இந்த அரிய செய்திகளை அறிந்தபின் நாட்டுமக்கள் நன்றியைக் காட்டும் நெறியில் இருக்கவேண்டுமென்றால் ஏற்கனவேயிருக்கும் சமணச் சின்னங்கள் அழிந்து போகாதபடி பாதுகாத்து வைப்பதே தகுந்த கடமை அல்லவா? நமது நாட்டு மக்கள் அந்தக் கடமையை உணர்ந்து அச்சின்னங்களைப் போற்றுவார்களாக.

—

பொருள் அகராதி

ஆதிநாதர்—ரிஷபதேவர்	...	15
ஆபூ மலை—தில்வாரா	...	33
ஆர்க்காட்டில் சமணர்	...	48, 49
ஆனைமலைக் கரடு	...	100
ஐவர்மலை—அயிரைமலை	...	107
கல்லும் பேசுகிறது	...	3
களந்தை	...	99
கார்க்கல்	...	42
கார்மேகக் கவிஞர்	...	1, 76-78
காவியங்கள்	...	45
கிரிநார்	...	34
குடை கோயில்கள்	...	49
குவாலியர்	...	36
கொங்குநாடு—பரப்பு	...	19
,, பழக்க வழக்கங்கள்	...	12
,, சான்றுகள்	...	9
,, ஜைனம்	...	55
,, நாடும் ஊரும்	...	46
கொங்கு மண்டல சதகம்	...	76, 95-97
சக்கரவர்த்தி நயினார்	...	3
சந்திர குப்தர்	...	38
சமண அர்ச்சகர்	...	1
,, ஆதிக்கம்	...	14, 15
,, நிலையங்கள்	...	70
சாமுண்டராயன் கோமடேசுவரர்	...	40
சிந்தாமணி	...	104
சிரவண பெளகுளம்	...	37, 40
சீனாபுரம்	...	91
சூளாமணி	...	103

சோழ நாட்டில் சமணம் ... 50
ஜைனக் கொள்கைகள் ... 20
,, நூல்கள் ... 43
,, நூல்சாரம் ... 22
தமிழ்நாடு—எல்லை ... 5
,, பிரிவுகள் ... 6
,, ஜைனம் ... 44, 46
தலைக்காட்டு கங்கர் ... 39
திகம்பரர், சுவேதாம்பரர் ... 17
திங்களூர் ... 93
திருமூர்த்தி ... 3, 103, 104
,, மலை ... 102
தீர்த்தங்கரர் ... 15, 21
துறவிகள்—ஒழுக்கம் முதலியன ... 25
தெக்கிணத்தில் ஜைனம் ... 36
தென்பாண்டியில் ஜைனம் ... 53
நெட்டைக் கோபுரம் ... 2, 79
பத்திரபாகு ... 37
பவணந்தி ... 1, 96
பாண்டிய நாட்டில் ஜைனம் ... 50
பாதாமி ... 35
பாரசவநாதர் ... 15
,, மலை ... 35
பாலி தாணு ... 34
புகழி மலை ... 109
புனித இடங்கள் ... 30
பூந்துறை ... 90
பெருங்கதை—கொங்குவேள் ... 40
,, பெருமை ... 59
,, மேற்கோள்கள் ... 60–69
மாமல்லபுரம் ... 48

வடநாட்டில் ஜைனம்	...	29
வர்த்தமான மகாவீரர்	...	16
விஜயமங்கலம்—ஊர்	...	1
,, விவரம்	...	73-86
விரதங்கள்	...	17
வெள்ளோடு	...	89
ஸ்ரீபால்	...	3
ஸ்ரீ புராணம்	...	18

15-10-96
A
-92 30/10/98